

கல்கி
KALKI
4.2.1962
30
காசு

உங்களுடைய தேய்ந்த டயர்களை
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸில்
ரீட்ரெட் செய்யுங்கள்

டிவிஎஸ்ஸில் தேய்ந்த டயர்களைப் புதுப்பித்தால் அவை புது டயர்களைப் போலவே நீடித்து உழைக்கும். ஏனெனில்



மிக உயர்ந்த கூடுதலான கனமுள்ள காமெல் - பாக் டிரெட் ரப்பரையே டிவிஎஸ் உபயோகிக்கிறார்கள்



டிவிஎஸ் குளிர்சாதன அறைகளில் காமெல்-பாக் உலராமலிருக்கின்றன. ஆகையால் உழைப்பு நீடிக்கிறது



ரீட்ரெடிங் செய்வது எளிதன்று. அது நிபுணர்களின் வேலை. டிவிஎஸ் தொழிற்சாலையில் தேய்ந்து போன டயர்களை ரீட்ரெடிங் செய்வதற்கு நவீன நுண்ணிய இயந்திரங்களை அமைத்துள்ளார்கள். தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அவற்றை இயக்குகின்றனர். விசேஷ "பாண்டிங்" முறையினால் டிவிஎஸ்ஸில் புதுப்பிக்கப் பெறும் டயர்கள் புத்துயிர் பெறுகின்றன. ஒவ்வொரு டிரக் டயரையும்—உரிய காலத்தில் செய்தால்—மூன்று முறை ரீட்ரெட் செய்யலாம்.



ரீட்ரெட் பணியில் சிறந்தவர்கள்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
(டி.வி.எஸ். ஸ்தாபனம்)

TVS

புதுக்கோட்டை - மதுரை
கோயமுத்தூர் - பெங்களூர்

JWT/SI-RD-1441a

ஆனந்தமான வாழ்க்கைக்கு



காட்பரீஸ் சாக்கலேட்...

மிட்டாய்
மட்டுமல்ல-
ஒரு
உணவும்கூட





வெலிங்டன் — பிராட்வே — சயானி
பிப்ரவரி 2உ முதல்.... சென்னை மற்றும் தென்னடெங்கும்
ஹோமி வாடியா
அளிக்கும்...
சம்பூர்ண
ராமாயணம்
முழுநீள கேவா கலர் (தமிழ்)
பாபுபாய் மிஸ்திரி
தமிழ்த்தயாரிப்பு
பிலிம் சென்டர்
ஆரூர்தாஸ்
குயிலன்
விஜயபாஸ்கர்
கனுதேசாய்
FOR TAMILNAD & MALABAR ✦ ℅ MANI & CO., MADRAS-2.

பிலவ, தை 22

கல்கி

பிப்ரவரி 4, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகையிலையின் வரலாறு... 3·

புகையிலையைப்பற்றிய அறிவும் உபயோகமும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும், பிற நாடுகளிலும் பரவியது. உருளைக் கிழங்கு, தக்காளி இனத்தைச் சேர்ந்த அதனை 1508-ல் போர்ச்சுக்கேசியர் நம் நாட்டிற்குக் கொணர்ந்தனர். அதுமுதல் புகையிலை இந்திய மண் மீது தழைத்து வந்துள்ளது. இந்தியாவில் இன்று புகையிலை உற்பத்திக்குப் பிரதானமான மாகாணங்கள்: பம்பாய், பீகார், ஆந்திரம், வங்காளம், சென்னை, மைசூர் ஆகியவையே.




பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.
பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.703 TM. Greens' Advtg.



மலர் 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 27

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கலாமா?

மக்களுடைய சுதந்திரத்தைப் பறிக்காமல் குறைந்த அளவில் அதிகாரம் செலுத்தும் அரசாங்கமே உண்மையான அரசாங்கமாகும் என்பதுதான் சுதந்திரக் கட்சியின் ஆதாரமான கொள்கை. அந்தக் கட்சி சுதந்திரக் கட்சி என்று பெயர் பெற்றிருப்பதற்கும் இதுவே காரணம்.

தனி மனிதர்களின் சுதந்திர வாழ்வை மதிக்கும் இந்த உயரிய கருத்தைப் புரிந்துகொள்ளாமல் — அல்லது புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளப் பிரியப் படாமல் — இந்தக் கொள்கையை மனம் போனவாறு திரித்து மக்களை மயக்குகிறது காங்கிரஸ் கட்சி. 'சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் அப்போது தொழிலதிபர்களும், பண்ணையார்களும் பூரண சுதந்திரம் பெறுவார்கள். அவர்கள் வைத்ததே சட்டமாகும். எனவே மக்கள் சுதந்திரம் என்று சுதந்திரக் கட்சி கூறிவருவது உண்மையில் எளியாரை வலியார் வாட்டும் சுதந்திரமாகவே இருக்கும்' என்று காங்கிரஸ்காரர்கள் தேர்தல் கூட்டங்களில் பேசி வருகிறார்கள். 'அதிகாரமில்லாத சர்க்கார் என்று உண்டா ? அதைக் காட்டிலும் சர்க்காரே இல்லாதிருக்கலாமே!' என்று இவர்கள் கூறுகிறார்கள்.

அரசாங்கத்துக்கு நாட்டு வாழ்வில் உள்ள பங்கையும், கடமையையும் இவர்கள் தெரிந்துகொள்ளவே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். சுதந்திரக் கட்சி நாட்டு வாழ்க்கை முழுவதையும் மக்களின் கையிலேயே விட்டுவிட்டு — அதாவது காங்கிரஸ் கூறுவது போல் வலியார் எளியாரை வாட்டுமாறு விட்டு விட்டு — பொறுப்பற்றிருக்கும் சர்க்காரைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை. சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் ஒரு கண்ணோட்டம் செலுத்தினாலே இந்த உண்மை புலப்படும். விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் நலன், பொதுச் சேவை, கல்வி, திட்டமிடுதல், வரிவிதிப்பு— இப்படியாகக் காங்கிரஸ் ஆட்சி எந்தெந்தத் துறைகளில் அதிகாரம் செலுத்தி வருகிறதோ அவ்வளவு துறைகளிலும் சர்க்காருக்குத் திட்டவட்டமான பொறுப்புக்கள் இருப்பதைச் சுதந்திரக் கட்சியும் ஒப்புக் கொள்கிறது. சகல அம்சங்களிலும் அரசாங்கம் ஆற்ற வேண்டிய கடமைகளை அது நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றை வரையறுத்திருக்கிறது.

மக்கள் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும். அதுதான் அரசாங்கம் எந்த அளவுக்கு அதிகாரம் பெற்றிருக்கிறது, அந்த அதிகாரத்தை எந்த முறையில் பிரயோகிக்கிறது என்பது.

சர்க்கார் வரம்பற்ற அதிகாரத்தை உபயோகித்து அதன் மூலம் மக்களைச் சுதந்திரமாக வாழ முடியாமல் செய்து எல்லாவற்றுக்கும் அவர்கள் அரசாங்கத்தை எதிர் பார்க்கும்படி செய்யும் முறையைக் காங்கிரஸ் ஆட்சி ஆதரித்து வருகிறது. இதைக் காந்தியடிகள் எப்போதும் கண்டித்தே வந்தார் என்பதை அனைவரும் அறிவார்கள்.

சுதந்திரக் கட்சியோ மக்கள் சுதந்திரமாக நடமாடவும், தொழிலும் செய்ய உரிமை அளித்து, ஆனால் இந்தச் சுதந்திரம் துஷ்பிரயோகமாகாமல் கண்காணிப்பதற்கு மட்டுமே அரசாங்கத்தின் அதிகாரம் அமைய வேண்டும் என்கிறது. காங்கிரஸ் கட்சி சுதந்திரத்தைப் பறித்து அதிகாரம் செலுத்துவதால்தான், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் பிரத்தியேக உரிமைகளும் சலுகைகளும் வழங்க முடிகிறது. இதனாலேயே வலியார் எளியாரை வாட்டும் நிலையையும் உண்டாக்கி யிருக்கிறது. பணக்காரக் கூட்டங்கள் இன்னும் அதிகச் செல்வம் திரட்டவும் வழி செய்து வருகிறது காங்கிரஸ்.

எல்லாத் துறைகளிலுமே மக்கள் சுதந்திரம் என்பது ஒரு சாராரை மற்றொரு சாரார் கொடுமைக்கு உள்ளாக்கும் ஒரு முறையாகி விடக் கூடுமாதலால் அவை எல்லாவற்றிலும் சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு என்பதைச் சுதந்திரக் கட்சி உணர்ந்து, சர்க்கார் எடுத்துக் கொள்ளும் அதிகாரமானது ஒரு சாராரின் சுதந்திரம் மற்றோரின் சுதந்திரத்தை அபகரிக்காமல் பார்த்துக் கொள்வதோடு முடிவுற வேண்டும் என்கிறது. காங்கிரஸ் கட்சியானது அதிகாரம் செலுத்தும் துறைகளை யெல்லாம் சர்க்காரின் ஏகபோகச் சொத்துப் போலாக்கி, அவற்றை எப்படி வேண்டுமானாலும் ஆட்டிவைக்கலாம் என்று எண்ணுகிறது.

கண்கூடான சில உதாரணங்களால் இதை விளக்கலாம். காங்கிரஸ் கட்சியானது அதிகார பலத்தைக் கொண்டு நிலத்தை யெல்லாம் கூட்டுறவு என்ற பெயரில் சர்க்கார் சொத்தாக்கிவிடப் பார்க்கிறது. இதனால் விவசாயம் தெரியாதவர்களின் நாட்டாண்மையும், ஊழலும் தலையெடுக்கும்; அக்கறையின்மையால் உற்பத்தி குறையும் என்பதெல்லாம் ஒருபுறமிருக்க மக்களின் சொத்துரிமைச் சுதந்திரம் பறிமுதலாகி விடுகிறது. மேலும் சொத்தற்ற உழவர்களும் புதிதாக நிலச் சுதந்திரம் எதுவும் பெறாமல், சர்க்காரின் கூலியாளாகத் தான் மாறுகிறார்கள். சுதந்திரக் கட்சி இந்தச் சொத்துரிமைச் சுதந்திரத்தைத் தீண்டாது. ஆனால் உரிமையாளர்கள் விவசாயத் தொழிலாளர்களைச் சுரண்ட முடியாதபடி அதிகாரத்தை உபயோகிக்கும். அதோடு விவசாயத் தொழிலாளர்களுக்கு உப – தொழில்களை அமைத்துக் கொடுத்து இரட்சிக்கும். உரிமையாளருக்கும் விதை, உரம், உழவுக் கருவிகள் முதலியன வழங்கும். இதனால் இப்போதுள்ள சுதந்திர வாழ்வு ஒரு விதத்திலும் பங்கமுறாமலேயே உற்பத்தி பெருகும்; வகுப்புத் துவேஷங்கள் மறைந்து அன்பும், ஒற்றுமையும் வளரும்.

தொழில் துறையிலும் இதே போலத் தான். காங்கிரஸ் ஆட்சியின் கீழ் பெர்மிட்டும், லைசென்சும், கோட்டாவும் பெற்றே தொழில் நடத்த வேண்டியிருப்பதால் மக்களின் முதலீட்டுச் சுதந்திரத்துடன் இஷ்டப்படி விளையாடும் அதிகாரத்தைக் காங்கிரஸ் பெற்றிருக்கிறது. அதைவிட முக்கியமாக, இந்த பெர்மிட் லைசென்ஸ் பெறும் தனியார் துறையையும் தன் மனத்துக்கேற்றவாறு சுருங்கச் செய்து பொதுத் துறைத் தொழிலை விஸ்தரிப்பதற்காக அது அதிகாரத்தைச் செலுத்துகிறது. காங்கிரஸ் அதிகார அமைப்பினால் தொழில்கள் தேசியமயமாகி உரிமைச் சுதந்திரம் அபகரிக்கப்பட்டு, அக்கறையின்மையும் உற்பத்திக் குறைவுமே ஏற்படும்.


இருக்கும் தொழிலதிபர்களுக்கு ஊக்கமளிப்பதோடு, சிறு முதலீடுகளைப் பெருக்கி அதன் மூலம் தொழிலாளரும் மூலதனத்தில் உரிமை பெறும் புதுச் சொத்துச் சுதந்திரத்தை உண்டாக்கித் தருவதற்கு சுதந்திரக் கட்சி தன் அதிகாரத்தை உபயோகிக்கும். முதலாளிகள் தொழிலாளிகள் இருவரையும் அடிமைகளாகக் கருதுவதற்கே காங்கிரஸ் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்கிறது. முதலாளி, தொழிலாளி இருவரும் ஒரேவிதமான முதலீட்டு உரிமைச் சுதந்திரம் பெற்று விடுதலை வாழ்வு காணவே சுதந்திரக் கட்சியின் அதிகாரம் பயனாகும்.

இதைப் போலவே கல்வித் துறையிலும். பாட புத்தகங்களைச் சர்க்காரே பிரசுரிப்பதுடன் பள்ளிகளைச் சர்க்காரே நடத்துவதன் மூலம் வருங்காலப் பிரஜைகளைச் சர்க்காரின் சர்வாதிகாரப் பசிக்கு விருந்தாக்கிக் கொள்ள எண்ணுகிறது காங்கிரஸ். சுதந்திரக் கட்சியோ தனியார்ப் பள்ளிகளுக்கு மானியம் அளித்து அவை லௌகிகக் கல்வியோடு, நன்னெறிகளையும், சமயத்தையும் போதிக்க வழி செய்யும். ஆனால் பள்ளி ஸ்தாபகர்கள் தங்கள் தங்கள் மதக் கோட்பாடுகளைப் பிற வகுப்பைச் சேர்ந்த மாணவர் மீது திணிக்காமல் கட்டுப்படுத்தும் மேற்பார்வையிடும் அதிகாரத்தை அது நிச்சயமாக உபயோகித்துச் சிறுபான்மையினருக்குக் காப்பளிக்கும்.

ஒவ்வோர் இனத்திலும் இவ்வாறே சுதந்திரக் கட்சியானது சர்க்கார் அதிகாரத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கும், காங்கிரஸின் கருத்துக்குமுள்ள மாறுபாட்டைக் காணலாம். அதிகாரம் என்றால் சர்வாதிகாரம் என்று எண்ணுகிறது காங்கிரஸ். அரசாங்க அதிகாரம் என்பது மக்களில் ஒரு பிரிவினரின் கை வலுத்து விடாமல் பார்த்துக் கொள்வதற்கே என்று உறுதியாகக் கருதுகிறது சுதந்திரக் கட்சி. சர்க்காரைக்

குடியானவர்களே, உங்களுக்குத் தெரியுமா? உங்கள் நிலத்துக்கு நில வரி இருக்கக் கூடாது என்று போராடுகிறது சுதந்திரக் கட்சி. அதை ஆதரியுங்கள்!

சொக்குப் பொடி தூவுகிறார் !



கைப்பற்றிய கட்சி சர்வ சுதந்திரமும் பெறுவதற்கே வித்தூன்றி வருகிறது காங்கிரஸ். அதிகாரிகளின் தொல்லைகளையொழித்து மக்கள் சுதந்திரம்பெறுவதற்காகப் பாடுபடுகிறது சுதந்திரக் கட்சி.

'தனி மனிதனின் சுதந்திரம் சர்க்கார் கையிலிருந்து கிடைக்கும் உரிமையல்ல; அது ஆண்டவன் அவர்களுக்கு அளித்தது' என்றார் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்கள்.

இன்பச் சுதந்திரம் நின்
இன்னருளால் பெற்றதன்றோ ?
அன்பற்ற மாக்கள் அதைப்
பறித்தாற் காவாயோ ?

என்று பாரதியாரும் அன்றே சர்வேசனிடம் முறையிட்டார். நாமும் ஆண்டவனை நம்பிச் சுதந்திரவாழ்வுக்குப் பாதை அமைத்துக் கொள்வோம். நம் விடுதலைக்கு உலை வைத்து விட்டு, காரிய சாத்தியமில்லாத பொருளாதார முன்னேற்றத்தைத் திட்டம் திட்டம் என்கிறார்கள்.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்
வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ ?

மக்களின் சுதந்திரம் பறிமுதலான சுயராஜ்யம் கண்ணிழந்தவன் பெற்ற சித்திரமேயாகும்.

காங்கிரஸ் ஆட்சியில் 1

வரி போடுவதெல்லாம் திட்டங்களுக்காகத்தான் என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். இது ஒரு பெரும் பொய்யாகும். திட்டங்களுக்கு என்று சொல்லிச் சர்க்கார் விதித்துள்ள வரிகளில் பெரும் பகுதி இந்தத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுவதே இல்லை. இரண்டாம் திட்டத்துக்கு எனப் புதிதாக 168 கோடி ரூபாய்க்கு வரி போடப் போவதாகவும், இந்தக் காலத்தில் பட்ஜெட் உபரிகளிலிருந்து 252 கோடி ரூபாய் கிடைக்குமென்றும் இந்த 420 கோடி ரூபாயையும் திட்டத்துக்கே செலவிடப் போகிறோம் என்றும் ஆட்சியாளர்கள் கூறினார்கள். உண்மையிலோ சுமார் 692கோடிரூபாய்க்கு வரிகளை ஏற்றியது சர்க்கார். பட்ஜெட் உபரியும் சுமார் 497 கோடி ரூபாய் கிடைத்தது. இந்தச் சுமார் 1200 கோடி ரூபாயையும் அது உண்மையில் திட்டத்துக்குத் தானே செலவிட்டிருக்க வேண்டும்? ஆனால் இதில் 439 கோடி ரூபாய் மட்டுமே திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது. எனவே இனிமேல் காங்கிரஸ்காரர்கள் வரிகளை உயர்த்துவது திட்ட வேலைகளுக்காகத்தான் என்று சொன்னால் அதற்குச் செவிசாய்க்காதீர்கள்.

ஈனத்தனத்திலும் கோழைத்தனமா?

காங்கிரஸ் கட்சிக்குப் பிரசாரம் செய்யும்வகையில் சர்க்கார் தபால் தலை வெளியிட்டது பற்றிச் சென்ற இதழில் எழுதும் போது ஆத்திரத்துடன் ஓர் ஆச்சரியமும் கலந்திருந்தது. செய்தது தப்புக் காரியமானாலும் அதை இவ்வளவு ஒளிவு மறைவின்றிச் சர்க்காரே செய்து விட்டதல்லவா என்பதற்குத்தான் இந்த வியப்பு. தேசக்கொடி போலவே தோன்றும் கட்சிக்கொடியை வைத்துக்கொண்டு மக்களைப் பேதலிக்கச் செய்துவரும் காங்கிரஸ், இவ்விஷயத்தில் மட்டும் இவ்வளவு வெளிப்படையாக அரசாங்கத்தைக் கட்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டது ஓர் ஆச்சரியமாகவே தோன்றியது. அந்த வியப்பு இப்போது நீங்கிவிட்டது.

தபால் மந்திரி ஸ்ரீ சுப்பராயன் அவர்களும், தபால் இலாகா அதிகாரிகளும் மேற்படி தபால் தலைக்கும் காங்கிரசுக்கும் ஏதும் தொடர்பு கிடையாது; காங்கரேஜ் என்று அதில் பொறித்துள்ள வாசகம் குஜராத்தைச் சேர்ந்த ஒரு வகை மாட்டின் பெயரே யாகும்; இதில் உள்ள மாட்டின் கொம்புக்கும், காங்கிரஸ் சின்னத்திலுள்ள மாட்டின் கொம்புக்கும் வித்தியாசம் உண்டு என்றெல்லாம் பலப்பல 'சமாதானம்' கூறியிருக்கிறார்கள். திட்டப் பிரசாரத்தை யொட்டி விவசாயத்தின் பெருமையை விளக்குவதற்காக 1955ம் ஆண்டு குடியரசு தினத்தன்று வெளியிட்ட தபால் தலையே இது; காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பில்லாதது என்று வேறு சொல்லியிருக்கிறார்கள்.

எத்தனையோ மாட்டினங்கள் இருக்க இந்தக் 'காங்கரேஜ்' மாட்டுக்கு மட்டும் ஏன் யோகம் அடித்தது என்றுதான் புரிய வில்லை. 'இங்கிலீஷ்' என்பதை 'அங்கரேஜி' என்றும் 'செப்டெம்பர்' என்பதை 'ஸிதம்பர்' என்றும் வழங்கும் இந்தி மொழியில் காங்கரேஜ் என்றால் அகில இந்தியாவிலும் காங்கிரஸ் நினைவுதான் வருமே ஒழிய குஜராத்திக் காளையின் நினைவு யாருக்கு வரும்? அந்தப் பெயர் பெற்ற எருதினம் ஏதும் இல்லை. இரட்டைக் காளைகளைப் பிரசுரித்து, 'காங்கரேஜ்' என்ற வார்த்தையையும் பொறித்தபின் அந்தக் காளையின் கொம்பிலோ, வாலிலுள்ள ரோமங்களிலோ உள்ள தனித் தன்மை பற்றிக் கூறுவது நகைப்புக்கிடமான விஷயமே யாகும். இந்தத் தபால் தலைக் கூத்தில் ஸ்ரீ சுப்பராயனுக்கு யாதொரு பொறுப்பு மில்லை. அந்தக் காலத்திலிருந்த மந்திரிமார்கள் 57-வது ஆண்டு தேர்தலுக்காகச் செய்த காரியம் அது. காங்கிரஸ் கட்சியின் மனப்பான்மைக்கு இது அடையாளமே யொழிய இந்த நாலணா தபால் தலையால் வெற்றியோ தோல்வியோ உண்டாகாது.

காங்கிரஸ் ஆட்சியில் 2

மக்களுக்கு உடனடியாக நன்மை பயக்காத மாபெரும் திட்டங்களை வகுத்து அயல் நாடுகள் நம் சாதனையை மெச்சுமாறு செய்யவேண்டுமென்பதே காங்கிரஸின் நோக்கம். மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிப்பவை சிறு தொழில்கள்தாம். நம் நாட்டில் முறையானபடி சிறு தொழில்களை அபிவிருத்தி செய்தால் ஒன்றிலிருந்து ஒன்றரைக் கோடி மக்கள் வேலை பெறுவார்கள் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் மக்களின் ஆற்றலை விட இயந்திர பூதத்தின் சக்தியிலேயே நம்பிக்கை வைத்துள்ள காங்கிரஸ் சிறு தொழில்களுக்கு மாற்றாந்தாய் மனோபாவமே காட்டி வருகிறது என்பதற்கு இதோ பாருங்கள் சான்று:

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 44 கோடி ரூபாய்கள்தாம். சர்க்கார் துறையிலுள்ள பெரும் தொழில்களுக்கோ 690 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான பண்டங்களைத் தராத, மக்களுக்கு வேலை வாய்ப்புக்களும் தராத — இந்தத் திட்டத்தையும் அதன் கர்த்தாக்களையும் நீங்கள் ஆதரிக்கலாமா?

பகட்டும், படாடோபமுமில்லாமல் மக்களின் உழைப்பையே பெரிதும் உபயோகித்து, வசிப்பளவை உயர்த்தும் சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது.
பொருளாதாரத்தை வளப்படுத்தும் முறையைச் சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது. 'மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்கும் தன்மை போல் மெல்லச் செய்து பயனடைவார்' என்று பாரதியார் பாடிய இந்த முறையே இந்தியாவுக்கேற்ற முறை.

சேமிப்பு சொல்லும் சோக சரிதம்

காங்கிரஸ் விரும்புவது போல் சர்க்காரே தொழில் நடத்த வேண்டுமானால் அதற்கான முதலில் பெரும் பகுதியை நாட்டு மக்களின் சேமிப்பிலிருந்துதான் கடனாகப் பெற வேண்டும். அப்படியில்லாமல் தனியார் தொழில் நடத்துவதும் மக்கள் சேமிப்பாகப் பாங்குகளில் போட்டிருக்கும் தொகைகளை அந்தப் பாங்குகள் தொழிலதிபர்களுக்குக் கடனாக வழங்குவதனால்தான் பெருமளவுக்கு நடைபெறுகிறது. எனவே ஒரு நாட்டின் மக்கள் உபயோகத்துக்கு உபரியாக வருமானம் பெற்றுச் சேமிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

இந்தக் கோணத்தில் இந்தியப் பொருளாதாரத்தைப் பார்த்தால் பெரும் வேதனையே ஏற்படும். பதினைந்து ஆண்டுகளாகக் காங்கிரஸ் நடத்தி வரும் 'சோஷலிஸ' ஆட்சியால் நடுத்தர, கீழ்த்தர வருமான வர்க்கத்தினர் சிறிதும் பயன் அடையவில்லை. விலைவாசி உயர்வு காரணமாக, கிடைக்கும் ஊதியத்தில் அவர்கள் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டித்தான் வாழ முடிகிறதே ஒழிய சேமிப்புக்கள் செய்ய இயலவில்லை என்பதைத் தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் குழு தரும் புள்ளி விவரம் ஐயந்திரிபற விளக்குகிறது.

இந்நாட்டிலுள்ள குடும்பங்களில் 85 சத விகிதத்தின் வருஷாந்திர வருமானம் மூவாயிர ரூபாய்க்கும் குறைவேயாகும். இக்குடும்பத்தினர் சேமிப்புச் செய்ய முடியவில்லை என்பதோடு கடன் வாங்கியே காலம் தள்ளுகிறார்கள் என்ற பரிதாபமான நிலையைக் காண்கிறோம். ஆண்டொன்றுக்கு ஐந்நூறு ரூபாய் வருமானமுள்ள ஒரு குடும்பம் வருஷத்துக்குச் சராசரியில் ரூ. 187 கடன்படுகிறது என்றால் அது என்ன சோஷலிஸ சமுதாயம்? வருஷத்துக்கு இரண்டாயிரம் ரூபாயிலிருந்து மூவாயிரம் ரூபாய் வரை வருமானமுள்ளவர்களுக்குச் சராசரியில் ஓராண்டுக்கு ரூ. 24 பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறதாம். இந்நாட்டில் 1000க்கு ஏழு பேராக உள்ள 15,000க்கு மேல் வருட வருமானம் பெறும் மிகச் சிலர் தான் நாட்டுச் சேமிப்பில் மிகப் பெரிய பங்கைப் பெற்றிருக்கிறார்களாம்.

தற்போது சேமிப்புச் செய்யும் வருமானத்தவர்கள் நாட்டு மக்களில் மிகவும் சொற்பமான ஒரு சதவிகிதத்தினரே. இவர்களது செல்வத்தை நிரவுவதால் சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்தது போலத்தான் ஆகுமே ஒழிய யாரும் பயன் பெற மாட்டார்கள். எனவே இவர்களது சேமிப்பாவது பெருகினால்தான் நாட்டின் தொழில்களுக்கு முதல் கிடைக்கும். ஆனால் அடிமட்டத்தில் உள்ளவர்களை உயர்த்த ஒரு சிறிதும் உதவாத காங்கிரஸின் சோஷலிஸம் உயர்ந்த வருமானக்காரர்களுக்கு ஏராளமான வரிகளை விதித்து அவர்களுடைய சேமிப்பையும் குறைக்கிறது. அதன் மூலமாகத் தொழில்களையும், அந்தத் தொழில்களில் ஈடுபட்டு ஊதியம் பெறக் கூடிய ஏராளமான மக்களின் நல்வாழ்வையும் நாசம் செய்கிறது.

வகுப்புத் துவேஷத்தையும், அசூயையையும் அடிப்படையாகக் கொண்டு இறுதியில் பொதுமக்களுக்கே தீமை விளைவிக்கும் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் இன்னமொரு முறை பட்டா அளிப்பது விவேகமாகுமா? மனச் சார்பின்றிச் சிந்தித்துப் பார்த்து விடை காண வேண்டிய வினா இது.

சுதந்திர நிதி

[23-1-62 முதல் 27-1-62 வரை]

என். சக்கரமய்யங்கார்	2 00	ஆர். வி. அய்யங்கார்	100 00
கே. சீனிவாச ராவ்	10 00	க. கிருஷ்ணன்	2 00
சிவகங்கை அன்பர்	3 00	கே. ராமராவ்	25 00
கே. எஸ். ராமச்சந்திரன்	25 00	கே. எஸ். சுந்தரம்	25 00
வி. சீனிவாச அய்யங்கார்	51 00	கே. லக்ஷ்மணராவ்	15 00
என். நாராயணசாமி	25 00	டி. ஸ்ரீ. ராமசாமி அய்யங்கார்	25 00
பி. ஆர். சீதாராம ராவ்	25 00	10-1-61 முதல் 22-1-62 வரை	21240 36
ஆர். என். சிதம்பர அய்யர் அண்ட் பிரதர்ஸ்	50 00		21638 36
எஸ். வெங்கடராமய்யர்	15 00		

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி c/o கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

தளை இறுகுகிறது!

அர்த்தமற்ற கட்டுப்பாடுகளை விதித்து நாட்டு மக்களின் உடலை வளர்க்கும் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதோடு, அவர்களுக்கு அறிவூட்டிப் புதுக் கருத்துக்களை உருவாக்கும் துறைகளையும் காங்கிரஸ் சர்க்கார் தனது உடும்புப் பிடிக்கு உட்படுத்தி வருகிறது. எழுத்து சுதந்திரம் என்ற ஜனநாயக உரிமை பெற்றுள்ள பத்திரிகைகளைக் குறித்து அது அவ்வப்போது இயற்றும் சட்டங்களைத்தான் குறிப்பிடுகிறோம். செய்தித் தாள்கள் இன்ன விலைக்கு இத்தனை பக்கங்கள் தாம் பிரசுரிக்கலாம் என்பதாக அது விதித்த ஓர் உத்தரவு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் தகர்த்தெறியப் பட்டது நினைவிருக்கலாம்.

இது நடந்து சில மாதங்களிலேயே, மேற்படி தீர்ப்பு எந்த முக்கியமான கருத்தை ஆதாரமாகக் கொண்டு வெளியாயிற்றோ அதற்கு முற்றிலும் முரணான இன்னொரு உத்தரவை இப்போது சர்க்கார் பிறப்பித்திருக்கிறது. 10,000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் செய்தித் தாள்கள் இப்போதிருப்பதை விடப் பத்து சத விகிதத்துக்கு மேல் பிரதிகளை அதிகரிக்கக்கூடாது. 10,000க்கும் குறைவாக விநியோகமுள்ள செய்தித் தாள்கள் அதற்குக் கூடுதலாக இருபத்தைந்து சத விகிதத்துக்கு மேல் விநியோகத்தைப் பெருக்கக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறது பாரத அரசாங்கம்.

பக்க-விலைக் கட்டுப்பாட்டு உத்தரவு செல்லத்தக்கதல்ல என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததற்கு மையமான காரணமே அதனால் பத்திரிகைகள் தங்கள் விநியோகத்தைப் பெருக்கிக் கொள்ளப் பெற்றுள்ள உரிமை குறைய நேரிடும் என்பதுதான்.

''செய்தித் தாள்களின் விநியோகம் குறைந்தால் அவை பொது மக்களின் கருத்தை உருவாக்குவதில் கொண்டுள்ள செல்வாக்கே அதனால் குறையும். எனவே இந்தப் பக்க விலைக் கட்டுப்பாட்டு உத்தரவை ஜனநாயகத்துக்கு விரோதமாகப் பிரயோகமாகக் கூடிய ஒரு பயங்கரமான ஆயுதமாகக் கருதலாம்'' என்று சுப்ரீம் கோர்ட் கூறியுள்ளது. அந்தத் தீர்ப்புக்குக் காங்கிரஸ் சர்க்கார் சிறிதும் மதிப்புத் தரவில்லை என்பதைப் புது உத்தரவிலிருந்து காணலாம்.

மறைமுகமாகப் பத்திரிகை விநியோக வளர்ச்சியைத் தடை செய்யக் கூடிய பக்க விலைக் கட்டுப்பாடு போனாலும், பெருமானுக்குப் பதில் பெத்த பெருமாள் என்ற கதையாக நேரடியாகவே செய்தித் தாள்களின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடும் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது சர்க்கார்.

இந்த உத்தரவுக்குக் காரணம் அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தீர்ப்பது என்பதாகக் கூறியிருக்கிறது சர்க்கார். அச்சுக் காகிதம் வெளி நாட்டிலிருந்தே பெருமளவுக்கு இறக்குமதியாகிறது. இதை வளர விடக் கூடாது என்பதற்காகவே இந்த உத்தரவாம். உண்மையில் நமது மாபெரும் செலாவணிப் பிரச்னையில் அச்சுக் காகித இறக்குமதி எவ்வளவு அற்பமான விஷயம் என்பதைப் புள்ளி விவரத்துடன் காட்டினால் சர்க்கார் காட்டும் காரணம் எவ்வளவு பொய்யானது என்பது தெரியும். நமது இறக்குமதிப் பண்டங்களின் மொத்த மதிப்பில் அச்சுக் காகிதத்தின் பங்கு ஒரு சதவிகிதத்துக்கு அதிகமாகப் போன நாளே கிடையாது. 1960-ம் ஆண்டு ஆறு கோடி ரூபாய்க்குச் சிறிது அதிகமாக அச்சுக் காகிதம் இறக்குமதி செய்திருக்கிறோம்; அதாவது மொத்த இறக்குமதி ஆயிரம் பங்கு என்றால் அதில் ஆறு பங்குதான் காகித இறக்குமதி. எனவே இந்த இனத்தில் சிக்கனம் பிடித்து நம்முடைய பிரம்மாண்டமான செலாவணிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதாகச் சொல்வது கேலிக்கிடமாகும். சர்க்கார் வர்த்தகக் கார்ப்பரேஷன் மூலமாகச் செய்துவரும் ஏற்றுமதி இறக்குமதிகளில் பல இனங்களைத் தனியார் பொறுப்புக்கே விட்டால் இந்தக் காகித இறக்குமதியின் மதிப்பைவிட எவ்வளவோ மடங்கு மீதம் காணலாம் என்பது அறிஞர்களின் கருத்து. தற்போதுள்ள ரீதியில் இந்த மூன்றாவது திட்டத்தின் ஐந்து ஆண்டுகளிலுமாகச் சேர்த்து மூன்றிலிருந்து ஐந்து கோடி ரூபாய்க்குத்தான் காகித இறக்குமதி அதிகரிக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பத்தாயிரம் கோடி ரூபாய்த் திட்டத்தில், மக்கள் எண்ணத்தைப் பிரதிபலித்தும், உருவாக்கியும் வரும் செய்தித்தாள்களுக்கு இந்தச் சொற்ப நன்மை அளிக்க நம் சர்க்காருக்கு மனமில்லை.

சர்க்கார் செய்யும் அநீதிகளை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய பல பெரிய பத்திரிகைகள் இன்று அவ்வாறு தைரியமாகச் செய்யவிடாமல் பலவிதத்திலும் கட்டுப்படுத்தி வருகிறது சர்க்கார். 'கட்டுப்பாட்டால் சர்க்காரிடம் வெறுப்பு; ஆனால் வெறுப்பைக் காட்டி



பளிங்குபோன்ற
பற்களுக்கும்
சுத்தமான
சுவாசத்திற்கும்
ரெமி
டூத் பேஸ்ட்
& பவுடர்
Remy

னுவோ கட்டுப்பாடு இருக்கும்' என்ற நிலையிலுள்ள பத்திரிகைகளை மேலும் நெரிக்க முன் வந்துவிட்டது அரசாங்கம்.

இவ்விடத்தில் செய்திப் பத்திரிகைக் காரர்களுக்கும் ஒரு வார்த்தை. பக்க-விலைக் கட்டுப்பாடு இல்லாததால் நிறைய விளம்பரம் பெறக்கூடிய பெரிய பத்திரிகைகள் குறைந்த விலைக்கு அதிகப் பக்கங்கள் வெளியிட இடமேற்பட்டு விட்டது. இவ்வாறு செய்தால் நாம் இறக்குமதி செய்யக்கூடிய அச்சுக் காகிதம் முழுவதையும் பெரிய செய்தித் தாள்கள் மட்டுமே பெற்று, சிறு பத்திரிகைகள் வளர முடியாமல் போய்விடும். இந்த ஏதுவைக் கொண்டுதான் அநேகர் சர்க்கார் உத்தரவை எதிர்க்காமலிருக்கிறார்கள். தங்கள் செல்வாக்கைத் தவறான வழியில் செலுத்தும் ஒரு சில பத்திரிகைக்காரர்களால் அத்துறையில் நியாயம் தவறாமல் நடக்கும் பெரும்பான்மையினரும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே செய்தித்தாள் அதிபர்கள் புதிதாகப் பிரவேசிப்போருக்குத் தாங்களாகவே கௌரவமாக இடமளித்து, புது உத்தரவுக்கு விரோதமாக மக்களின் ஆதரவைப் பெற முயல வேண்டும்.

மாண்ட மாணவர்கள்

சென்ற வாரம் திடுக்கிடும் நிகழ்ச்சிகள் கேள்வியுற்றோம். திருநெல்வேலி ஜில்லாவில் ஆதிப்பட்டி கிராமப் பள்ளியில் பயிலும் ஐம்பது மாணவர்களும் சேலம் ஜில்லா பெத்துநாயக்கன் பாளையம் வட்டாரப் பள்ளியிலுள்ள நாற்பது மாணவர்களும் பள்ளியில் இலவசமாக வழங்கும் உணவை உண்டதால் அவதிக்குள்ளாகி யிருக்கின்றனர். அந்த உணவினால் மயக்கமுற்ற மாணவர்கள் பலர்; உயிரையே இழந்த இளம் பிஞ்சுகளும் சில என்று அறிந்து பதைபதைத்தோம். வித்யா தானத்தோடு அன்னதானமும் செய்யும் உயரிய பணியில் இவ்விதமான விபரீதம் நேரிட்டது நெஞ்சு நோக வேண்டிய விஷயம். மாணவர்களுக்கு அளித்த உணவுப் பண்டங்களில் விஷம் கலந்திருக்கக்கூடும்; முக்கியமாக, அமெரிக்காவிலுள்ள 'கேர்' என்ற தர்ம ஸ்தாபனம் அன்புடன் வழங்கியுள்ள பால் பவுடரில் எவ்வாறோ நச்சு சேர்ந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப் படுகிறது. நாம் யாரையும் கைகாட்டிக் காட்டிக் குறை கூறுவதற்கில்லை: கூறியும் பிரயோசனமில்லைதான். எனினும் இனிமேலாவது இந்த மதிய உணவு விநியோகம் சீராக நடக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பாகும் என்று எச்சரிக்கிறோம். மாணவருக்கு உணவு படைப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்று ஒரு சாரார் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே இதில் நடைபெறும் ஊழல்களையெல்லாம் பொது மக்கள் கண்டுதான் வருகிறார்கள். இப்போது நம் வருங்காலப் பிரஜைகள் சிலர் மாண்ட பயங்கரத்தைக் கண்டு விட்டோம்.

இன்னொரு விஷயம்: இவ்விஷயத்தில் அமெரிக்காவும் பரபரப்படைந்து கவனம் செலுத்தவேண்டி வந்திருக்கிறது. எனினும் தவறு எப்படி நடைபெற்றதென்பதைக் கண்டு பிடிப்பதென்னமோ எளிதாகத் தோன்றவில்லை. பத்தாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து யாசகம் பெறுவதன் விளைவுகளில் ஒன்றே இது.

மாலை நினைவுகள்

பலகணிக் கதவைத் திறந்து இந்தப் பெண் என்ன பார்க்கிறாள்? விரிந்த மஞ்சம், ஒடுங்கித் தளர்ந்த நெஞ்சம், மலர்ந்த பார்வை, — மாலைப் போது. ஒளி தளர்ந்து இருள் வளரும் வேளை. இந்தச் சூழ்நிலையில் இவள் மனம் நினைத்துப் பார்க்கிற நினைவும், கண்கள் பார்த்து நினைக்கிற காட்சியும் என்னவாக இருக்கும்? பொருள் தேடுவதற்குப் பிரிந்து சென்ற தன் தலைவனையும் அவன் பிரிவால் தன்னைத் துன்புறுத்தும் மாலை வேளையையும் எண்ணி,

"மாலையோ அல்லை மணந்தார் — உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது"

என்று பொழுதை வாழ்த்துவதைப் போன்ற சொற்களில் நயமாகத் தூற்றுகிறாளா? இவளை இப்படித் துன்புறுத்தும் இதே மாலை வேளையில் பிரிந்து சென்ற இவள் காதலன் தான் போகும் வழியில் எங்காவது குவளைப் பூக்களைப் பார்த்து விட்டு அந்தப் பூக்களாலும் இவளுடைய கண்களே நினைவு வரப் பெற்று,

"மலர் காணின் மையாத்தி நெஞ்சே! — இவள்கண்
பலர் காணும் பூஒக்கும் என்று"

எனப் பூக்கள் யாவரும் காணத் தெரிவதையே வெறுத்தாலும் வெறுக்கலாம். வேடிக்கையான மாலைப் போதுதான். இரண்டு பேரையும் நினைக்க வைக்கிறது. இரண்டு பேரையும் தவிக்க வைக்கிறது. இந்த மாலைப் போதை இருவரும் வாழ்த்தத்தானே செய்வார்கள்? இந்தக் காட்சியை ஓவியர் அமுதன் அட்டைச் சித்திரமாக வழங்கியுள்ளார்.

பயன் தரும் பொருட்காட்சி



கதிர்


சென்னை தீவுத் திடலில் பொங்கல் தினம் தொடங்கி, பெரிய முறையில் அகில இந்திய இரண்டாவது விவசாயப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. இதை நடத்துபவர்கள் பாரத கிரிஷிக் சமாஜத்தார் ஆவார்கள். சென்ற முறை கல்கத்தா நகரில் இந்த விவசாயப் பொருட்காட்சியை நடத்தினார்கள். இந்த வருஷம் சென்னையில் நடத்துகிறார்கள். அடுத்த வருஷம் பம்பாய் நகரில் நடைபெறுமாம். மிகவும் சந்தோஷம்தான். பாரத கிரிஷிக் சமாஜம் வருஷத்தில் சில மாதங்களை இப்படியே பெரிய பெரிய நகரங்களில் பொருட்காட்சி நடத்திக் கொண்டிருப்பதோடு நின்று விடாமல், சற்றே கிராமப் புறங்களுக்கும் இந்த விவசாயப் பொருட்காட்சியைக் கொண்டு போவார்களானால், அதிகமாகப் பயன் கிட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

தீவுத் திடலில் விவசாயப் பொருட்காட்சி ஆரம்பமாகப் போகிறதென்று தெரிந்தபோது ''இவர்கள் கிராமத்துக்குப் போகக் கூடாதா?'' என்று தோன்றாமலில்லை. ஆனால் இந்த தீவுத் திடல் முன்னொரு காலத்தில் வயலாகவும், தோப்புகளாகவும் விளங்கிய செய்தி நினைவுக்கு வந்ததும், ''போகட்டும்! பழங் காலத்து தீவுத் திடலை நினைவூட்டும் வகையில், இங்கே வரப்புகள் கட்டி, நெல், சோளம், கரும்புப் பயிர்களை நடமாட விடுகிறார்களே, அந்த மட்டில் ரொம்ப நல்லது தான்!'' என்று ஓரளவுக்கு மனச் சமாதானம் ஏற்பட்டது.

இப்பொருட் காட்சி மிகப் பெரிய அளவில் அமைந்திருக்கிறதென்றே கூற வேண்டும். தீவுத் திடலின் பெரும் பகுதியைச் சுற்றி வளைத்து விவசாய மணம் கமழச் செய்திருக்கிறார்கள். கூவம் ஆறு வேறே ஓடுவதால் விவசாய மணம் நன்றாகவே வீசுகிறது!

பொருட்காட்சியை இந்திய விவசாய மந்திரி ஸ்ரீ பஞ்சாப் ராவ் தேஷ்முக், சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி, சென்னை விவசாய அமைச்சர் திரு பக்தவத்சலம் இம் மூவருமாக ஆரம்பித்து வைத்தார்கள். மூவரும், விவசாயத்தின் சிறப்பை எடுத்துரைத்ததோடு, பொங்கல் பண்டிகை தமிழ் நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானதென்று எடுத்துரைத்து விட்டு, உழவர் திருநாளாகிய பொங்கல் பண்டிகையன்று விழா ஆரம்பமானது குறித்துத் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டார்கள். ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களின் ஆரம்பப் பிரசங்கம் சுவைபட இருந்தது. ஏனெனில், பொங்கலன்று கரும்பு தின்பதைப் பற்றி அவர் ஒரு புதுத் தகவலை வெளியிட்டார். ஒரு சமயம் பொங்கல் அன்று வட இந்தியாவில் ரயில்பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, இடையில் இருந்த சிறு ஸ்டேஷன்களில் கூடக் கரும்பு விற்றார்கள் என்றும், பிரயாணிகள் வண்டியிலிருந்து இறங்கிச் சென்று கரும்புத் துண்டுகளை வாங்கித் தின்ற காட்சியை அவர் விவரித்தார். விவரித்து விட்டு, ''சங்கராந்தி அன்று கரும்பு தின்பது வட இந்தியாவில் கூட இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது!'' என்றார். இதை விடச்







கவையான விஷயம் என்ன இருக்க முடியும்? பொருட்காட்சியில் மொத்தம் பத்து ராஜ்யங்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசாங்கத்தின் அரங்குகளும் பெரிய அளவில் அமைந்திருக்கின்றன.

ராஜ்ய சர்க்கார் பகுதிகளில் சென்னை அரங்கு காண்போர் கருத்தைக் கவரும் வகையில் அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் விவசாயத் தொழில் எவ்வளவு மேன்மையோடு விளங்கி வந்திருக்கிறதென்பதைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். மாடுகள் மட்டுமின்றி, தென்பாண்டி நாட்டில் யானைகளையும் விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். களத்து மேட்டில், போரடிப்பதற்கு யானைக் கூட்டங்கள் பெரிதும் உபயோகமாகி வந்திருக்கின்றன. 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாதென்று யானை கட்டிப் போரடித்த தென் பாண்டி நாடு' என்ற கருத்தில் பாட்டுக்கூட ஒன்று உண்டு. இந்தப் பாடலை விளக்குமுறையில், சென்னை சர்க்கார் விவசாய அரங்கின் வாயிலில் களத்து மேட்டில் யானைகள் போர் அடிக்கும் காட்சியைப் பிரமாதமாக அமைத்திருக்கிறார்கள். குட்டி யானைகளும், பெரிய யானைகளும் களத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலும் 'போர்' அடிக்காத காட்சி என்று கூற வேண்டும். சென்னை மராமத்துத் துறையினரின் கைங்கரியமாகப் பெரிய அணைக்கட்டு ஒன்று எழும்பியிருக்கிறது. வனத் துறை, மீன் துறை, கால்நடைத் துறை இப்படி இன்னும் பலவிதத் துறைகளும் தங்கள் செயல்களை இந்தக் காட்சியில் வெளியிட்டிருக்கின்றன.

வங்காளம், கேரளம், பஞ்சாப் இந்த ராஜ்யங்களைச் சேர்ந்த அரங்குகளும் பல உபயோகமான விஷயங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைக்கின்றன. சிறிய இடத்தில் கலைத் திறனோடு விளங்குகிறது கேரள அரங்கு.

வெளி நாடுகளைச் சேர்ந்த இரு பெரிய அரங்குகள் இந்தப் பொருட்காட்சியில் இடம் பெற்றிருப்பது ஒரு முக்கியமான விசேஷமாகும். அவற்றில் ஒன்று அமெரிக்க விவசாய அரங்கு.

கோதுமை பயிரிடுவதிலிருந்து. கோழி வளர்ப்பது வரை விவசாயத் துறையில் அமெரிக்காவின் பிரமிக்கத் தக்க சாதனைகளை இந்த அரங்கில் கண்டு பயன் பெறலாம். இந்தியாவின் விவசாய முன்னேற்றத்துக்கு அமெரிக்கா செய்து வரும் பணிகள் பல. அவற்றில் ஒன்று அமெரிக்க சர்க்கார் விவசாயத் துறையில் சிறந்த மேதையென்று கருதப்படும் ஸ்ரீ திரு வி. டெய்லர் வுட் அவர்களை இந்திய மக்களின் பொருளாதார விவசாய அபிவிருத்திக்குப் பணிபுரிய அனுப்பி வைத்திருப்பதாகும். திரு டெய்லர் வுட் அவர்கள் இந்தப் பொருட்


சென்னை ஐலண்டு மைதானத்தில் நடைபெறும் விவசாயக் கண்காட்சி 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்னும் பேருண்மையைச் சித்திரிக்கும் கண்காட்சியாகத் திகழ்கிறது என்பதை இந்தப் படங்களிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். யானை கட்டிப் போரடிக்கும் காட்சியொன்றே தமிழ்நாட்டின் வளமையைக் காட்டுவதற்குப் போதுமல்லவா?

காட்சியில் அமெரிக்கப் பகுதியைத் திறந்து வைத்தார். சென்னை அமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்களும், இந்தத் திறப்பு விழாவில் பங்கெடுத்துக் கொண்டார். அமெரிக்க அரங்கில் விவசாய இயந்திரப் பகுதியில் இயங்கி வரும் 'பேபி டிராக்டர்' அனைவரையும் கவர்வதாயிருக்கிறது. இந்த டிராக்டரின் விலை மூவாயிரம் ரூபாய்தானும். ஒரு நாளைக்குப் பத்து ஏக்கர் வரை உழுது தள்ளுகிறதாம் இது. சேற்றில் அழுங்கினால்கூட இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்து தூக்கிக் கொண்டு போய் விடக் கூடிய அளவில் குழந்தையின் மோட்டார் வண்டியைப் போல் இருக்கிறது இந்த டிராக்டர்!

அமெரிக்க அரங்கு அளவு தோற்றத்தில் பெரிதாக இல்லையானாலும், ஜெர்மனி அரங்கு 'கருங்கச் சொல்லி விளங்க வைக்கும்' முறையில் அமைந்திருக்கிறது. உள்ளே செல்லும் போது வாசலுக்கு அலங்காரம் ஒன்றுமில்லை. வெறும் பச்சைப் பசேல் என்ற இலைகளையே சிற்பமாக அமைத்திருக்கிறார்கள். அந்த இலைகளின் அமைப்பே அழகுடன் விளங்கி அழைப்பு கூறுகின்றது. ஜெர்மனி விவசாய நாடு அல்ல. எனினும் தங்களுடைய உணவு உற்பத்தியில் அவர்கள் அடைந்திருக்கும் விஞ்ஞான முன்னேற்றம் அதிசயிக்கும் வண்ணம் இருக்கிறது. ரஸாயனங்களின் உதவி மூலம் விவசாயத் துறையில் எவ்வளவு அபிவிருத்திகளைக்காணலாம் என்பனவற்றை இந்த அரங்கில் பல பகுதிகளில் காணலாம். கால் நடை வளர்ப்பு குறித்தும் பல அரிய விஷயங்களை இங்கு தெரிந்துகொள்ள முடிகிறது. தாமாகவே பக்கங்களைப் புரட்டிக் கொண்டு 'பேசும் புத்தகம்' ஒன்றும் இந்த அரங்கில் இருக்கிறது.

இந்த இரு அயல்நாட்டு அரங்குகளையும் சேர்த்து மொத்தம் அறுபது அரங்குகள் இந்தக் காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன. விவசாய வளர்ச்சியில் ஈடுபட்டு வரும் தனியார் தொழில் ஸ்தாபனங்களும் ஏராளமாக இடம் பெற்றிருக்கின்றன. பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் குறை வில்லை. புறப்பட்ட இடத்துக்கே, பிரயாணிகளை மறுபடியும் கொண்டு வந்து விட்டு விடும் விளையாட்டு ரயில் வண்டி ஒன்றும், இந்தப் பொருட்காட்சியில் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது. சென்னை போலீஸ் துறையினரின் பாதுகாப்பு ஏற்பாடும் சிறந்த முறையில் அமைந்திருப்பதால், வழி தவறிவிட்ட பெரியவர்களைத் தேடி அலைய வேண்டிய கஷ்டம் குழந்தைகளுக்கு ஏற்படாது. பிரிந்து தவிக்கும் பெரியவர்களைக் கண்டுபிடித்து அழைத்து வந்து குழந்தைகளிடம் சேர்ப்பித்து விடுவார்கள். எனவே, குடும்ப சகிதம்; குழந்தைகளுடன் சென்று பார்க்க வேண்டிய பொருட்காட்சிதான் இது. பயனுள்ள பொருட்காட்சியும் கூடத்தான்!

நம் நாட்டு வளமையைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதோடு பிறநாடுகளில் விவசாயத்தைப் பேணும் முறைமையைத் தெரிந்து கொள்ளுவதற்கும் இந்தக் கண் காட்சியில் இடமிருக்கிறது. அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளும் இக் கண்காட்சியில் பங்கு பற்றித் தங்கள் நாடுகளில் விவசாயம் நடத்தும் நவீன முறைகளை விளக்கி வருகின்றன.







தத்துவம் விளக்கும் ஒரு சத்துவப் பெரியார்

இன்று உபந்யாசம் செய்யும் பெரியார்களில் அறிவிலும், அநுபவத்திலும், ஆயுளிலும் பழுத்துத் தனியிடம் பெற்றுள்ளவர் மாயூரம் பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள். அவரது சைவ — வைஷ்ணவ சமரச மனப்பான்மையையும், ஸ்ரீ இராமபிரான் அவலம்பித்த அறப் பண்புகளையும், ஸ்ரீ கிருஷ்ணன் விளக்கிக் காட்டிய பரம்பொருளின் பெருமைகளையும் அவர் உய்த்துணர்ந்து கூறும் அழகையும் கண்டவர்கள் சிவராமகிருஷ்ணன் என்ற அவரது இயற்பெயரிலேயே காரணார்த்தமான ஒரு தொடர்பையும் காண்பார்கள். ஸ்ரீராமன் '(ஆத்மானம் மானுஷம் மன்யே) என்னை நான் மனிதனாகக் கருதுகிறேன்' என்கிறார். மனிதனுடைய லட்சிய தர்மத்தைப் பல நிலைகளில் நின்று அநுஷ்டித்துக் காட்டுகிறார். ஸ்ரீ கிருஷ்ணன் '(அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:) நான் உலகை ஆக்குபவன், என்னிடமிருந்தே எல்லாம் உண்டாயின, நான் இறைவன்' என்று கூறுகிறார். உபநிஷத்துகள் கூறுகிறபடி தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் அப்பாற்பட்டதாய் உள்ள பிரம்மம் எதுவோ அதைக் கிருஷ்ண சரிதம் சுட்டிக் காட்டுகிறது. உலகில் பகவான் இராமனாக அவதரித்த போது வேதம் வால்மீகியிடம் இராமாயணமாக அவதரித்தது. ஸ்ரீ கிருஷ்ணன் அவதார காரியங்களைப் பூர்த்தி செய்து கொண்டு பரமபதம் சென்றபோது பாகவதத்தைத் தமக்குப் பிரதிநிதியாக உலகில் வைத்துப் போனார். இவ்விரு நூல்களும் பூமியில் மலைகளும் நதிகளும் உள்ளவரை இருக்கும் என்பது ரிஷிகளின் ஆசிமொழி.

பாரத நாட்டின் புனருத்தாரணத்துக்கு, ஸ்ரீமத் ராமாயணத்தின் மையக் கருத்தாகிய தர்ம தத்துவமும் ஸ்ரீமத் பாகவதத்தின் மையக் கருத்தாகிய பிரம்ம தத்துவமும் விளங்கும்படிச் சொல்லுவதே தலைசிறந்த சாதனமாகும்.


அப்படிச் சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பிரசாரம் செய்து அரும் பணியாற்றி வந்துள்ள மகான் மாயூரம் பிரம்ம ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள். வேதாந்த கேசரிகளான மஹாமஹோபாத்யாய மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளிடமும் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளிடமும் வேதாந்தமும் சாஸ்திரமும் குருவாகப் பாடம் கேட்டு அவற்றில் கரை கண்டவர் ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள். பிரவசனம் பிரகாசிப்பதற்கு விஷய கௌரவம் மட்டும் போதாது. சொல்லுபவர் அநுபவித்து விஷயத்துடன் ஒன்றுபட்டுச் சொன்னால் தான் கேட்பவர்களுக்கு அது முழுவதும் பயனளிப்பதாகும்.



உயர்ந்த பண்பில்லாதவர்கள் சொன்னால் உண்மை விளக்கம் ஏற்படாது. சாஸ்திரியாரிடம் அப்பண்பு பரிபூரணமாக உள்ளது.


சாஸ்திரியாருடைய பிரவசனப் பாணி தனித் தன்மை வாய்ந்தது. அவர் வால்மீகியும் வியாஸரும் கூறிய விஷயங்களுக்கிடையே உலக வியவகாரங்களையும் வேடிக்கைத் துணுக்குகளையும் புக விடுவதில்லை. பகவானுடைய பூஜையில் ஈடுபட்டவர்கள் பூஜா காலத்தில் உலகப் பேச்சுப் பேசுவதை எப்படிச் செய்ய மாட்டார்களோ, அதே போல் இவர் பிரவசனத்தை ஒரு சிறந்த யோகமாகவும் நிஷ்டையாகவும் கருதி விஷயத்தில் தாமும் லயித்துப் பிறரையும் மெய் மறந்து லயிக்கும்படி செய்கிறார். மனிதர்களை ஒரு போதும் துதிப்பதில்லை. ஸ்ரீமத் ராமாயணமும் பாகவதமும் முழுவதும் அவருக்கு பிரத்யக்ஷம். பகவத் ரூபத்தையும் குணங்களையும் அவர் வர்ணிப்பதைக் கேட்டவர்கள் பரமானந்தத்தில் மூழ்குவர். குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பித்துக் குறிப்பிட்ட காலத்தில் முடிப்பதை ஒரு சத்திய விரதமாக அவர் அநுஷ்டித்து வருகிறார். இம்மியளவும் கால நியதியை அவர் மீறுவதில்லை. அவருடைய வாக்கின் இடையறாப் பொழிவையும், அவரது அபாரமான பாண்டித்தியமும், உயர்ந்த ஞானஸ்யமும் மூலக்கதையின் போக்கைச் சிறிதும் தடை செய்யாமல் அதனை ஒட்டி இழைந்து சென்று அதற்கு ரஸம் கூட்டுவதையும் கேட்டவர்களே அறிவர்.

காஞ்சி காமகோடி ஆசாரியாரிடம் அளவு கடந்த பக்தி பூண்டவர் ஸ்ரீ சாஸ்திரிகள். சில வருஷங்களுக்கு முன் அவருடைய ஞாபக சக்தி பழுதுபட்டபோது ஆசாரிய தரிசனத்தால் அந்தச் சக்தி மலர்ச்சியடைந்து பெரியவர்கள் சந்நிதியில் அப்போதே மீண்டும் பாகவதப் பிரவசனம் செய்ய ஆரம்பித்தார் அவர். எண்பது வயது பூர்த்தி செய்துள்ள ஸ்ரீ சாஸ்திரிகள் இந்தப் பிப்ரவரி 8-ந்தேதி தமது 365-வது பிரவசனத்தைச் சென்னை தியாகராயநகர் சாரதா வித்தியாலயத்தில் தொடங்கிப் பதினாறு நாட்கள் ஸ்ரீமத் பாகவத பிரவசனம் செய்யப் போகிறார். இதற்கு அன்பர்கள் அளிக்கப் போகும் சம்மானத்திலே பெரும் பகுதியைக் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்குக் காணிக்கையாக அளிக்க வேண்டுமென்றும் மிகுதியையும் ஈசுவர கைங்கரியத்துக்கே பயன்படுத்த வேண்டுமென்றும் அவர் தீர்மானித்திருக்கிறார். இறைவனுடைய திருவருள் இதைப் பூர்த்தி செய்வித்துப் 'பிரவசன மார்க்க தரிசி' யாகிய அவர் மேலும் நூறாண்டு திடகாத்திரத்துடன் வாழ அநுக்கிரஹிக்க வேண்டும். -அண்ணா


வியக்கும் கவர்ச்சி
கைத்தறி துணிகளே
படுக்கை விரிப்புகள்
மேஜை விரிப்புகள்
திரைத் துணிகள்
கார்ப்பெட்டுகள்
மற்றும்
சோபா துணிகள்
கவர்ச்சிகரமான வர்ணங்கள்
வசீகரிக்கும் மோஸ்தர்கள்
பழமைபெற்ற டிசைன்கள்
நீடித்துழைப்பவை – மேலும்
நீங்கள் நினைப்பதை விட
விலை குறைவானவை
அஸ்ஸாம், மணிப்பூர், வங்காளம், காஷ்மீர், உத்திரப்பிரதேசம், மஹாராஷ்டிரம் போன்ற இந்தியாவின் பல பிரதேசங்களிலும் தயாராகும் துணிகள் எல்லா ரகங்களிலும் உள்ளன
ஹாண்ட்லூம் ஹவுஸ்,
9, ரடன்பஜார், சென்னை-3.
தலைமை ஆபீஸ்: அகில இந்திய கைத்தறி துணிகள் விற்பனை கூட்டுறவு சங்கம் லிமிடெட், ஜன்மபூமி சேம்பர்ஸ், பம்பாய்-1.
FDS/HH-2 TM

மணிபல்லவம்

நா. பார்த்தசாரதி



22. இருண்ட பகல்

அப்போது நகைவேழம்பருடைய மனத்துக்குள்ளே முன்பு கணத்துக்குக் கணம் பொய்யாய் அழிந்து கொண்டிருந்த வாழ்வு இனி நிலையாகவே அழிந்து விடப் போகிறதென்று வாழ்வைப் பற்றிய அவநம்பிக்கைகளும், மரணத்தைப் பற்றிய நம்பிக்கையும் ஒன்றாகவே சூழ்ந்து கொண்டிருந்தன. நெருங்கி வந்துகொண்டிருக்கும் சாவைத் தைரியமாகவும், உற்சாகமாகவும் வரவேற்க வேண்டும் என்று போலியாக அவர் ஏற்படுத்திக் கொள்ள முயன்ற வைராக்கியம் பயன்படவில்லை.

அவர் சிரிக்க முயன்றார். ஆனால் அழுகைதான் வந்தது. துணிவாக இருக்க முயன்றார். ஆனால் இந்த உலகத்தையும் இதன் நாட்களையும் இனி இழந்துவிடப் போகிறோமே என்ற தளர்ச்சிதான் பெருகிற்று. சாவின் பயங்கர ஓலம் போல் விகாரமான நரிக் கூப்பாடுகள் அவரைச் சூழ்ந்தன. பெரிய நரி ஒன்று கோரமாக வாய் திறந்து கத்திகளின் நுனிகளை அடுக்கியதுபோன்ற பல் வரிசை தெரியப் பாய்ந்து வந்து அவருடைய தொடையில் வாய் வைத்தது. மற்றொரு நரி பலி பீடத்தை ஒட்டினாற் போலத் தாவி அவருடைய தோளில் பற்களைப் பதித்தது. அவர் எந்த வகையான மரணத்துக்கு ஆசைப்பட்டாரோ அதுவே அவருக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. அவரே அறிவிருந்து தப்பித்துக் கொண்டு ஓட முயன்றாலும் முடியாதபடி சாவின் கரங்கள் அவரை இறுக்கிப் பிடித்து விட்டன. எழுந்து ஓடி விடலாம் என்றால் முறிந்து போன காலுக்கு மேலே எழுந்திருக்கின்ற ஆற்றலும் இல்லை. கூட்டம் கூட்டமாகச் சிறுத்தைப் புலிகளைப் போல் வந்து மேலே பாய்ந்து சதையைக் கவ்விக் குதறும் கொடிய நரிகளை எதிர்த்துப் போராடுகிற வலிமை அவரது கைகளிலும் உடம்பிலும் அப்போது இல்லை.

தனது உடலின் சதையைக் குருதி சிந்தக் கல்வி இழுத்துக் குதறும் காட்சியைத் தன்னுடைய கண்களாலேயே பார்க்கும் அநுபவம் விசித்திரமாகத் தான் இருந்தது. அதுவே குரூரமாகவும் இருந்தது.

'என்னை நாலைந்து பேராகச் சூழ்ந்து கொண்டு அணு அணுவாகச் சித்திரவதை செய்தாலும் என்னுடைய வாய் அலறாது. கண்களில் நீர் நெகிழாது. அப்படி என் உடம்பையும், மனத்தையும் கல்லாகவும் இரும்பாகவும் நானே பழக்கியிருக்கிறேன்' என்று தானே சிறிது நேரத்துக்கு முன் அருவாளனிடம் கூறிய சொற்களை இப்போது நினைத்துக் கொண்டு சிரிக்க முயன்றார் அவர். நரிகள் மேலே விழுந்து தாறுமாறாகப் பிடுங்கிய வலியினாலும், வேதனையினாலும் சிரிப்பு வரவில்லை.

'எப்படி வாழ வேண்டாமோ அப்படி இதுவரை வாழ்ந்து விட்டேன். அப்படி வாழக் கூடாது என்று தெரிந்திருந்தும் அப்படியே வாழ்ந்தேன். அந்த வாழ்வு இப்போது இப்படி முடிகிறது' என்று உயிர் வேதனையோடு உடம்பில் வலி துடிக்கத் துடிக்க அவர் நினைத்த கடைசிக் கணத்தில், சிவந்து போய்த் தனியாய் முகத்துக்கே புண் போல் இருந்த அந்த ஒற்றைக் கண்ணின்மேல் குறி வைத்துப் பாய்ந்தது ஒரு நரி. கண்ணின் பார்வை அவியும்போதே உயிரின் கடைசிப் பார்வையையும் முடித்து விட விரும்புவது போல் அவருடைய குரல் வளையைக் கவ்வியது மற்றொரு நரி! அதற்குப் பின் அந்த முகத்தில் கண்ணே இல்லை. கண்ணிருந்தாலும் பார்ப்பதற்கு உயிருணர்ச்சி இல்லை. அந்த உடம்பே முழு உருவாாக இல்லை.

* * *

அருவாள மறவனும் அவனுடைய தோழனும் வன்னிமன்றத்துக்குப் போய்க் காபாலிகையாகிய பைரவியை அழைத்துக் கொண்டு காளி கோட்டத்துக்குத் திரும்பி வந்த போது அங்கே நகைவேழம்பர் என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருந்த மனித உடம்பை முழுமையாகக் காண முடியவில்லை. பலி பீடத்தின் மேலும் அதைச் சுற்றிலும் ஒரே நரிக் கூட்டமாகச் சூழ்ந்திருந்தது. அருவாளனும், அவன் தோழனும் பைரவியும் இரைச்சலிட்டுக் கூடியிருந்த அந்த நரிக் கூட்டத்தை அரும்பாடு பட்டு விரட்டி விட்டுப் பார்த்த போது கூட அவருடைய உடம்பின் நரிகளுக்குப் பலி கொடுத்து இழந்த பகுதிகளைத் தவிர எஞ்சியவை மட்டுமே கிடைத்தன. அப்படி இழந்து போயிருந்த பகுதிகளில் மிக முதன்மையானது அவருடைய உயிராயிருந்தது.

சொல்ல முடியாத ஆத்திரமும் இரக்கமும் வந்து நெஞ்சை அடைக்க அருவாளன் உடைந்து தளர்ந்த குரலில் தன் நண்பனையும், காபாலிகையையும் பார்த்துச் சொன்னான்:

''மனிதர்கள் கெட்டவர்களாக இருக்கலாம். பாவிகளாகவும், பாதகர்களாகவும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் உலகத்தில் சாவது பயங்கரமானது தான். பொதுவாகச் சாவதே பயங்கரமானது என்றால், பயங்கரமாகவே சாவதென்பது எவ்வளவு வேதனையானது? இவர் தமது கடைசி ஆசையையும் நிறைவேற்றிக் கொள்ளாமலே செத்துப் போய் விட்டார். வாழும்போது நகைவேழம்பர் என்ற பெயருக்கேற்ப இவர் முகத்தில் நான் சிரிப்பையே பார்த்ததில்லை. ஆனால் சாவதற்கு முன்போ 'மரணத்தைக் கூட சிரித்தபடியே என்னால் சந்திக்க முடியும்' என்று என்னிடமே சிரித்துக் கொண்டு சொன்னார் இவர். செத்த பின்போ இவருடைய சாவே இப்படிச் சிரிப்புக்குரியதாகி விட்டது.''

''இருக்கலாம்! ஆனால் இவரைப்போல் ஒருவர் துணையாக நின்று உதவியிரா விட்டால் இவர் யாருக்குத் துணை நின்று உதவினாரோ அவருடைய செல்வச் செழிப்பு நிறைந்த பெரு வாழ்வே இதற்குள் ஊர் சிரித்துப் போயிருக்கும்'' என்றாள் பைரவி. இயல்பாகவே கோரமாயிருந்த அவள் முகம் இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது இரத்தவெறி கொண்டு குமுறுவது போல் இன்னும் கொடுமையாகத் தோன்றியது. 'பெருநிதிச் செல்வரைப் பழி வாங்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைப்பதற்காகத்தான் உன்னை அவர் இங்கே கூப்பிட்டனுப்பினார்' என்னும் உண்மையை அந்தப் பேய் மகளிடம் இப்போதுதானே கூறிவிடலாமா என்று எண்ணினான் அருவாளன். ஆனால் தானே அதைக் கூறுவது பொருந்தாது என்று நினைத்து உடனே அடக்கிக் கொண்டான். கண்களில் நீர் கலங்க அந்தப் பேய் மகள் காளிகோட்டத்துப் பலி பீடத்தின் அருகே கன்னத்தில் கை ஊன்றி அமர்ந்து விட்ட சமயத்தில் மெல்ல மெல்ல இருள் வெளி வாங்கி விடிவதற்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது.

தாங்கள் பெருநிதிச் செல்வருக்குக் கொடுத்து விட்டு வந்திருந்த வாக்கு நினைவு வரவே அருவாளனும் அவன் தோழனும் மெல்ல அங்கிருந்து நழுவினர். காளிகோட்டத்தில் நகைவேழம்பருடைய கோர மரணத்தைக் கண்டு

விட்டுப் பட்டினப்பாக்கத்துப் பெருமாளிகைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது அருவாளனுடைய மனம் மிகவும் தளர்ந்து போயிருந்தது. தான் இன்று வரை வாழ்ந்ததும் இனிமேல் வாழப் போவதுமாகிய வாழ்க்கையின் மேலேயே அவனுக்கே வெறுப்பாயிருந்தது. நகைவேழம்பருடைய சாவை அவர் ஒருவருடைய சொந்த அழிவாக மட்டும் அவனால் நினைக்க முடியவில்லை. அந்த ஒருவருடைய சாவில் தன்னைப் போன்ற பலருடைய நம்பிக்கைகளும் சேர்ந்து செத்து அழிந்திருப்பதாக அவன் எண்ணினான். சாவதற்குமுன்னால் அந்த ஒற்றைக் கண் மனிதர் அவனிடம் பேசிய பேச்சுக்களால் அவனுடைய மனத்தில் பெருநிதிச் செல்வர் மேலேயே வெறுப்பும் அவநம்பிக்கையும் பெருகுமாறு செய்து விட்டுப் போயிருந்தார். சாவதற்கு முன் அவர் பேசியிருந்த பேச்சுக்கள் இன்னும் கூட அவன் செவிகளில் ஒலிப்பன போலிருந்தன. அவன் நினைக்கலானான்:

'அந்தச் செல்வருக்கு நான் சோற்றுக் கடன் பட்டிருக்கிறேன். நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். இன்று இப்போது என்னுடைய உடலில் இருக்கிற சோற்றுச் செருக்கு அவர் அளித்தது. ஆனாலும் இந்த விநாடியே அவருடைய வழிகளிலிருந்து நான் விலகிவிட வேண்டும் போல் எனக்கு அவர்மேல் வெறுப்பாக இருக்கிறது. 'அடிமையாக இருந்து அடைகிற சுகம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அது நோய்தான் என்று சாவதற்கு முன் அவர் கூறினாரே? எனக்கும் ஒரு நாள் இந்தக் கதி நேரலாம் என்று கூடச் சொன்னாரே?' என்று பலவிதமாகச் சிந்தித்துக் கொண்டே சென்ற போது அருவாளனுடைய மனத்தில் பெருநிதிச் செல்வரைப் பற்றிய மதிப்புச் சிறிது சிறிதாகத் தேய்ந்து அழிந்து விட்டது. பட்டினப்பாக்கத்துப் பெருமாளிகையை அடைகிறவரை அருவாளமறவன் தன் தோழனிடம் அப்போது தன் மனத்தில் கிளர்ந்த எண்ணங்களை உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக் கொண்டே போனான். அப்படிப் பேசாமல் தனக்குள்ளேயே தன் சிந்தனைகளை அடக்கிக் கொண்டு போவதற்கு அப்போது அவனால் முடியவில்லை.

அருவாளனும் அவன் தோழனும் பெருமாளிகைக்குள் நுழைந்த போது பூம்புகாரின் கிழக்கு வானத்தில் பகல் பிறந்து கொண்டிருந்தது. விடிய விடியத் தங்களை எதிர்பார்த்து விழித்திருந்த சோர்வைப் பெருநிதிச் செல்வரின் முகத்திலும் சிவந்து போயிருந்த விழிகளிலும் அவர்கள் கண்டார்கள். அப்போதிருந்த மன நிலையில் அருவாளனுக்கு அவருடைய முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை.

'போன காரியம் என்ன ஆயிற்று?' என்பதைக் கண் பார்வையின் குறிப்பாலேயே அவர்களிடம் வினவினார் பெருநிதிச் செல்வர். வார்த்தைகளைச் செலவழிக்காமலே பிறந்த குறிப்புக்கேள்வியாயிருந்தது அது.

''உங்கள் கவலை தீர்ந்து விட்டது'' என்று அவர் முகத்தைப் பார்க்க விரும்பாதவன் போலத் தரையைப் பார்த்துக் கொண்டே மறுமொழி கூறினான் அருவாளன். அப்போது அவனுடைய சோர்வையும் தளர்ச்சியையும் உற்சாகமின்மையையும் அவரே கண்டு புரிந்து கொண்டு விட்டார்.

''நீயும் உன் தோழனும் நான் உங்களுக்குக் கட்டளையிட்டிருந்தபடியே காரியத்தை முடித்துக் கொண்டுதான் வெற்றியோடு திரும்பி வந்திருக்கிறீர்கள். அப்படி இருந்தும் உங்கள் இருவர் முகங்களிலும் நான் உற்சாகத்தையோ பெருமையையோ காண முடியவில்லையே? அது ஏன்?''

சிறிது தயங்கியபின் அருவாளன் அவருடைய இந்தக் கேள்விக்கு விடை கூறினான்:

''ஐயா: சில காரியங்களைச் செய்த பின் அப்படிச் செய்ததற்காக எந்த விதத்திலும் பெருமிதப்பட முடிவதில்லை. மேலும் அந்த மனிதருடைய சாவு இயல்பாகவே நேர்ந்துவிட்டது. நாங்கள் ஏதும் செய்வதற்கு முயலுமுன்பே அவர் தாமாகவே அழிந்து போய் விட்டார்'' என்று தொடங்கிக் காளிகோட்டத்தில் நடந்தவற்றை எல்லாம் அவரிடம் சொன்னான். அப்படிச் சொல்லியபோது நகைவேழம்பருடைய கடைசி ஆசையையும் அதற்காகத் தாங்களே வன்னி மன்றத்துக்குப் போய்ப் பைரவியை அவரிடத்துக்கு அழைத்துக் கொண்டு வந்ததையும் மட்டும் அவரிடம் கூறாமலே மறைத்து விட்டான் அருவாளன்.

''சிறிது நேரம் இரு. அருவாளா! இதோ வருகிறேன்''—என்று கூறி அவர்களை அங்கேயே நிறுத்தி விட்டு உட்பக்கமாகச் சென்றார் பெருநிதிச் செல்வர். அவர் எதற்காக அப்போது உள்ளே செல்கிறார் என்பது அருவாளனுக்கும் ஏறத்தாழ அநுமானமாகத் தெரிந்தது.

அவன் தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். இந்த முறை அவரிடம் தான் எதற்காகவும் நன்றிக் கடன் படக் கூடாதென்று தன்னை உறுதிப் படுத்திக் கொண்டு அவன் தலைநிமிர்ந்த போது கை நிறையப் பொற் காசுகளோடும் வாய் நிறைய வாணிகச் சிரிப்புடனும்

பெருநிதிச் செல்வர் உள்ளேயிருந்து வெளியே வந்து அவனெதிரே நின்று கொண்டிருந்தார்.

''இந்தா, இவற்றைப் பெற்றுக் கொள்....''

அவருடைய கைகள் பொற்காசுகளோடு அவனுக்கு முன் நீண்டன. அவன் அவற்றைப் பெற்றுக் கொள்ளவில்லை. அவர் சிறிதும் எதிர்பாராத வேறு ஒரு காரியத்தை அருவாளன் அப்போது செய்தான்.

''ஐயா! பல ஆண்டுகளுக்கு முன் நீங்கள் என்னுடைய இடுப்புக் கச்சையில் அணிவித்த இந்தக் கொடுவாளை இன்று உங்களிடமே திருப்பி அளித்து விடுகிறேன். இத்தகைய காரியங்களைச் செய்யும் துணிவு நேற்றிலிருந்து என்னைக் கைவிட்டு விட்டது. தயைகூர்ந்து என்னை விட்டு விடுங்கள். மறுபடியும் உங்களிடம் நன்றிக்கடன் படச் சொல்லாதீர்கள்'' என்று கூறியவாறே தன் வாளை உறையிலிருந்து கழற்றி அவர் காலடியில் இட்டான் அருவாளன். தொடர்ந்து அவனுடன் அருகில் நின்ற தோழனின் வாளும் அதே போலக் கழற்றப்பட்டு அவருடைய காலடியில் வந்து விழுந்தது.

இப்படிச் செய்து விட்டு அருவாளனும் அவன் நண்பனும் கை கட்டிப் பணிவாக அவரெதிரே நின்றபோது அவர் பெருஞ் சீற்றம் கொண்டார். காசுகளைக் கீழே எறிந்து விட்டுத் தம் ஊன்றுகோலைப் பற்றியது அவர் கை. அவருடைய கால் செருப்பின் கீழ் அவன் எறிந்த வாள் ஓங்கி மிதிபட்டது. அந்த ஊன்றுகோலை ஓசையெழும்படி தரையில் அழுத்தி ஊன்றிக் கொண்டே அருவாளனிடம் சினமாகப் பேசினார் அவர்:

''என்னைப் பற்றி நீ என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நான் விரும்பியபடி நடந்து கொள்ளத் தவறுகிறபோது நீ என் எதிரியாகிறாய் என்பதை மறவாதே....?''

''நாங்கள் யாருக்கும் எதிரியாக இருக்க விரும்பவில்லை, ஐயா! அடிமையாக இருந்துவிடவும் ஆசைப்படவில்லை. எங்களுக்கு விடை கொடுங்கள்'' என்று இப்படிச் சொல்லிவிட்டு அருவாளனும், அவன் தோழனும், அவருடைய விடையை எதிர்பாராமலே விரைந்து அங்கிருந்து வெளியேறி விட்டார்கள். இந்தச் செயல் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எதிர்பாராத இந்த அதிர்ச்சியால் விடிந்து பிறந்து கொண்டிருந்த பகற்போதே திடீரென்று இருண்டுபோய் விட்டாற் போலிருந்தது பெருநிதிச் செல்வருக்கு. அவருடைய நெஞ்சில் கவலைகள் இன்று மீண்டும் பிறந்தன.

23. சான்றாண்மை வீரன்

கப்பலில் காலைக் கதிரவனின் பொன்னொளி பாய்ந்து பரவிக் கொண்டிருந்தது. நீலக் கடற்பரப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காலை வெயிலில் மின்னும் பசுமையான தீவுகள் தென்பட்டன. உடலில் அருவி நீர் சிதறிப் பாய்ந்து நீராட்டுவது போல் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. அப்போதுதான் துயில் நீங்கியெழுந்த பதுமை தனக்கும் முன்பாகவே எழுந்திருந்து தளத்தில் நின்றுகொண்டு கடலையும், கதிரவன் உதிக்கும் காட்சியையும் கவனித்துக் கொண்டிருந்த தன் கணவனருகே சென்றாள். அவளுடைய கை வளைகளும், கால் சிலம்புகளும் கப்பலின் ஆட்டத்தில் நளினமாய் ஒலித்தன. கிழக்கு வானத்தின் இளஞ்சிவப்பும், கடல் நீரின் நீல நிறமும் வண்ணச் சித்திரங்களாய் ஒன்றுபட்டுக் கலக்கும் அழகில் ஈடுபட்டிருந்த மணிமார்பன் தனக்குப் பின்னும் வளையொலியும், சிலம்பொலியும் மெல்லக் கிளர்ந்து ஒலிக்கக் கேட்டுத் திரும்பினான். பதுமை வந்து கொண்டிருந்தாள். கிழக்கே சூரியன் உதயமாவதைப் பார்ப்பதற்காகச் சந்திரன் உதயமாகி எழுந்து வருவதைப் போலப் பதுமையின் முகம் அப்போது மிகவும் அழகாயிருந்தது. தன்னுடைய கற்பனையைத் தன் மனைவி பாராட்ட வேண்டும் என்ற ஆவலோடு அவளிடம் பேச்சுக் கொடுத்தான் அவன்.

''இங்கே கதிரவன் உதயமாகும் அழகைப் பார்க்கலாம் என்று நான் எழுந்து வந்து நின்றேன் பதுமை. இப்போது பின்பக்கம் திரும்பிப் பார்த்தால் குளிர் நிலவு பொழியும் கதிர்களோடு சந்திரன் உதயமாகியிருக்கிறான்! என்ன அதிசயமோ இது!''

அவன் கூறியது புரியாமல், ''எங்கே? எங்கே?'' என்று கேட்டு நாற்புறமும் நோக்கி மருண்டாள் பதுமை.

''எங்கேயா? இதோ.... இங்கே!'' என்று தன் அருகே வந்து நின்ற அவள் முகத்தைத் தொட்டுக் கொண்டே சொல்லிச் சிரித்தான் மணிமார்பன். பதுமை நாணத்தோடு அந்தப் பேச்சை உடனே வேறு கருத்துக்கு மாற்றினாள்.



''இரண்டு மூன்று நாட்களாக எனக்கு நல்ல உறக்கமே இல்லை. உறக்கத்தில்கூட அந்த ஒற்றைக்கண் மனிதரைப்பற்றிய கெட்ட சொப்பனங்கள் தான் காண்கின்றன. அன்றைக்குக் கற்பூர மரக்கலத்தில் தீப்பற்றிய பின் கட்டையைப் பற்றிக் கொண்டு அவர் மிதந்த போது அவரைப் பார்த்ததனால் வந்த வினை இது. நேற்றிரவு மட்டும் அவரைப் பற்றிய கனவில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அந்த ஒற்றைக் கண் மனிதரைப் பற்றிய கனவில் நேற்றைய அனுபவம் மட்டும் எனக்கு ஒரு புதுமை. காட்டு வழியில் ஓர் இடத்தில் நாலைந்து முரட்டுமனிதர்களாகச் சேர்ந்துகொண்டு அவரை அடித்துக் கொன்றுவிடு இருந்போலக்கனவுகண்டேன்.''

''கனவில்தானே அப்படி நடந்தது? உண்மையாகவே அப்படி



நடந்திருந்தால் கூட நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் பதுமை! அப்படி அடிபட்டுச் சாக வேண்டிய பெரிய கொடும் பாவிதான் அவன். ஆயினும் இதற்குள் சாக மாட்டான் அவன். சாவையே ஏமாற்றி அனுப்பி விடக் கூடிய கொடுந் துணிவும் அவனுக்கு உண்டு. அன்று நீயும் நானும் அவன் கடலில் மிதந்து சிரமிந்ததைப் பார்த்தோம் அல்லவா? அப்படி மிதப்பதும், நீந்துவதும்கூட அவனுக்கு ஒரு துன்பமில்லை. அவனும் அவனை வைத்து ஆளும் பெருநிதிச் செல்வரும் தங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கடல் பயணத்திலும், கடல்கடந்து வாணிகம் செய்வதிலுமே கழித்தவர்கள். இந்த இரண்டு மூன்று நாட்களாய்க் கப்பல் பயணம் செய்துகொண்டு வருகிற நாமே இத்தனை யோசனை தூரம்தான் கடக்க முடிந்திருக்கிறது. ஆனால் அந்த ஒற்றைக் கண் வேங்கையோ நீந்தியே பூம்புகாரின் கரைக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்''—என்றான் மணிமார்பன்.

''போதும்! இரையாதீர்கள். அதோ அந்தக் கோடியில் அவர்கள் ஏதோ ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தங்களுக்குள் தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இரைவது, அவர்களுடைய பேச்சுக்கு இடையூறாக முடியலாமோ, என்னவோ?'' என்று சொல்லிக்கொண்டே தன் மனைவி பதுமை அப்போது சுட்டிக் காண்பித்த பகுதியில் பார்த்த மணிமார்பன் பெரிதும் வியப்பு அடைந்தான்.

குளிர்ந்த காற்று வீசும் இந்த வைகறை வேளையில் இளங்குமரனும் வளநாடுடையாரும் எதைப் பற்றி இவ்வளவு ஈடுபட்டுத் தனிமையில் பேசிக் கொண்டிருக்க முடியும் என்று அவனுக்கே புரிந்துகொள்ள முடியவில்லை.

வீரசோழிய வளநாடுடையாரின் முகபாவத்திலிருந்து அவர் இளங்குமரனிடம் ஏதோ கடுமையான விஷயத்தை வற்புறுத்திச் சொல்லிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. இளங்குமரனின் முகமோ மலர்ச்சி குன்றாமலே அவர் கூறுவனவற்றைத் தாங்கிக் கொண்டிருக்கும் சாயலைக் காட்டியது. இடையிடையே அவர் கோபமாகக் கூறுவனவற்றைக் கேட்டு அவன் புன்முறுவல் பூப்பதையும் மணிமார்பன் கவனித்தான். தன் ஆவலை அவனால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. ''பதுமை! நீ

இங்கேயே இரு'' என்று கூறிவிட்டு வளநாடுடையாரும் இளங்குமரனும் பேசிக் கொண்டிருந்த பகுதிக்கு மிக அருகில் ஒரு பாய்மரத்தின் மறைவில் போய்த் தனக்கு அவர்கள் தெரியும்படியாகவும் தன்னை அவர்கள் பார்த்துவிட முடியாதபடியும் நின்று கொண்டான் மணிமார்பன். அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதை அவன் அங்கிருந்து நன்றாகக் கேட்க முடிந்தது. வளநாடுடையார் ஆத்திரத்தோடு இளங்குமரனைக் கேட்டுக் கொண்டிருந்தார்:

''நீ இவ்வளவு பெரிய கோழையாக மாறியிருப்பாய் என்று நான் கனவில் கூட நினைத்ததில்லை தம்பி! நீ சென்று கொண்டிருக்கிற கப்பலையே தீக்கிரையாக்கி அழித்து விடும் திட்டத்தோடு வந்து கொடியவர்கள் தீப்பந்தங்களை வீசும் போது 'நான் அருளாளன். என்னிடம் இதற்கு எதிர்ப்பு இல்லை' என்று நீ எனக்கு மறுமொழி கூறுகிறாய். நடந்து மறந்து போன நிகழ்ச்சியை மறுபடியும் நினைவூட்டிப் பேசுகிறேனே என்று நீ என் மேல் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. எதிர்ப்புக்கு முன்னால் துறவியாக நின்று விடுவதுதான் கருணைமறம் என்று நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய் போல் தோன்றுகிறது. எலாதவர்களிடமும், இயலாதவர்களிடமும் அன்பு செலுத்திக் கருணை காட்டுவதுதான் கருணைமறம். கொடியவர்களை எதிர்க்க வேண்டிய வேளையில் கைகட்டி நிற்பதும் கருணைமறம் காட்டுவதும் உன் ஆண்மைக்கு அழகில்லை.....''

''பெரியவரே! நீங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் அறிவினாலும், மனத்தினாலும் வாழ விரும்புகிறவர்கள் உலகில் புதிய ஆண்மை ஒன்றைப் படைத்திருக்கிறார்கள். அதுதான் சான்றாண்மை. சால்பை ஆள்வது தான் சான்றாண்மை. சான்றாண்மைக் குணத்தை நம்புகிறவர்கள் எதையும் எதிர்ப்பதை வீரமாகக் கொள்வதில்லை. எதையும் பொறுத்து நிற்பதைத்தான் வீரமாகக் கொள்கிறார்கள். எதையும் எதிர்த்துக் குமுறி நிற்பதுதான் வீரமென்று நம்பிக் கொண்டு நான் வாழ்ந்த காலமும் உண்டு. அப்போது உடல் வலிமையை மட்டும் நம்புகிற பேராண்மையாளனாக இருந்தேன் நான். இப்போதோ உடல் வலிமையில் எனக்கு நம்பிக்கை போய் விட்டது. மனத்தின் வலிமைதான் பெரிது என்று எண்ணுகிற சான்றாண்மையாளனாக என்னை மாற்றி விட்டார் இருநாங்கூர் அடிகள். இப்படி நான் சான்றாண்மை வீரனாக மாறியதைத்தானே நீங்கள் பெரிய கோழைத்தனம் என்று குறிப்பிடுகிறீர்கள்?'' எனச் சிரித்தபடியே இளங்குமரன் அவருக்கு மறுமொழி கூறினான். வளநாடுடையார் மீண்டும் அவனைக் கேட்டார்:

''உடம்பின் வலிமையால் பலரை எதிர்க்க வேண்டிய அவசியம் மறுபடியும் உன் வாழ்வில் எப்போதாவது நேர்ந்தால் நீ என்ன செய்வாய்?''

''அப்படிப்பட்ட துன்பங்களினால் என்னுடைய சான்றாண்மை வலுவடையுமே ஒழியக் குன்றாது. துக்க நிவாரணம் தேடும்போதுதான் மனித மனம் பிரகாசித்து ஒளிரும் என்று நான் நம்புகிறேன். பெரியவரே! சுடச்சுட ஒளிரும் பொன்போல் கோபமூட்டத்தக்க வெம்மையான அனுபவங்களிலும், கவலைப் படத் தகுந்த துக்கங்களிலும் வெதும்பி, வெதும்பி இறுதியில் உணர்ச்சிகளைக் கடந்து போய் நின்று ஒளிர்வதற்குப் பழக்கிக் கொள்ள வேண்டும் என்று என் ஆசிரியராகிய இருநாங்கூர்த் தவச் செல்வர் எனக்கு அறிவுரை கூறியிருக்கிறார். கருணைமறமும் கூட அகங்காரத்துக்கு இடமுண்டாக்கலாம். 'நாம் நிறையக் கருணை செலுத்துகிறோம்' — என்று நினைத்து அதனாலேயே மனம் வீங்குவது கூடப் பாவம்தான். கருணை மறவனிலும் மேலே உயர்ந்து சான்றாண்மை மறவனாக எல்லையற்ற நிதானத்தில் போய் நின்று கொண்டு இந்த உலகத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது எனக்கு. இருநாங்கூரில் கற்று நிறைந்த பின் பூம்புகாரின் வீதிகளிலும், சமயவாதிகளின் பட்டி மண்டபங்களிலும், இப்போது, உங்களோடு இந்தக் கப்பலிலும் நான் இருந்து கொண்டிருப்பது கூட உலக அனுபவத்தில் தோய்ந்து தோய்ந்து அதிவிருந்தும் ஞானத்தைக் கற்பதற்காகத்தான். சேற்றில் பிறந்தும் சேறுபடாமல் மேலெழுந்து மலர்கிற தாமரையைப் போல் இந்த உலகியல்கள் என்னை மேல் நோக்கி மலர்விக்கத் துணை புரிய வேண்டுமே ஒழியக் கீழே தள்ளி மறுபடியும் அழுக்கில் புரட்டி எடுத்து விடக் கூடாது.''

இவற்றைச் சொல்லும்பொழுது நேர் கிழக்கே உதித்துக் கொண்டிருந்த சூரியனின் கதிர்கள் எல்லாம் இளங்குமரனின் முகத்தில் பட்டு அந்த அழகிய முகத்தைத் தெய்வீகப் பொற்சுடராக்கின. அந்தக் கணத்தில் அப்படியே கைகூப்பி வணங்கி விடலாம் போலத் தூய்மையாய்த் தெரிந்த அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்த வளநாடுடையாருக்குக் கோபம் வரவில்லை. இனம் புரியாத தயக்கத்தோடு அவர் அவனை நோக்கி மேலும் சிலவற்றை வற்புறுத்திக் கூறினார். (தொடரும்)

கவர்ச்சியாய்
உடையணியும்
சகல காலேஜ் மாணவர்களும்
டினோபாலை
உபயோகிக்
கிறார்கள்!



ஆம்! ஒவ்வொருவரும் டினோபாலையே உபயோகிக்கின்றனர்.

இளைஞர்கள் கவர்ச்சியாய்த் தோன்ற விரும்புகிறார்கள். உண்மையிலேயே வெண்மையான ஆடைகளால்தான் அது சாத்தியமாகிறது. வெள்ளைத் துணிகளை துவைத்தால்மட்டும் போதாது. அவைகளைத் துவைத்தபின் டினோபாலை உபயோகித்து அதனால் ஏற்படும் மாற்றத்தைக் காணுங்கள். டினோபால் மிகச் சிக்கனமானது. ஒரு சிறிதளவே வீட்டுச் சலவை முழுமைக்கும் போதுமானது. இன்றே டினோபால் வாங்குங்கள்.



ஒரு சிறிதளவு **டினோபால்** வெள்ளைத் துணிகளை மிக வெண்மையாக்க போதுமானது.

தயாரிப்பாளர்கள்:
சுஹ்ரித் கெய்கி லிமிடெட், வடு வாடி, பரோடா.

பூரண விநியோகஸ்தர்கள்:
சுஹ்ரித் கெய்கி ட்ரேடிங் லிமிடெட், த. பெ. 965, பம்பாய்.

இன்றைக்குச் சற்று சீக்கிரமாகவே ஆபீஸிலிருந்து வீடு திரும்பி விட்டேன். பஸ்ஸில் இடிபடாமல், ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டுக் கண்டக்டர் சில்லறை கொடுப்பாரா என்ற அவஸ்தை இல்லாமல், செருப்பு காறிறந்து ஒழிபடாமல் 'ஜம்மென்று' சொகுசாய் அவன் காரில் – தப்பு, தப்பு – அவர் காரில் வந்து இறங்கியாகி விட்டது. ஒன்று விட்ட தம்பியானால் இருந்தால்தான் என்ன, அப்படிச் சட்டென்று 'அவன்' போட்டுவிட முடியுமா? பங்களாவும், காரும், வேலையாட்களும்....அடேயப்பா, அவரை 'அவன்' என்று சொல்லத்தான் எனக்கு எவ்வளவு துணிச்சல்! எவ்வளவோ புண்ணியவான், நான் தவம் கிடப்பதைப் பார்த்து விட்டுக் காரை திருப்பி அழைத்துக் கொண்டு விட்டான். "வீட்டுக்குள் வந்து விட்டுப் போலேன்" என்று அரை மனதுடன் கூப்பிட்டேன்... "இல்லே, அடுத்த தெருவில் வேலையிருக்கிறது. முடிந்தால் வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். எனக்கும் நிம்மதியாய்ப் போயிற்று. இல்லாவிட்டால் அந்தப் பத்தடிக் கூண்டுக்குள் ஆறு ஜீவன்கள் முடங்கிக் கிடக்கும் அவலட்சணத்தை விளம்பரப்படுத்தியாக வேண்டும். நம் வீடு என்று சொல்லி நுழைந்து அரை பர்லாங் நடந்தால் தான் உண்மையில் 'நம் வீட்'டுக்கு வர முடியும். வீடாவது, இதையும் வீடு என்று சொல்ல முடியுமா? வெறும் பெயர்தான். பொருத்தம் மாத்திரம் கிடையாது. ஆனால் இந்தக் காலத்தில் எதற்குத் தான் பெயர்ப் பொருத்தம் இருக்கிறது. லட்சமாய்க் தானம் செய்பவரையும் மனுஷன் என்று தான் சொல்கிறோம். காலணா தராத கஞ்சப் பயலையும்தான் மனுஷன் என்று சொல்கிறோம். நாணத்துடன் பண்புடன் இருப்பவளையும்தான் பெண் என்று சொல்கிறோம். நாணமிழந்து... அவளையும் அப்படித்தான் அழைக்கிறோம்.

போகட்டும். அதனால்தான் தைரியமாக இந்த எலி வளையை என் வீடு என்று சொல்லிக் கொண்டேன். அந்த வீட்டில் பதினெட்டுப் பேர்கள் குடியிருந்தார்கள். வீட்டுக்காரர் போன மாசம் வாசல் திண்ணை உடைந்து போன போது அதற்காக எங்களிடத்தில் ஒப்புக்கு அழுது விட்டு அந்த இடத்திலேயும் குறுக்குச் சுவர் ஒன்றைக் கட்டி மாசத்துக்குப் பதினேழு ரூபாய் வரும்படியைத் தேடிக் கொண்டார். பதினெட்டுப் போர்ஷனில் வாடகை வருகிறதே. இந்த இடத்திலேயும் ஒரு பொந்தைக் கட்டி வாடகை வாங்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்கிறீர்களா? ஆசை ஐயா, ஆசை. பணம் என்றால் எவனுக்குத்தான் ஆசை இல்லே. எனக்கு இல்லையா? நெஞ்சைத் தொட்டுச் சத்தியம் பண்ணிச் சொல்லுங்கள், உங்களுக்குப் பணத்தின் மீது ஆசை இல்லையா? நாமெல்லோரும் சொல்லிக் கொள்வோம், 'எல்லாம் இந்த வயிற்றுக்காகத் தானே சார் உழைக்கிறோம்' என்று. ஆனால் அதுவா உண்மை? அது உண்மையாயிருந்தால் நேற்று என் குழந்தைகள் வெறும் பழைய சோற்றைச் சாப்பிட்டு விட்டுத் தூங்கும் நிலை ஏற்பட்டிருக்குமா? ஒரு சாண் வயிற்றுக்காக உழைக்கிறோம் என்று சொல்வது மனமறிந்த பொய். நன்றாக உடுக்க வேண்டும் என்று ஆசை. உல்லாசமாக இருக்க வேண்டும் என்று ஆசை. சொந்தவீட்டுக்கு ஆசை. காருக்கு ஆசை. இவற்றுக்காக உழைக்கிறீர்கள். ஆனால் ஒரே வேலைகள் முடிந்த பிறகு, முடிந்த பின்னர் வரவு செலவைப் பார்த்துக் கணக்கை இழுத்து மூடி வைத்த பிறகு, ஒரே வார்த்தையில் 'எல்லாம் இந்த வயிற்றுக்காகத்தானே உழைக்கிறோம்' என்று சொல்லி விடுகிறீர்கள். வீட்டுக்காரர் திண்ணையை என்னைப் போன்ற ஒருவனுக்கு மாளிகையாக மாற்றித் தந்தது இயற்கை தான் என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்ளுங்கள்.

அந்த அந்தப் போர்ஷனுக்கு முன்னே இருந்த நாலடி இடத்தை மைதானமாக்கி விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளையும் அந்தப் பதினெட்டு வீட்டுக்கும் பொதுவாய்ப் பகையில்லாத ஜன்மமாய் இருக்கும் நாயையும், அதன் குடும்பத்தையும் ஜாக்கிரதையாகத் தாண்டிக் கொண்டு வந்தால் பதினெட்டாவது போர்ஷனுக்கு வந்து



குறைவும் நிறைவாமோ!

விடலாம். 'சொர்க்கம் போவதுதான் கஷ்டம், நரகத்துக்கு எவரும் போய்விடலாம்' என்று எவரேனும் கூறினால் அவர் மண்டையிலடித்து 'என் வீட்டுக்கு வர வேண்டிய வழியைப் பார்த்து விட்டு அப்புறம் பேசுங்கள்' என்று சவால் விடலாம்.

இவற்றை யெல்லாம் தாண்டிக் கொண்டு என் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தேன். சாரு — என் 'அவள்' நான் என்றுமில்லாமல் அன்று சீக்கிரம் வந்து விட்டேனே என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள். ராமு—என் ஒன்று விட்ட சகோதரன் — கொண்டு விட்டதைச் சொன்னேன்.

''இங்கேபாருங்கள். உங்கள் மாமா கையில் தம்படி கிடையாதென்று எழுதி யிருக்கிறார்'' என்று அவள் என்னிடம் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள். அதிலிருந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்ட பின்னர் கடிதத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன? விஷயமில்லாமல் கடிதம் எழுதினாலும் மனைவி எழுதினால் படிக்கலாம். பணம் அனுப்புகிறேன் என்று நேரில் வந்த போது சொல்லி விட்டு ஊருக்குச் சென்று சொந்த வீட்டுக்குள் புகுந்துகொண்டு நம் காலை வாரி விடுகிறவரின் முத்தான எழுத்தை ரசித்துப் பார்க்கவா கடிதத்தைப் படிக்கப் போகிறோம்?

'கடிதத்தை நீயே வைத்துக் கொள்' என்று அவளிடமே அதைக் கொடுத்தேன். அதை வாங்கி வைத்து விட்டு என்னருகில் வந்து நின்றாள்.

''குழந்தைகள் இன்னும் நச்சரிக்கின்றன..''

அவள் தயங்கினாள். எனக்கு உள்ளூறக் கோபம் எரிமலையாக வளர்ந்தது.

''பார்வதிக்குச் சரியாகப் பாவாடை கிடையாது... கொஞ்சம் கிழிந்தாலும் பரவாயில்லை என்று ஒன்றும் சொல்லாமல் போட்டுக் கொண்டு விடுவாள். ஆனால் அது ....''

சே, எப்போதும் இந்தத் தொந்தரவுதானா?

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே பார்வதியும் —என் மூத்த பெண், ஒன்பது வயது— கிட்டுவும் ஓடி வந்தனர். அவர்களைத் துரத்திக் கொண்டு தளர்நடையுடன் கடைசிப் பையன் கோபாலன் ஓடி வந்தான்.

''அப்பா, வந்தித்தா, அப்பா வந்தித்தா'' என்று கோபாலன் என் முழங்காலைக் கட்டிக் கொண்டான். கிட்டுவும் மெல்ல என்னருகில் வந்து கையைப் பிடித்துக் கொண்டான். பார்வதி அவள் அம்மாவிடம் நின்று கொண்டாள். அவள் என்னிடம் பயந்தாளோ. என்னவோ பழக மாட்டாள்.

''அப்பா, எதிர் வீட்டு சுப்புமணி சைக்கிள் வாங்கியிருக்கான். அப்பா எனக்கு ஒண்ணு வாங்கித்தா...'' என்று கிட்டு என் முகத்தைப் பார்த்துக் கேட்டான். எனக்கு ஏற்கனவே இருந்த கோபம் அதிகமாயிற்று.

''நீ இருக்கிற இருப்புக்குச் சைக்கிள்தான் குறைந்து போய் விட்டதாக்கும்...'' என்று அவனை நகர்த்தினேன்.

பார்வதி மெல்ல அவளிடமிருந்து என்னிடம் வந்து, ''அப்பா...!'' என்று தயங்கியபடியே நின்றாள்.

''என்ன?''

''ஒண்ணுமில்லே ... வந்து ... வந்து ... பாவாடை கிழிஞ்சு போச்சு.... தையல் போட்டா நிக்கலே....''

''இங்கே வா. என்ன சொன்னே?''

''பாவாடை.....''

அடுத்த கணம் பளீர் என்று அவள் கன்னத்தில் அறைந்தேன். அவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்த கோபம் அனைத்தும் சேர்ந்து அவள் கன்னத்தில் பதிந்தது. ''மனிதன் ஆயிரம் தொல்லையில் அவதிப்பட்டுக் கிடக்கும்போது பாவாடையாம், பாவாடை....''

சாரு உடனே வேகமாக ஓடி வந்து பார்வதியைத் தன்னிடத்தில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''என் குழந்தையை அடித்துக் கொல்கிறீர்கள்... அவளுக்கு மட்டும் என்ன, எனக்கும் தான் புடவை நைந்து....''

''நீயும் ஆரம்பித்து விட்டாயா?'' என்று கோபத்துடன் எழுந்தேன். அப்போது ''சார்! உங்களைத் தேடிக் கொண்டு காரில் யாரோ வந்திருக்கிறார்'' என்று குரல் கேட்டது.





உங்கள் குழந்தை

ஆரோக்கியமாக வளரவேண்டும்.

அவன் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலை வேண்டும்.

அவனை நல்லபடி வளர்த்து ஆளாக்கிவிடப்
போதிய பண வசதி வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் நலனை கவனிக்க போதிய
நேரம் உங்களுக்கு இருக்க வேண்டும்.

நீங்களும், உங்கள் மனைவியும், மக்களும் ஆனந்த
மான ஆரோக்கிய வாழ்க்கை வாழவேண்டும்.

என்று விரும்புகிறீர்கள் அல்லவா? அப்படியானால்

அருகிலுள்ள அரசாங்கம் அங்கீகரித்துள்ள

குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கு

சென்று ஆலோசனை பெறுங்கள்

DA 61/578

சட்டென்று குரலை அடக்கிக் கொண்டேன். ''சரி சரி. சற்று எல்லோரும் குறைகளைச் சொல்லி அழுவதை நிறுத்துங்கள். வேலை முடித்துப் வந்தாலும் வருவேன் என்று சொன்ன ராமு வந்தே விட்டான் போலிருக்கிறது'' என்று சொல்லி விட்டுப் பல்லைக் கடித்து விரலை உதட்டில் அழுத்திக் குழந்தைகளைப் பயமுறுத்திவிட்டு வெளியேறினேன். வெளியே வருமுன்னர் எல்லோர் முகத்தையும் பார்த்தேன். பயத்தில் எல்லோரும் ஒடுங்கிப் போயிருந்தனர். பார்வதி முழங்கையால் எனக்குத் தெரியாமல் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

வெளியே வேகமாக வந்தேன்.

ராமுவேதான் வந்திருந்தான்; கூட அவன் மனைவியும் வந்திருந்தாள். எனக்கு நிலை கொள்ளவில்லை. ''வா...வாருங்கள் உள்ளே வாருங்கள்'' என்று உள்ளே அழைத்தேன். ஒண்டுக் குடிகள் எல்லோரும் கார்க் கதவுச் சத்தம் கேட்டுத் தலையை நீட்டினர். குழந்தைகள் விளையாட்டுக்கு 'இண்டர்வெல்' விட்டு விட்டு வாசலில் வந்து நின்று கொண்டனர்.

''ஆ ... தள்ளிப் போ .... வழி விடு'' என்று என்னாலான மட்டும் ராமுவின் காதில் படாதவாறு குழந்தைகளை விரட்டி விட்டு என் போர்ஷனுக்கு அவர்களை அழைத்துச் சென்றேன். ''ஹி...ஹி...மிகவும் சின்ன வீடு தான் நான் இருப்பது....'' என்று பீடிகை போட்டுக் கொண்டே குழந்தைகள் அழுது கொண்டிருக்குமே என்று 'திக் திக்' என்று மனம் அடித்துக் கொள்ள உள்ளே நுழைந்தேன்.

ஆனால் நான் எதிர்பார்த்தபடி இல்லாமல் அந்த ஒரு நிமிஷத்தில் எல்லோரும் மாயஜாலம் போலப் பளிச்சென்று இருந்தார்கள். பார்வதியும் அவளும் முகத்தைக் கழுவிப் பவுடர் போட்டுக் கொண்டு ...கிட்டுவுக்குச் சலவை செய்த சொக்காய்.... குழந்தை கண்களில் மை. ஆணியில் ஒரு நிமிஷம் முன்னே தொங்கிய கூடையையும், அழுக்கடைந்த பையையும் இப்போது காணோம்.

எனக்கு ஒரே ஆச்சரியம்.

''வாருங்கள். உட்காருங்கள்'' என்று அவன் ராமுவின் மனைவியைப் பாயை விரித்து உட்கார வைத்தாள்.

''நான் இதற்கு முன் வந்ததே இல்லை. இவன்தான் உன் பையனு?'' என்று ராமு கேட்டான்.

நான் கோபாலனை மடியில் தூக்கி வைத்துக் கொண்டேன். ராமு கிட்டுவைத் தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

''உன் பேர் என்னடா?''

''கிட்டு ....?''

''படிக்கிறாயா?''

''நான் நாளைக்குத்தான் சேரப்போகிறேன். நாளைக்குச் சேர்க்கறேன்னு அப்பா சொல்லியிருக்கா ... ''

இதைக் கேட்டு விட்டு ராமு பெரிதாகச் சிரித்தான்; என்னைப் பார்த்து ''என்னடா அப்படியா சொன்னும்?'' என்று கேட்டான்.

''ஆமாம்! இந்த வருஷம் சேர்க்கலாம் என்றிருந்தேன் .....''

அதற்குள் பார்வதி குறுக்கிட்டு, ''அவனுக்கு வயசு போதாதுன்னு ஸ்கூல்லே சொல்லிட்டா. அதனாலே அடுத்த வருஷம் சேர்க்கணும்'' என்று சொன்னாள். நான் திடுக்கிட்டேன். நான் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்காததற்குக் காரணம் என் நிலைமை யதுவிர...

''ஓஹோ...உன் பேர்தான் பார்வதியா?'' என்று சொல்லிக் கொண்டே அவளை அழைத்தான் ராமு. அவள் என்னைப் பாராமலேயே அவனிடத்தில் சென்றாள்.

''நீ எந்த வகுப்புப் படிக்கிறாய்?''

''நாலாவது ... ''

''நாலாவது வகுப்புக்குப் பென்சிலா, பேனாவா?''

''பென்சில்தான்......சிலேட்டிலே எழுதறத்துக்குச் சிலேட்டுக் குச்சு .... ''

''எங்கே, உன் பென்சிலைக் காண்பி, பார்ப்போம்...!''

இப்படி ராமு கேட்டவுடன் அவள் தயங்கினாள். நான்கு நாட்களாக அவள் பென்சிலுக்காக அம்மாவிடம் சொல்லி வருகிறாள். நான் இன்னமும் வாங்கித் தரவில்லை.

''என் பென்சிலா கேக்கறேள்? பக்கத்திலே இருக்கிற ரங்கன் கேட்டான், கொடுத்தேன். பாவம், சாயங்காலம் என்கிட்டே வாங்கி எழுதிட்டுக் கார்த்தாலே தந்துடுவான். அவன் அப்பா அவனுக்கு வாங்கிக் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டார்.''

எனக்குச் சுரீர் என்றது. வாங்கிக் கொடுக்காததை வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லி..

''குழந்தைக்கு நல்ல பாவாடையாக வாங்கித் தரக் கூடாதா?'' என்று என்னைக் குறை சொல்லுவது போலக் கூர்ந்து பார்த்துச் சொன்னான் ராமு.

"எனக்கு நிறைய பாவாடை இருக்கு. சித்தப்பா. தினமும் பள்ளிக்கூடம் போகும் போது கட்டிப்பேன். பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும்.."

அவளால் மேலே பேச முடியவில்லை. எனக்கு மட்டும் தெரியும். அவள் உதடுகள் இறுக்கிக் கொள்கின்றன என்று.

"உனக்கு என்னடா வேண்டும் கண்ணு!" என்று பிட்டுவின் கன்னத்தைச் செல்லமாக நிமிண்டினான் ராமு.

"எனக்கு எங்க அப்பா நாளைக்குச் சைக்கிள் வாங்கித் தரேன்னு சொன்னார். 'நாளைக்குத் தானே அப்பா ...." என்று சொல்லி நம்பிக்கையுடன் என்னைப் பார்த்தான் பிட்டு. 'ஆமாம்' என்று தலையசைத்தேன்.

"ஆமாம், நாளைக்கு எங்க அப்பா சைக்கிள் வாங்கித் தரப் போகிறார்..." என்று பெருமையுடன் சொன்னான். நான் அவனை மேலும் அணைத்துக் கொண்டேன்.

சிறிது நேரத்தில் இருவரும் கிளம்பி விட்டனர். நான் காரிலே அவர்களுடன் சென்று அவர்கள் வீட்டையும் பார்த்துவிட்டு வந்தேன். என் மனமெல்லாம் வீட்டிலேயே இருந்தது.

நான் திரும்பிய போது குழந்தைகள் எல்லோரும் தூங்கி விட்டிருந்தார்கள். பார்வதி தன் இரு பக்கத்திலும் கோபாலனையும் பிட்டுவையும் படுக்க வைத்துக் கொண்டிருந்தாள். சாரு உள்ளே இருந்தாள்.

"சாரு...!" என்று மெல்ல அழைத்தேன். "நான் ராமுவையும் அவன் மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்தபோது பயந்து கொண்டே வந்தேன்...."

அவள் விசும்பினாள்.

எனக்கும் தொண்டை அடைத்துக் கொண்டது.

"குழந்தையை அடித்தீர்களே. பாவாடை கேட்டதென்று ...."

"சாரு ... தெரியாமல்தான் அடித்தேன்.. அத்தனைக்கும் அவள் அவனெல்லாம் வந்த போது முக மலர்ச்சியோடு என்னவோ நான் அவளை எல்லா நிறைவோடும் வைத்திருப்பது போல் ....."

"அப்படிச் சொல்லாதீர்கள் ...." என்று அவள் என் வாயைப் பொத்தினாள்.


"நாம் என்றும் நிறைந்தவர்கள். நிறையும் குறையும் பணத்திலேயா இருக்கிறது என்று நினைக்கிறீர்கள். குழந்தைகள் யாரிடம் போய்த் தன் குறையைச் சொல்லும்? நான் தான் யாரிடம் போய் என் குறையைச் சொல்வேன்? என் குறைகளையும், நிறைவுகளையும் உங்களிடத்தில்தான் சொல்ல முடியும். நிறைவுகளை யாரிடத்தில் சொல்லி உங்களிடத்தில் சொல்லா விட்டாலும் சரி, உங்கள் குறைகளை யெல்லாம் உங்களிடத்தில் மட்டும்தான் சொல்ல முடியும். குறைகளைச் சொல்லிக் கொள்வதில்தானே உண்மையான உறவு இருக்கிறது? ஆண்டவனிடம் கூட அவன் நெருங்கியவன் என்று குறைகளை யெல்லாம் சொல்லித் தீர்க்கிறார்கள். எங்களுக்கு நீங்கள்தான் தெய்வம்...."

அவள் மாலையாய்க் கண்ணீர் உகுத்தாள்.

"போதும் சாரு ... போதும்."

உறவை இறுகச் செய்வதுதான் குறைகளைப் பரிமாறிக் கொள்வதிலேயே என்பதை உணர்ந்து கொண்டேன்.

சூழ்நிலையை ஒட்டியே எதுவும் மதிப்பிடப்படுகிறது



ப்ரௌன் & போல்ஸனின் கஸ்டர்ட் என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்





ப்ரௌன் & போல்ஸனின் கஸ்டர்ட் வழவழப்பானது, சத்துள்ளது, ருசியானது. டார்ட்டுகள், ஜெல்லிகள், கேக்குகள், புட்டிங்கு, பேஸ்ட்ரீ ஆகியவற்றிற்கு அது சுவை கூட்டுவதுடன், சாப்பிடத் தூண்டும் வகையில் அவை அமைய உதவுகிறது. ப்ரௌன் & போல்ஸனின் கஸ்டர்ட் பவுடரிலிருந்து சுவைமிக்க புட்டிங்குகள் செய்ய அவசியமான சாதாரண கஸ்டர்ட் கிடைக்கிறது. அல்லது ப்ரௌன் & போல்ஸனின் வெரைடி கஸ்டர்ட் பவுடரிலிருந்து உங்கள் அபிமான ருசிக்கேற்றபடி தேர்ந்தெடுக்கலாம். ஒரே பெட்டியில் ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ராஸ்பெர்ரி, வனில்லா ஆகிய ஆறுவித சுவைகள் அடக்கப்பட்டு வருகின்றன. இவ்விருவித பவுடர்களிலுமே முட்டைகள் கிடையாது. ப்ரௌன் & போல்ஸனின் கஸ்டர்ட் பவுடர் 1 பவு. 7 பவு. டின்களிலும், வெரைடி கஸ்டர்ட் பவுடர்கள் 6 பைண்ட் பாக்கெட்டுகளிலும் கிடைக்கின்றன.

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.,

இலவசம்

இக்கூப்பனைப் பூர்த்திசெய்து, ப்ரௌன் & போல்ஸன் பிளெயின் கார்ன் ப்ளவர் அல்லது வெரைடி கஸ்டர்ட் பவுடர் பாக்கெட்டிலுள்ள 5 உள்ளுறைகளை இத்துடன் இணைத்து அனுப்பி, ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், உருது, வங்காளி அல்லது மராத்தி மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள சுவைமிக்க சமையல் புத்தகம் ஒன்றை, மொழியைக் குறிப்பிட்டுப் பெறவும்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/குமாரி ....

....


விலாசம் ....

....

டிபார்ட்மெண்ட் நெ. KLK 8

கார்ன்ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.,
தபால் பெட்டி நெ. 994, பம்பாய்—1.
இச் சலுகை இந்தியாவிலுள்ளவர்க்கு மட்டுமே.


பவழத்தீவு
கதை: வாண்டு மாமா
சித்திரம்: ரமணி..
5
ஜம்பு, இத்தனை அவசரமாக என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகிறாய்?
மரங்களின் வழியே தாவிப் போகலாம். அப்போதுதான் சீக்கிரமாகப் போய்ச் சேர முடியும்.
இதற்குத்தானா என்னைக் கூட்டி வந்தாய், ஜம்பு. அவன் எழுந்திருக்க முடியாமல் தள்ளாடுகிறான். போய் உதவலாம் வா!
அலைகளால் கரையில் ஒதுக்கப்பட்ட ஆனந்தனுக்குக் கந்தனின் உதவியால் நினைவு திரும்புகிறது.
கந்தனும் ஜம்புவும் பலஹீனமான நிலையிலுள்ள ஆனந்தனைத் தாங்கிப் பிடித்தபடி அழைத்து வருகின்றனர்.
ஜம்பு, நீ இங்கேயே காவலாக இரு. இவனுக்கு இன்னும் சரியாக நினைவு திரும்பவில்லை. நான் போய் ஆகாரத்துக்குப் பழங்கள் கொண்டு வருகிறேன்.


மழைத் துளிகள் விழுகின்றன. பெரு-மழையாகப் பிடித்துக் கொள்ளு முன் திரும்பி விட வேண்டும்..
கானகத்தையே-கிடு கிடுக்க வைக்கி றது இடியும் மின்ன லும். பெருமழையும் பேய்க் காற்றும்..
மரங்களை முறித்துச் சாய்க்கின்றன.
ஒரு மரத்தின் வேர் தடுக்கத்-கந்தன் கீழ விழுகிறான். அவன் மீது
ஒரு பெரிய மரம் முறிந்து விழுகிறது.
திடீரென்று வந்த-மழையும் சடே-ரென்று நிற்கிறது.
கந்தனின் தோழர் -கள் கவலை யோடு தேடுகின் றன.


அவைகளுக்கு வியப்பளிக்கும் படியாகக் கந்தனின் தலை மெள்ள எட்டிப் பார்க்கிறது....
என்னைக் காணுமல் ரொம்பவும் கவலைப்பட்டு விட்டீர்களா? நல்ல வேளையாக மரம் என் மீது நேரடியாக விழவில்லை.
நல்ல சுவையான பழங்கள்.
மணி மணி! எழுந்திருந்து விட்டாயா? இம்பு எங்கே? அந்தப் புதிய-அருக்கு மயக்கம் தெளிந்து விட்டதா?
யார் இவன்? உருவத்தைப் பார்த்தாலே உள்ளத்தில் உற்சாகம் பிறக்கிறதே. விநோதமான இடம், விலங்குகளின் தோழமை!
கந்தன் ஆனந்தனின் பசிக்குப் பழங்களை வைத்து உபசரிக்கிறன்.
என்னைப் பற்றி ஏதுமே கேட்க வில்லையே!

திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

43

இறைவனுடைய திருவருள் வெறும் புஸ்தகப் படிப்பினால் சித்தித்து விடாது. இறைவனுடைய தன்மைகள், ஏட்டிலே எழுதி வைத்திருப்பதைப் படிப்பதனால் மட்டும் என்ன பயன்? ஆசாரியன் நேரிலே வந்து கூட்டுவிக்க வேண்டிய அனுபவம் அது. இந்த உண்மையைத் திருமூலர் பாடுகிறார்.

காட்டும் குறியும்
கடந்தவர் காரணம்

[காட்டு - எடுத்துக் காட்டு, உதாரணம். குறி-அடையாளம். கடந்தவர் - இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டவராகிய இறைவன். காரணம் - மூலப் பரம் பொருள்.]

இறைவனுக்கு உபமானமாகச் சொல்லக்கூடிய எடுத்துக் காட்டான பொருள் கிடையாது. அடையாளம் சொல்லவும் இயலாது. உதாரணமும் குறியீடும் கடந்தவர் கடவுள்!

காட்டும் குறியும்
கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில்
எழுதிவைத்து என்பயன்?

[ஏட்டின் புறத்தில் - ஏட்டின் மீது அதாவது புத்தகத்தில். என் பயன் - என்ன பயன், பயன் ஏதுமில்லை.]

தெய்வத்தைப் பற்றியும், கடவுளை அடையும் வழி வகைகளையும் ஏட்டிலே எழுதி வைப்பதால் மட்டும் நமக்குப் பயனில்லை.

கூட்டும் குருநந்தி
கூட்டி டின்அல்லது

[கூட்டும் குருநந்தி-தெய்வ அருளைக் கூட்டுவிக்கிற குருவாகிய நந்தி பெருமான். கூட்டிடின் அல்லது - அவனே ஆசாரியனாக எழுந்தருளி வந்து அந்தத் திருவருளைக் கூட்டுவித்தால் அல்லாமல்.]

இறைவனே குரு உருவத்தில் வந்து, ஞானத்தை உபதேசித்து, அவனுடைய அருளை நமக்குக் கூட்டுவித்தாலன்றி, புத்தகத்தில் எழுதி வைத்துள்ள அறிவானது,

ஆட்டின் கழுத்தில்
அதர்இடந் தற்றே

[ஆட்டின் கழுத்தில்-ஆட்டினுடைய கழுத்திலே. அதர் - அதர் என்று அழைக்கப்படுகிற தொங்கு சதை; பால்தரும் மடியைப் போல் தோற்றம் காட்டுகிற பயனற்ற சதை. இடந் தற்றே - தொங்கிக் கொண்டிருப்பது போலத்தான். அற்றே-போலத்தான்.]

புத்தகங்களின் மூலம் நாம் கடவுளைப் பற்றி அடைகிற அறிவு, ஆட்டின் கழுத்திலே தொங்கும் சதை போலத்தான்! அதைக் கொண்டு ஞானமாகிய பாலைக் கறக்க முடியாது. மடியில் பால் சுரக்கும்படி செய்யக் கூடியவன் ஆசாரியன் ஒருவனே. வெறும் புத்தகப் படிப்பு என்பது பயனற்ற அதரைப் போலத்தான்.

காட்டும் குறியும்
கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில்
எழுதிவைத் தென்பயன்
கூட்டும் குருநந்தி
கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில்
அதர்இடந் தற்றே!

இந்தச் சரீரத்தைக் கொண்டு தெய்வப் பேரின்பத்தை அடைகிற ஒரே வழி. ஞான கோல்கொடு உள்

முகமாக ஆன்ம உணர்விலே தியானம் லயித்து யோகத்திலே அமர்வதுதான். இந்த ஆன்ம யோகத்தின் சுகத்தைப் பூரணமாக அனுபவித்த திருமூலர் அதை எப்படி வெளியிட்டுச் சொல்வேன் என்று பரவசத்தோடு ஓர் உபமானம் காட்டுகிறார்.

முகத்தில் கண்கொண்டு
காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு
காண்பதே ஆனந்தம்

[முகத்தில் கண்கொண்டு-புறக் கண்ணாகிய இந்த வெளிப் பார்வையைக் கொண்டு இதனால். காண்கின்ற மூடர்காள் - புறக்காட்சிகளைப் பார்க்கிற அறிவிலிகளே. அகத்தில் கண்கொண்டு - உள்முகமாகப் பார்வையைச் செலுத்தி. காண்பதே ஆனந்தம்-உணர்வு நிலையிலே தரிசனம் செய்வதுதான் ஞானானந்தம்.]

இனி, இந்தச் சுகத்தை எப்படி வெளியிட்டுச் சொல்வது! தானே அனுபவித்துப் பார்க்க வேண்டிய ஓர் அநுபூதி அல்லவா அது!

மகட்குத் தாய்,தன்
மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால்
சொல்லுமாறு எங்ஙனே

ஒரு பெண் தனது கணவனோடு அனுபவித்த இன்பத்தை, திருமணப் பருவத்தை அணுகி நிற்கும் சிறுமிக்கு எடுத்துச் சொல்வது அசாத்தியம். அதுபோல இந்தக் கடவுளின்பத்தையும், அந்தந்தப் பக்குவ நிலையில் அவரவர் ஞானமுதிர்விலே தாமாக சுவானுபவமாக அனுபவிக்கவேண்டும்.

முகத்தில் கண்கொண்டு
காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு
காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன்
மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால்
சொல்லுமா றெங்ஙனே!

ஆனாலுமென்ன? ஸரளா முதன் முதலில்
அணிந்தபோதிருந்த அதே புதுக் கருக்கு...
அதே முறுக்கு ... அதே வர்ண எழில்!
பினிக்ஸ் வாயில் என்றால் கேட்கவும் வேண்டுமா?
காலமெல்லாம் உழைக்கும், கலப்பற்ற, மென்மையான
வாயில்களைத் தயாரிக்கிறது பினிக்ஸ்.
வியக்கத்தக்க வகைவகையான பிரிண்டுகள்...
அழியாத வர்ணங்கள்...அருமையான அமைப்புக்கள்...
இஷ்டத்திற்குத் தேர்ந்தெடுக்கலாம். சுருங்கவும்
சுருங்காது. விலையும் சிக்கனமானது. ரூ. 2-10 லிருந்து
ரூ. 2-18 வரையில் உள்ளது. குடும்பத்திலுள்ளோர்
அனைவருக்குமே தகுந்த பினிக்ஸ் பாப்ளின்கள்
வேறு உண்டு.

இந்த வாயில் புடவை 27 தடவைகள்

சலவை செய்யப்பட்டுள்ளது!

பினிக்ஸ் மில்ஸ்

ஒரு ரூயா ஸ்தாபனம்.

மதுரை, சென்னை, பெங்களூர், லக்னௌ, பூனா, கான்பூர், பம்பாய் ஆகிய ஊர்களில் ரூயா கடைகள் உள்ளன.



RPY-3



பார்த்தால் பசிதீரும்

காந்தன்

தலைப்பைக் கண்டு பலரும் மனம் குழம்புவார்கள். ஆனால் உண்மையில் இதில் குழம்புவதற்கு ஒன்றும் இல்லை. ஏதோ படம் என்று ஒன்றை எடுத்தால் அதற்குப் பெயர் என்று ஒன்று வைத்தாக வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான். படத்துக்கும் பசிக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை. இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், நல்ல படம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பசியோடு போய்ப் படத்தைப் பார்த்து விட்டு, பசி தீரவில்லையே என்று குறை கூறக் கூடாது! பார்த்த மாத்திரத்தில் பசி தீர்ந்து போகும்படியாகப் படத்தில் எதுவும் இல்லை. படத்துக்குப் பொருத்தமான தலைப்பைப் போடுவதாக இருந்தால், நட்பின் பெருமையைக் குறிக்கும்படியான ஒரு தலைப்பைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இரு நண்பர்கள் இறுதி வரையில் இணைந்து வாழ்ந்த கதைதான் ஜி. கே. புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'பார்த்தால் பசி தீரும்'.

பாலுவும் வேலுவும் இணைபிரியா நண்பர்கள். இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற போது அவர்கள் இருவரும் விமானப் படையில் விமானிகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஒரு நாள் விமானம் விபத்துக்குள்ளாகிறது. வேற்றுமொழி பேசும் குழுவினரிடம் புகலிடம் கிடைக்கிறது. வேலுவுக்கு இந்திரா என்னும் இளநங்கையின் காதலும் கிடைக்கிறது. பாலு பகைவர் கையில் சிக்கி விடுகிறான். பாலுவைப் பிரிந்த வேலுவும் இந்திராவும் அந்நாட்டு முறைப்படி மணந்து கொள்கின்றனர். மணம் முடிந்த சில நாட்களில் வேலு மீண்டும் விமானப் படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே இந்திராவை விட்டுப் பிரிந்து செல்கிறான். அப்போது அப்பகுதி விமானத் தாக்குதலுக்கு உள்ளாகிறது. அதில் பார்வை இழந்த இந்திரா தன் ஆண் குழந்தையுடன் வெளியேறி வேலுவைத் தேடி அலைகிறாள். பாலு தற்செயலாக அவளைச் சந்திக்கிறான். எப்படியாவது வேலுவைக் கண்டுபிடித்து அவனிடம் சேர்த்து விடுவதாகக் கூறி அழைத்துச் செல்கிறான். இந்திரா இறந்து விட்டதாகக் கருதிய வேலு மறுமணம் புரிந்து கொண்டு ஒரு மகனுக்குத் தந்தையுமாகிவிட்ட உண்மை பாலுவுக்குப் பிறகுதான் தெரிய வருகிறது. வேலுவின் காரியாலயத்திலேயே பாலுவுக்கு உயர்ந்த பதவி கிடைக்கிறது. ஆனால் வேலுவையும் இந்திராவையும் சேர்த்து வைக்க முடியாத நிலைமை பாலுவை அமைதியிழக்கச் செய்கிறது.

ஜெமினி கணேசன்தான் வேலு. அவருக்கு இந்தப் படத்தில் நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. ஆரம்பக் காட்சியிலேயே ந[illegible] திலகம் வேலுவைத் தோளில் தாங்கிக் கொ[illegible]டு ஓடுகிறாரே! அது கிடைத்தற்கரிய சந்தர்ப்பம் இல்லையா? தமிழ் தெரியாத இந்திராவைக் காதலிக்கிற கட்டங்களிலும், பாலுவைப் பிரிந்து விம்மும் போதும் ஜெமினி கணேசன் நன்றாய் நடிக்கிறார். அனேகமாகப் படங்களில் ஜெமினி கணேசன் ஏற்கும் பாகங்களுக்கு இரு மனைவியரை ஏற்கும் கஷ்டம் வருவதுண்டு. அந்தக் கஷ்டங்களைச் சமாளித்து அவருக்குப் பழக்கமாகி விட்டது. இதிலும் அந்தக் கஷ்டம் வந்து தொலைக்கிறது. தன் அன்புக்குரிய இந்திரா உயிருடன் இருக்கிறாள் என்று அறிந்து வேலு துடித்த போதும், தன் இரண்டாவது மனைவியின் சந்தேகங்களைச் சரியான முறையில் தீர்த்து வைக்கமுடியாமல் திகைத்த போதும் ஜெமினி கணேசன் திகைத்துப் போய் விடாமல் சிறப்பாக நடிக்கிறார்.

சிவாஜி கணேசனுக்குப் பாலுவின் பாத்திரம் மிகவும் பொருத்தமாக இருக்கிறது. துப்பாக்கி குண்டு பட்டு ஒரு கால் ஊனமுற்ற பாத்திரம் பாலுவினுடையது. ஆனால் அது சிறிதும் ஊனமுறாமல் நடித்திருக்கிறார் சிவாஜி. வேலுவின் தங்கை சரோஜாவின் காதல் கிடைத்த போதும் பாலு அதைப் பெரிதாய்க் கருதி விடாமல் அடக்கமாக நடந்து கொள்வது இதமாயிருக்கிறது. வேலுவின் இரண்டாவது மனைவி கடுமையாக ஏசிப் பேசி விரட்டியடித்த போது பாலு தணிந்து போனதும், வேலுவின் வாழ்வு பாழாகி விடக் கூடாது

என்பதற்காக அவன் பட்ட சிரமங்களும் படத்தின் நல்ல அம்சங்கள்.

திரைக் கதைக்குத் திருப்பம் தருவது சரோஜாவின் பாத்திரம். அதை ஏற்றிருப்பவர் பி. சரோஜா தேவி. அன்னும் அழகு நடிப்புக்கும், அன்னும் நடனங்களுக்கும் கேட்க வேண்டுமா? பாலு ஏற்கனவே மணமானவன் என்று தவறாகக் கருதி அவனைத் துச்சமாகப் பேசித் துரத்தும்போது சரோஜா தேவியின் நடிப்பு மிகவும் நன்றாக இருக்கிறது. முதலில் ஆணுடையில் அவர் தோன்றுவானேன் என்பது புரியவில்லை. ஒரு வேளை படப் பெயருக்கு ஏற்பக் கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகவோ என்னவோ!

வேலுவின் இரண்டாவது மனைவி சௌகார் ஜானகி. குறைகூற இடமில்லாமல் நன்றாக நடித்திருக்கிறார்.

தங்கவேலு — சரோஜா ஜோடி பார்த்துப் பார்த்து அலுத்துப் போன பழைய மாடல் வேடிக்கை தம்பதியாகத்தான் நடிக்கிறார்கள். மாமியார் — மாட்டுப்பெண் சண்டை. அதில் தலையிட்டு வெற்றியடைய முடியாமல் இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கும் கணவனின் சங்கடம் எல்லாம் ஏற்கனவே எல்லாரும் பல தமிழ்ப்படங்களில் பார்த்தவை தானே! வெடித்த பட்டாசுக் கட்டுக்களை மீண்டும் வெடிக்க முடியுமோ? அது போல் முன்பே சிரித்து விட்ட சிரிப்பு நிகழ்ச்சிகளைக் கண்டு மீண்டும் சிரிக்க முடியுமோ?


விசுவநாதன்-ராமமூர்த்தி இசை அமைப்பு இந்தப் படத்தில் எதிர்பார்த்த அளவு அமையவில்லை என்பது என் அபிப்பிராயம். சிறந்த நடிப்போ, ஆவேசப் பேச்சோ, பெரிய செட்டுகளோ தனித்து நின்று ஒரு படத்துக்கு வெற்றி தேடித் தர முடியாது. சுவையான மெட்டுக்களில், ருசியான பாட்டுக்கள் அமைவதுதான் நம் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்தமான அம்சமாக இருந்து வருகிறது.

''கொடி அசைந்ததும் காற்று வந்ததா?'' என்ற பாட்டும், ''உள்ளம் என்பது ஆமை'' என்ற பாட்டும் கேட்க இனிமையாக இருக்கின்றன. ''பார்த்தால் பசி தீரும்'' என்ற பாட்டு ஏனோ சுமாராகப் போய்விட்டது.

வேலுவின் மகனாக வரும் சிறுவன் கமலஹாசனை டைரக்டர் நன்கு பயன்படுத்தவில்லை. புது நடிகர்களுக்குப் பயிற்சி அளித்துப் படம் பார்ப்பவர்களைத் திகைக்க வைக்கும் ஆர்வமே நம் டைரக்டர்களுக்கு இல்லை. குழந்தை நடிகனுக்கு ஏற்ற விதத்தில் காட்சிகளையும் சந்தர்ப்பங்களையும் தயாரித்துப் படத்தை இன்னும் சுவையுள்ளதாகச் செய்திருக்கலாம். அந்தச் சிறுவன் இரு பாகங்களில் நடித்தும் நினைவில் வைத்துக்கொள்ளும்படியாக இல்லை என்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

''பாவ மன்னிப்பு'', ''பாலும் பழமும்'', ''பாச மலர்'' ஆகிய படங்களின் நிழல் பல இடங்களில் படிந்திருக்கிறது. ஆனால் ''பாவ மன்னிப்பி''ல் கேட்ட பாடல்களின் இனிமையையோ, ''பாலும் பழமும்'' படத்தில் கண்ட நடிப்பின் நயத்தையோ, ''பாச மல''ரில் கண்ட உருக்கத்தையோ இந்தப் படத்தில் காண முடியவில்லையே!

''பார்த்தால் பசி தீரும்'' - ஒரு முறை பார்த்தால் பாதகமில்லை.



மனம்போனபடி



வடவெங்கடவன்

டாக்டர் கவலை

"அவருக்கு உடம்பு எப்படியிருக்கிறதாம்..?"

"அப்படித்தான் இருக்கிறதாம்!"

"இன்று காலையில் வீட்டு வாசலில் இரண்டு டாக்டர்களின் 'கார்'கள் வந்து நின்றதைக் கூடப் பார்த்தேன்."

"ஆமாம்! மண்டையை உடைத்துக் கொண்டு ஆராய்ச்சி மேல் ஆராய்ச்சியாக நடக்கிறது. என்ன வியாதியென யாரும் கண்டு பிடிக்க முடியவில்லை."

"இரத்தப் பரிசோதனையெல்லாம் பண்ணிப் பார்த்திருப்பார்களே?"

"அதுக்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை. இரத்தம், கோழை மற்றும் கழிவுப்பொருள் அத்தனையும் எடுத்துச் சூட்சுமதரிசினியிலே வைத்தும் ரஸாயனப் பரிட்சைகள் பண்ணியும் பார்த்தாகி விட்டது!"

"அதுகளிலிருந்து கண்டு பிடித்திருப்பார்களோ?"

"ஊஹூம்! ஒரு கோளாறும் தெரியவில்லையாம்!"

"பின்னே ஏன் மாலை வேளையில் காய்ச்சல் வருகிறதாம்?"

"அதுதான் டாக்டர்களுக்கே பிடிபடவில்லை என்கிறேனே!"

இந்தப் பேச்சு நடந்து ஒரு வாரம் பொறுத்து மீண்டும் சந்திப்பு.

"அந்த மனிதர் பிழைத்து விட்டாராமே....?"

"ஆமாம்!"

"பாவம்! ஒரு மாதம் படுத்த படுக்கையாய்க் கிடந்ததிலே அநியாயமாய் இளைத்துப் போய் விட்டார்!"

"ஆமாம், மெய்தான்!"



"கடைசியிலே அது என்ன வியாதியாம்? தெரியுமோ?"

"அதுதான் கண்டு பிடிக்க முடியவில்லையே!"

"ஏன்?"

"அதுக்குள்ளே தான் உடம்பு சரியாகப் போய் விட்டதே? டாக்டர்... இருக்கிறாரே, அவருக்குக்கூட இதிலே கொஞ்சம் வருத்தம்."

"என்ன வருத்தம்?"

"இன்ன வியாதி என்பதைக் கண்டு பிடிக்கும் முன்பே, நோயாளி குணமாகிவிட்டார் என்பதிலே அவருக்குக் கொஞ்சம் குறைதான்!"

இது கற்பனையல்ல; உண்மையில் நடந்த பேச்சு விவரம்.

பெரிய பதவியும் சின்னப் புத்தியும்

ஒரு பெரிய அதிகாரி எவ்வளவோ இலட்சக்கணக்கான ரூபாயைக் கையாண்டதற்காகக் கைதானார் என இன்று வாசித்தேன். போன மாதம் ஓர் அதிகாரி இத்தகைய கையாடலுக்காகக் கைதானதைப் பற்றிப் படித்தேன். ஆனால் அவ்வதிகாரி இவ்வளவு பெரிய பதவியில் உள்ளவரல்லர்; தொகையும் ஆயிரக்கணக்கிலேதான். இப்படியே இன்னும் கீழ் நோக்கிச் சென்றால், மணியார்டர் பணம் நாற்பதோ, ஐம்பதோ உரிய இடத்தில் பட்டுவாடா செய்யாமல்,—தான் ஏற்றுக் கொண்டபின் சிக்கிய தபால்காரரின் கதையைக் காணலாம்!

பெரிய பதவி — பெரிய தொகை — பெரிய குற்றம்.

நிலக்கடலைப் பருப்பு மிக மலிவானதுதான். அதில் சொத்தையைக் கடித்து விட்டால், கசப்பு நாக்கை விட்டு நீங்க நான்கு நிமிஷங்கள் ஆகும். முந்திரிப் பருப்பு சற்று உயர்ந்தது. இதன் சொத்தையைச் சற்று கடித்து விட்டால், அவ்வசட்டுச் சுவை போக அரைடம்ளர் தண்ணீரையாவது குடிக்க வேண்டும். எல்லாவற்றையும் விட



உயர்குடிப்பிறந்தது பாதாம்பருப்பு. அத்தனையும் சத்து. அப்படியே இரத்தம் என்பதெல்லாம் மிகவும் சரி. ஆனால் ஒரே ஒரு அவிசற் பருப்பைக் கடித்து விட்டு முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள், எவ்வளவு நேரத்துக்கு அசடு வழிகிறதென்று.

ஆம், பெரிய அதிகாரி பாதாம் பருப்புப் போல! ஆனால் இவர் சொத்தை!

பலே பேர்வழி!

பக்கத்து வீட்டுப் பையன் கண்ணன் வந்தமர்ந்தான். நான் ஊதுபத்திகளை விளக்கில் காட்டிப் பற்ற வைத்து அவற்றுக்கான பித்தளை ஸ்டாண்டில் பொருத்தினேன். கண்ணன் கவனித்துக் கொண்டேயிருந்தவன் மனத்தில் என்ன எண்ணம் தோன்றியதோ, தெரியவில்லை! நான் ஊதுபத்திகளைக் கொளுத்தி வைத்துவிட்டு வந்ததும் ஒரு கேள்வி கேட்டான்:

''என்ன மாமா! தினமும் இதே ஊதுபத்தி ஸ்டாண்டுதானா? சுவாமிக்கு ஒரு நாள் உபயோகித்ததையே தினமும் உபயோகப்படுத்தலாமா?''



எனக்கு அவனது கேள்வி வியப்பைத் தந்தது. தினந்தோறும் புதுப் புது ஊதுபத்தி ஸ்டாண்டு வாங்கிக் கட்டுமா? அவன் உண்மையில் எனக்குப் புதிர்விடுத்தான்: ''எங்கள் வீட்டில் தினமும் புது ஊதுபத்தி ஸ்டாண்டுதான் உபயோகிப்போம்! ஒரு நாள் பூஜைக்கு வைத்ததையே மறு நாளைக்கும் உபயோகிப்பார்களா, யாராவது?'' நான் அப்படியே அயர்ந்து விட்டேன்.

பையனுக்கு நான் ஒன்றும் புரியாமல் விழிப்பதில் வெகு மகிழ்ச்சி.

''என்ன மாமா! புரிய வில்லையா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

எனக்கு ஏதாவது புரிந்தால்தானே, புரிந்தது என்று சொல்வதற்கு? நான் ஒரு கணம் நிஜமாகவே இன்று பையனிடம் வகையாக மாட்டிக் கொண்டு விட்டோம் என்று எண்ணலானேன்.

''வேண்டுமானால் உங்களுக்கு விடை வர வழி ஒன்று சொல்லித் தருகிறேன்!'' என்றான் கண்ணன்.

''சரி, சொல்லு!''

''நாங்கள் அன்றாடம் பூஜை ஆனதும் ஊதுபத்தி அணைந்தான பின்,—'ஸ்டாண்டை'ச் சாப்பிட்டு விடுவோம். இப்போதாவது புரிகிறதா?'' என்று கேட்டான் அவன்.

''நீ பலே பேர்வழிடா!'' என்று அவனைப் பாராட்டினேன்.

விடை வாழைப்பழம்தான்!

தெய்வம் தூங்குமா?

அரங்கநாதரைத் தரிசனம் செய்து விட்டு வந்தேன். பள்ளிகொண்ட பரந்தாமனின் மோனத் திருவுரு மனக்கண் எதிரே நின்றது.

கடவுளரைத் தம் கற்பனைக் கண் கொண்டு பல நிலையிலும் பல உருவிலும் மனிதன் காண்கிறான். ரங்கநாதரை மட்டும் ஏன் தூங்குபவராகக் கொள்ள வேண்டும்? கடவுளுக்கு என்ன அயர்வு, ஆயாசம் தூக்கம் எல்லாம்?

இப்படித் தத்துவம் தெரியாமல் என் மனம் தவித்துக் கொண்டிருந்தது. தெரு வழியே வந்து கொண்டிருந்தேன். சாலையிலே சிறுவர்கள் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தனர். தாண்டி வந்தேன்.

''இதோ பார், உன் பம்பரத்தைக் கிளப்புகிறேன் தூக்கத்திலிருந்து'' என்று கூவி ஒருவன் தன்னுடைய பம்பரத்தை ஓங்கிக் குறி பார்த்து, ஏற்கெனவே தரையில் சுழன்று கொண்டிருந்த வேறொன்றின் மீது விட்டான்.


ஆடாமல், அசையாமல் உள்ளது என்ற அளவுக்கு, அந்நிலையில் பம்பரம் தூங்குவதாக வழங்குகிறது. உண்மையில் அது தூக்கமல்ல, சரியாக நூற்றுக்கு நூறு பங்கு இயக்கம் தான். முழு வேகத்தில் சீராகச் சுழலும் பம்பரத்தைத் தூங்குவதாகச் சொல்வது எப்படியோ, அப்படித்தான் பள்ளிகொண்ட பெருமானைத் தூங்குவதாகச் சொல்வதும். சலனத்தின் உக்கிர நிலை. இயங்குதலின் உச்ச நிலை அது.

சைக்கிள் சக்கரத்தை வேகமாகச் சுழற்றி விட்டால், இடையில் உள்ள ஆரங்கள் (Spokes) ஒன்றுமே தெரியாது. வேகத்தில் அவை மறைந்து விடும். அப்போது பார்த்து விட்டுச் சக்கரம் ஓட்டை; ஆரமே இல்லை என்பது எப்படியோ அப்படித்தான் நாம் கடவுளைத் தூங்குவதாகச் சொல்வதும்.

இயக்கத்தின் பெரு நிலை அசைவிலா மோனத் தவம்தானே?

5-குகைக் கோவில்!

நந்தவனம்



திருஞான சம்பந்தப் பெருமான் அருளியுள்ள ''கோளறு பதிகம்'' என்ற தேவாரப் பாடலை, மிகுந்த பக்தியோடு ஓதினார் சிவஞான ஓதுவா மூர்த்தி.

''வேயுறு தோளி பங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை
முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே!''

என்று 'பியந்தைக் காந்தாரப்' பண்ணிலே, 'நவரோஸ்' என இந்தக் காலத்தில் வழங்குகிற ராகத்தில், பழைய முறைப்படி பாடினார் அவர்! பாடிவிட்டுத் திருநீற்றுப் பிரசாதத்தை ஜமீந்தாருக்கும் மகளுக்கும் வழங்கினார். இருவரும் அதை வாங்கி அணிந்து கொண்டு, 'கோச்' வண்டியிலே ஏறினார்கள்.


ஜமீந்தார் வெளியூர்களுக்குப் புறப்படுகிற சமயத்திலெல்லாம், ஓதுவா மூர்த்தி இந்தத் திருப் பதிகத்தைப் பாடி விபூதிப் பிரசாதம் வழங்குவது என்பது பரம்பரை பரம்பரையான பழக்கம்!

திருநீற்றை நெற்றியில் பூசிக் கொள்ளும் போதே தாமரைச் செல்வி நினைத்தாள்: 'வழக்கமாக நெடுந்தூரப் பிரயாணங்கள் செல்லும் போது தானே அப்பா இந்த மாதிரிப் பிரசாதம் வாங்கி அணிந்து கொள்ளுவார்கள்! இன்று 'கோச்' வண்டியில்தானே போகிறோம். ஆனாலும் ஏன் இந்த ஏற்பாடு?'

இவ்வாறு யோசித்தாள் தாமரைச் செல்வி. 'கோச்' புறப்பட்டது. சற்று நேரம் தந்தையும் மகளும் மௌனமாக இருந்தார்கள். பிறகு ஜமீந்தார் பேச ஆரம்பித்தார்:

''அம்மா! இரண்டு மூன்று நாட்களாக எனக்கு மன நிம்மதியே இல்லை. அதனால்தான் இன்று செண்பக நாயகி கோயிலுக்குப் போய் வரலாம் என்று தோன்றிற்று.''

'' செண்பக நாயகி கோயிலுக்கா?'' என்று ஒரே வியப்போடு கேட்டாள் தாமரைச் செல்வி!



சோமு

''ஆமாம். மிகச் சிறு வயதில் ஒரே ஒரு முறை நீ வந்திருக்கிறாய். மற்றப்படி நீ அந்தப் பிரதேசத்துக்கே போனதில்லை. உனக்கு மிகவும் பிடிக்கும் அந்த இடம்!''

இவ்வாறு சொல்லி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு சொல்லுவார்:

''செல்வி! என்றைக்கு உன் அம்மா கட்டிலும் படுக்கையுமாக ஆனாளோ, அன்றிலிருந்து எனக்கும் செண்பகவனம் போகவே பிடிக்கவில்லை. ஆனால் இனி அப்படி உதாசீனமாக இருக்கக் கூடாது!''



இப்படிச் சொன்னபோது ஜமீந்தாருடைய முகத்தில் தீவிரமான யோசனைகள் அந்த வண்டியின் சக்கரம்போல் சுழன்றன. வேகமாகச் சென்ற 'கோச்' வண்டி, சாலையிலே இருந்த ஒரு நொடியான பள்ளத்தில் இறங்கி, ஒரு குலுங்குக் குலுங்கிக் கொண்டே மேலே சென்றது. மகள் கேட்டாள்:

''அப்பா! ஆண்டுதோறும் இந்தக் கோவிலின் திருவிழாவுக்காக ஆயிரக்கணக்கில் நீங்கள் பணம் செலவு செய்கிறீர்களே. ஆனாலும் உங்களால் எப்படி அங்கே போவதை நிறுத்திவிட முடிந்தது....?''

மகளுடைய இந்தக் கேள்விக்கு அனவரதர் உடனே பதில் சொல்ல

வில்லை. கண் இமைகளை மூடிச் சற்று நேரம் யோசனையில் இருந்து விட்டுப் பிறகு அவர் பேசினார்:

"அம்மா! இதுவரை செண்பக நாயகி அம்மன் திருவிழாப் பொறுப்பையும், அந்தக் கோவிலின் பராமரிப்பையும் எலமலைச் சம்பந்திகளிடம் விட்டிருந்தேன். இனி அந்த ஏற்பாடு சரிப்பட்டு வராது. இந்த ஆண்டுத் திருவிழாவை நானே முன்னிருந்து நடத்த வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். அதனால் தான் பல நாட்களுக்குப் பிறகு இன்று அந்தக் கோவிலைப் போய்ப் பார்த்து வரலாமே என்று புறப்பட்டேன்!"

இவ்வாறு சொல்லி விட்டுஜமீந்தார் மறுபடியும் மௌனத்தில் ஆழ்ந்தார். தம்முடைய திட்டங்கள் முழுவதையும் வெளிப்படையாகச் சொல்லுவதற்குத் தயங்குகிறார் என்று பட்டது மகளுக்கு! அவள் அதற்கு மேல் ஏதும் கேள்விகள் கேட்காமல் தனக்குள் யோசனை செய்யத் தொடங்கினாள்.



வேகமாக ஓடிப் பழகிய குதிரைகள் 'சட சட' என்று நெரித்துக் கொண்டு பறந்தன. 'கோச்' வண்டியின் கம்பீரமான மணியோசை அங்கங்கே 'கணகண கண் கண்' என்று ஒலித்தது. பாதையின் இருபுறமும் ஜமீனைச் சேர்ந்த சிறு சிறு கிராமங்கள். நெடிய வயல்கள். பூஞ்சோலைகள். அங்கங்கே சிறுசிறு ஏரிகள். சிற்றோடைகள். இவற்றுக்கு மத்தியிலே ஏறியும் இறங்கியும் சென்றது, நீண்ட நெடுஞ்சாலை! அதன் இரு பக்கத்திலும் வரிசையாகப் பெரிய பெரிய மருத மரங்களும் ஆலமரங்களுமாக நின்று, நிழல் செய்தன!

அனவரத புவனபதியின் தந்தையார் காலத்தில், செண்பகநாயகி அம்மன் கோவிலுக்குச் செல்லும் பாதை முழுதும் நன்றாகத் திருத்தம் செய்து, சரற்கற்களைக் கொண்டு சாலை போட்டு, இரண்டு பக்கங்களிலும் மரங்கள் வைத்தார். ஆனால் அவருடைய காலத்துக்குப் பின்பு இந்தச் செண்பக நாய சாலையை யாரும் அந்தளவு சிரத்தையோடு பராமரிக்க வில்லை. அதனால் அங்கங்கேயிருந்த குண்டு குழிகளும், நொடிகளும், கோச் வண்டியில் உட்கார்ந்தவாறு பலமான யோசனையில் ஆழ்ந்திருந்த தாமரைச் செல்வியை அடிக்கடி குலுக்கின! அவளுடைய சிந்தனையானது விழுந்து விழுந்து, எழுந்து எழுந்து, அந்தக் கோச் வண்டியைப் போலவே அதன் பாதையில் மேலே மேலே சென்று கொண்டிருந்தது!

"அம்மாவும் அப்பாவும் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டார்களே. அந்தப்பேச்சு அப்பாவின் மனத்தை வேதனை செய்கிறதோ! மறுநாட் காலையில் அப்பா தனியாக வந்து அம்மாவிடம் ஏதோ பேசினார்களாமே! ஒரு வேளை எலமலை இளைய ஜமீந்தாரை எனக்குப் பிடிக்கவில்லைஎன்றுவெளிப்படையாகவே அம்மா சொல்லி விட்டாளோ!"


இப்படி எண்ணினாள் செல்வி.

'இருக்கலாம். ஆனாலும் அதற்காக ஏன் இன்று இந்த யாத்திரை? திடீரென்று அப்பாவுக்கு இந்தச் செண்பக நாயகி கோவிலைப் பற்றிய நினைவு வருவானேன்? இதற்கும் தன்னுடைய திருமணத்துக்கும் என்ன சம்பந்தம்? ஒரு வேளை அம்மனுக்கு அபிஷேகம் நடத்தி, அர்ச்சனை செய்து, திருவுள்ளச் சீட்டுப் போட்டுப் பார்த்து உத்தரவு கேட்கப் போகிறார்களா அப்பா!'

வண்டி ஒரு பெரிய நொடியிலே விழுந்து எழுந்து மீண்டும் ஓடியது! தாமரைச் செல்வி தூக்கிப் போட்டு உட்கார்ந்து கொண்டாள்!

"கண்ணே! இந்தச்சாலையை இத்தனை நாட்களும் இப்படி அலட்சியம் செய்து விட்டேனே அம்மா!" என்று ஜமீந்தார் கவலையோடு சொன்னார். அவர் அலட்சியம் செய்தது அந்தப் பாதையையா, அல்லது மகளுடைய மனப்





போக்கையா என்று ஒரு சிந்தனை செல்வியின் உள்ளத்துக்குள் துவண்டது!

''அப்பா! உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனாலும் எனக்குத் தயக்கமாக இருக்கிறது!'' என்றாள் மகள்.

''தெரியும்; நீ என்ன கேட்க வேண்டும் என்று நினைக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஏலமலை ஜமீந்தார்கள் ஏன் இத்தனை அலட்சியமாக இந்தச் சாலையை நொடியும் பள்ளமுமாய் வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறாய். அப்படித்தானே?''

ஜமீந்தார் இப்படிக் கேட்டதும் செல்வி புன்சசை செய்தாள். பதில் பேசவில்லை. ஜமீந்தார் சொன்னார்:

''அம்மா! ஏலமலைச் சம்பந்திகளின் போக்கே தனி. இளைய ஜமீந்தார் நல்லவர்தான். ஆனாலும் இந்த மாதிரி நிர்வாகக் காரியங்களில் அவர் அத்தனை அக்கறை செலுத்துவதில்லை. குதிரைகள் வாங்குவது, அவற்றைப் பழக்குவது, பிறகு அவற்றை விற்பது, பின்னர் வேறு குதிரைகள் வாங்குவது—இப்படியேதான் அவருடைய நாளும் பொழுதும் கழிகின்றன. இதெல்லாம் ஏற்கனவே எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் இப்பொழுதுதான் அவற்றையெல்லாம் கண்களைத் திறந்து கொண்டு பார்க்கிறேன் நான்! இது வரையில் குருடாகத்தான் இருந்து விட்டேன்!''

தந்தை இப்படிச் சொன்னதும் தாமரைச் செல்விக்கு அவருடைய மன நிலை புரிந்தது. இது வரை அவர் ஏலமலைச் சம்பந்திகளைப் பார்த்த பார்வை வேறு, இப்பொழுது பார்க்கிற பார்வை வேறு என்பது நன்றாகப் புலனாயிற்று. ''நம்முடைய சிப்பந்திகளை முன்கூட்டியே கோவிலுக்கு அனுப்பி விட்டேன். நாம் வருவதை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டு நிற்பார்கள்!''

பேச்சை இப்படி வேறு திசையிலே திருப்பினார் ஜமீந்தார்!

'கோச்' வண்டி மேற்குப் புறமாகத் திரும்பி வேகமாக ஓடியது! கோவிலை நெருங்குகிற பாதைக்குப் பக்கத்தில் எல்லாம் சிறுசிறு குடிசைகள்! அந்தக் கிராமத்து மக்கள் 'சுவாமி தரிசனம்' செய்வது போலச் சாலையின் இருபுறமும் நின்று ஜமீந்தாரின்



'கோச்' வண்டிக்கு வணக்கம் செலுத்தி மரியாதை செலுத்தினார்கள்.

அடிவாரத்தில் வந்து வண்டி நின்றபோது, பகல் பன்னிரண்டு மணி. சுற்றிலும் மரங்களும் செடிகளுமாக இருந்ததால் வெயில் தெரியவில்லை. 'குளுகுளு' என்று தண்மையான காற்று மலையிலும் சிற்றோடைகளிலும் தவழ்ந்து கொண்டுவந்தது! வண்டி நின்ற மறு விநாடி, பத்துப் பன்னிரண்டு சிப்பந்திகள் பமல் துண்டை இடுப்பிலே வரிந்து கட்டிக் கொண்டு, பெரிய கும்பிடு போட்டவாறு வந்து நின்றார்கள். இரண்டொருவர் கோச் வண்டிக்கு எதிரே தரையில் விழுந்து வணங்கி, எழுந்தார்கள்.

அனவரத புவனபதியும் மகளும் வண்டியிலிருந்து இறங்கி அந்த வனப்பாதையிலே நடந்தார்கள்.

கோவிலையும் அதைச் சுற்றி எழில் பூத்து நின்ற செண்பக மரங்களையும், அவற்றிலே பின்னிக் கொண்டு நின்ற பூங்கொடிகளையும் பார்க்கப் பார்க்கத் தாமரைச் செல்விக்கு உள்ளத்தில் ஒரு களிப்பு பொங்கியது. அந்த வனப்பிரதேசம் முழுவதையும் நிரப்பிக்கொண்டு கமழ்ந்த செண்பக மரங்களின் வாசனை, அவளுடைய இதயத்தில் நிரம்பி விம்மியது!

''அப்பா! இத்தனை அழகான ஒரு பிரதேசத்துக்கு இது வரை வராமலே இருந்து விட்டேனே!'' என்று ஒரே வியப்போடு கூறினாள் செல்வி.

''செல்வி! இன்னும் நீ இதற்கு மேலும் அதிசயப்படக் கூடிய காட்சிகள் இங்கே இருக்கின்றன. முக்கியமாக இங்குள்ள சித்திரங்களை நீ பார்க்க வேண்டும்! இயற்கையழகுக்கு மத்தியிலே கலையின் அழகு எப்படி மலர்ந்திருக்கிறது என்பதை நீ—''

ஜமீந்தாருடைய வார்த்தைகளை இடைமறித்தாள்.

''இதெல்லாம் எனக்குப் பிடிக்குமென்று உங்களுக்குத் தெரியுமா, அப்பா! எனக்கே இது தெரியாதே இதுவரை!''



''கண்ணே! இதுவரை நான் உன்னை வளர்த்த விதம் வேறு. இனிமேல், இனி மேல்—''



அந்த வார்த்தைகளை முழுதும் முடிக்காமலேயே மகளுடைய கண்களையே கூர்ந்து பார்த்தார் ஜமீந்தார். இருவருடைய கண்களும் கலங்கின.

செண்பக நாயகி அம்மனுக்கு உச்சிகால பூஜை நியமத்தோடு நடந்தது. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு அங்கு வந்திருக்கிறார் அனவரத புவனபதி! அவ

ருடைய மகளோ விவரம் தெரிந்த நாளிலிருந்து இப்பொழுதுதான் அங்கு வந்திருக்கிறாள்! கோவில் மணி கண கண என்று ஒலித்தது. சங்கநாதம் 'பம் பம்' என்று அந்த வனப் பிரதேசத்திலே விம்மியது. தூபதீப உபசாரங்கள் எல்லாம் நேர்த்தியாக நடைபெற்றன.

பூஜை முடிந்து, சிற்றோடைக் கரையிலே வனபோஜனம் ஆனதும், ஜமீந்தார் மகளை அழைத்துக் கொண்டு கோவிலைச் சுற்றி யிருந்த நந்தவனத்தில் நடந்தார். பொன் கொன்றை மரம் தங்கப் பூக்களைக் கொட்டி நின்றது! செண்பக மலர்கள் நிலத்தை மலர்ப் போர்வையினால் போர்த்திக் கொண்டு, நறுமணம் பரப்பின. எங்கோ ஒரு புதருக்கு அப்பாலிருந்து பிச்சிப் பூ 'கமகம' என்று கமழ்ந்தது! சிறிய அருவிகளின் இன்னிசையும், ஓடைகளின் சலசலப்பும் இளமைக் குரலிலே எழுந்து பேசின!

''அப்பா! இந்த மலர்ச்சோலை எத்தனை சுகமாக இருக்கிறது! இந்த அருவிகளும் ஓடைகளும், இந்த நந்தவனமும், இதைச் சுற்றி நிற்கிற செண்பகக் காடும் பார்க்கப் பார்க்க உள்ளத்தில் ஏதேதோ ஒலிகளையல்லவா எழுப்புகின்றன!''

''ஆமாம். இதை யெல்லாம் மறந்து விட்டுத்தான் குதிரையிலே சவாரி பண்ணும்படி உன்னைப் பழக்கினேன் இத்தனை நாட்களும்!'' என்றார் அனவரதர், எல்லையற்ற பச்சாத்தாபத்தோடு!

'' அப்பா ! அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள்! அந்தப் பயிற்சியும் ஒரு வயது வரை எனக்கு அவசியமாகத்தான் இருந்தது. இது வரை அப்படியிருந்ததால்தான் இப்பொழுது இந்த அழகுகளை யெல்லாம் இன்னும் நன்றாக, இன்னும் அதிகமாக என்னால் அனுபவிக்க முடிகிறது!''

தந்தையும் மகளும் மலைப் பாதை வழியாக நடந்தார்கள். சிப்பந்திகளை அப்படி ஒரு பார்வை பார்த்தார் ஜமீந்தார். அதன் பொருளைப் புரிந்து கொண்டு அவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். அனவரதர் குகைக் கோவிலை நோக்கி நடந்தார்.

''செல்வி, செண்பக நாயகி கோவிலின் சுற்றுச் சுவர்களிலே மட்கியும், மங்கியும் போய் விட்ட பல சித்திரங்கள் இருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதற்கு முன்பு, இந்தக் குகைச் சித்திரங்களை நீ பார்க்க வேண்டும். இதன் பிறகு அந்தச் சுவரைப் பார்த்தால்தான் அரை குறையான அந்தச் சித்திரங்களை நீ பூரணமாக அனுபவிக்க முடியும்!''

இவ்வாறு சொன்னார் ஜமீந்தார்.

''அரைகுறையான சித்திரங்களா?'' என்று செல்வி கேட்டாள்.

''ஆமாம். கோவிற் சுவர்களை யாரும் கவனித்துப் பராமரிக்காத காரணத்தால், பொருக்குகள் எல்லாம் உதிர்ந்து போய் அந்த ஓவியங்கள் பாதியும் காலுமாக நிற்கின்றன! ஆனால் இந்தக் குகை ஓவியங்கள் அப்படி யில்லை. இவற்றில் அநேகம் முழுமையாகவே நிற்கின்றன. என்றாலும் பலவற்றில் வர்ணங்கள் மங்கி விட்டன!''

இருவரும் மலைப்பாங்கான மேட்டிலே நடந்து சென்று, குகைக்குள்ளே புகுந்தார்கள்.

தாமரைச் செல்வி அப்படியே வியப்பில் திகைத்துப் போய் நின்று விட்டாள்! கிழக்கிலே உதித்து வானப் பாதையிலே எவ்வி ஏறுகிற சூரியனின் கதிர்கள், பலப்பல கோணங்களிலே அந்தக் குகைக்குள் நுழைந்து, ஒளி வீசக் கூடிய விதத்தில், அந்தக் குகையின் வாசலும், அங்கங்கே 'பலகணி'கள் என்றுஅழைக்கப்படுகிற பல கண்களோடு கூடிய துவாரங்களும் பாறையிலே குடையப்பட்டிருந்தன! குகைக்குள்ளே ஒரே இருட்டா யிருக்கும் என்று எதிர்பார்த்த தாமரைச் செல்வி, இந்த ஒளிக் கோலங்களைக் கண்டதும் மெய் சிலிர்த்தாள்.

''அப்பா! என்ன அதிசயம் இது! இந்தச் சிறிய குகைக்குள்ளே எத்தனை வெளிச்சம் ! வெயிலின் திசையை அறிந்து எத்தனை நுட்பமாக இந்தப் பலகணிகளை அமைத்திருக்கிறார்கள்!''

இவ்வாறு சொன்னாள் செல்வி. தந்தை கூறினார்:

''அம்மா! நம்முடைய முன்னோர்கள் வான ஆராய்ச்சியிலே பல அதிசய உண்மைகளைக் கண்டவர்கள் அம்மா! இந்தப் பொதிகைமலைக் காட்டிலே எத்தனையோ முனிவர்கள் வாழ்ந்து, கலைகளையும் இலக்கியங்களையும் தத்துவ ஞானத்தையும் வளர்த்த புண்ணிய பூமி அம்மா நம்முடைய தமிழ் நாடு! மலைக் காடுகள் எல்லாம் ஆராய்ச்சிக் கூடங்களாக விளங்கியிருக்கின்றன. பள்ளிக் கூடங்களிலும் கலாசாலைகளிலும் 'லபாரேடரி' என்று இருப்பது போல, நம்முடைய முனிவர்களின் ஆசிரமங்கள் எல்லாம் பெரிய பெரிய 'லபாரேடரி'களாக இருந்தன என்று உன்னுடைய பாட்டனார் அடிக்கடி சொல்லுவார்! சித்தர்களுடைய ஆராய்ச்சியில் அவருக்கு அளவில்லாத ஆர்வம்! நான்தான் இவற்றை யெல்லாம் உதாசீனம் செய்து விட்டேன் இது வரை!''

ஒரே வருத்தத்தோடு ஜமீந்தார் இப்படிச் சொன்னதும் மகள் தாமரைச் செல்வி கேட்டாள்:

''அப்படியில்லை, அப்பா! நான் பிறந்ததிலிருந்து நீங்கள் அல்லும் பக

கால்கேட்டின் மூலம்

நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களைத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டின் ருசிகரமான நறுமணத்தினால், குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG.12 OT-TAM

னும் உங்கள் நேரம் முழுவதையும் என்பொருட்டாகவே செலவழித்தீர்கள். ஒருகாலத்தில் சித்திரத்திலும் சங்கீதத்திலும் உயிராக இருந்தீர்கள் என்று அம்மா அடிக்கடி சொல்லியிருக்கிறாளே!''

''செல்வி! அதெல்லாம் பழங்கதை! இந்தச் சித்திரங்களையும் செண்பகநாயகி கோவிலின் சுற்றுச் சுவர்களிலே உள்ள ஓவியங்களையும் நன்றாகப் பராமரிக்க வேண்டும் என்றும், அவற்றில் மங்கிப் போன சித்திரங்களையெல்லாம் புதுப்பிக்க வேண்டும் என்றும் உன்னுடைய பாட்டனார் கனவு கண்டார். அவருடைய கடைசிக் காலத்திலேகூட இந்தச் சுவர் ஓவியங்களைப் புதுப்பிக்க எண்ணி ஆரம்ப முயற்சிகள் செய்தார். ஆனால் எதுவும் நடைபெற வில்லை!''

தந்தையின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே, குகையின் சித்திரங்களைக் கூர்ந்து பார்த்தாள் தாமரைச் செல்வி.



மேல் தளத்தில் ஒரு பெரிய தாமரைத் தடாகம். அதில் உதய வானத்தின் செந்நிறத்திலே செந்தாமரைப் பூக்கள் மலர்ந்து வருகின்றன. அன்னம் ஒன்று அந்தத் தண்ணீரிலே மிதந்தவாறு ஒரு பெரிய செந்தாமரை மலரின் விரிந்த இதழ்களைத் தனது அலகினால் வருடிக் கொண்டிருக்கிறது!

''ஆகா! என்ன சித்திரம்! என்ன சித்திரம்! பாறைக்குள்ளே இந்தக் குகையைக் குடைந்து அதன் கூரைத் தளத்திலே இப்படி ஒரு சித்திரத்தை எப்படித்தான் வரைந்தார்களோ! எந்த இடத்தில் நின்று, எப்படி அண்ணாந்து பார்த்துக் கொண்டு, இந்தத் தடாகத்தையும் இந்தச் செந்தாமரை மலர்களையும் அன்னப் பறவையையும் வரைந்தார்கள்! இத்தனை அழகையும் இப்படி ஒரு காட்டுக்குள்ளே ஒரு குகைக்குள்ளே கொண்டு வந்து ஒளித்து வைத்திருக்க வேண்டுமா?''

இவ்வாறு கேட்டாள் தாமரைச் செல்வி. ஜமீந்தார் சொன்னார்:

''அம்மா! அழகைத் தெரு வீதியிலே நிறுத்தலாமா! விலை மதிப்பற்ற கலை இரத்தினங்களைச் சந்தியிலே கொண்டு இறைத்து விடலாமா! இவ்வளவு அடர்த்தியான காட்டுக்குள்ளே, இத்தனை பாதுகாவலோடு வைத்திருந்துமே இவை அழிந்து விட்டனவே! மனிதர்களுடைய அசிரத்தையும் காலதேவனுடைய பயங்கரக் கையும், பகைவர்களுடைய தீய செயலும் சேர்ந்து, நம்முடைய நாட்டுக் கலைச் செல்வங்களையெல்லாம் என்ன பாடுபடுத்தியிருக்கின்றன தெரியுமா! அந்தக் காலத்தில் இவற்றைப் பற்றிய புத்தகங்களையும், சுவடிகளையும் ஏராளமாகத் திரட்டி வைத்திருந்தார் உங்கள் பாட்டனார்! இந்தக் குகைச் சித்திரங்கள் மங்க ஆரம்பித்த போது, அவர் கண்ணீர் விட்டுக் கலங்கினார். இவற்றைப் புதுப்பிக்க வேண்டும் என்று நினைத்து யாராவது தகுந்த ஓவியர்கள் அகப்படுவார்களா என்று தேடினார். அப்போதுதான் இந்த ஜமீனில் ஏதேதோ கோர்ட்டு வியாஜ்ஜியங்கள் குறுக்கிட்டு, அவருடைய முடிவும் சீக்கிரமாகவே வந்தது! அந்தத் துன்ப நினைவுகள்எல்லாம் இன்று வேண்டாம்! நீ இந்தச் சித்திரங்களையெல்லாம் பார்!''

தாமரைச் செல்வியும், அவளுடைய தந்தையும், நீண்ட நேரம் செண்பக வனத்துக் குகைக்குள்ளேயிருந்த அந்த அற்புதச் சித்திரங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்! காணாத காட்சிகளைக் கண்ட இன்பப் போதையிலே, மனமும் சிந்தனையும் திளைத்தவாறு அங்கிருந்து வெளியே வந்து, சுற்றுப்புறச் சுவர்களைக் காணத் தொடங்கினார்கள் இருவரும்!

பிட்சாடனர் ரிஷிபத்தினிகள் பின் தொடரச் செல்கிறார். இதோ இன்னொரு பக்கம் ஊர்த்துவ தாண்டவம் நடக்கிறது. இதோ சோமாஸ்கந்தர், உலக மக்களின் வாழ்வுக்கு உதாரணம் காட்டுவார் போல, மனைவி மக்களோடு காட்சி தருகிறார். இன்னொரு புறம் நந்தி மத்தளம் கொட்ட, நாரதர் யாழ் இசைக்க, பூதங்கள் மருள, 'தோந்தோம்' என்று நடராஜமூர்த்தி ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறார். அருகிலே மலைமகள் நின்று இந்த நடனத்தைக் கண்டு களிக்கிறாள்.

நூறு நூறு சித்திரங்கள்! ஆயிரம் ஆயிரம் வண்ணக் காட்சிகள்! இதோ

மீனாட்சி அம்மை திருமணம்! திருமால் தாரை வார்க்கிறார்! மணமகளான பாண்டிய குமாரி உலக நாயகனைத் தனது நாயகனுக்குக் கரம் பற்றுகிறாள்! ஆனால் இதென்ன! ஏன் சுவர்களின் பூச்செல்லாம் இப்படி உதிர்ந்து கிடக்கிறது? இத்தனை சித்திரங்களும் ஏன் மங்கி நிற்கின்றன! சில உருவங்களிலே ஏன் கையும் காலும் முகமுங் கூட இப்படி அரைகுறையாக நிற்கின்றன!

"அப்பா! என்ன பரிதாபம் இது! இவ்வளவு பெரிய அற்புதக் கலையைப் புதிதாகச் செய்து நிறுத்துகிற சக்திதான் நம்மவர்களுக்கு இல்லை! இவற்றைப் பாதுகாக்கக் கூடத் தெரியாதா நமக்கு?"

தாமரைச் செல்வி இப்படிச் சொன்னபோது அவளுடைய கண்கள் கலங்கின.

"கண்ணே! நானும் அதையேதான் நினைத்தேன், அம்மா! நம்முடைய சிங்கம்புத்தூர் வட்டாரத்தில் இப்படி ஒரு பெரிய கலைச் செல்வம் இருப்பது, நம்முடைய முன்னோர்கள் செய்த பாக்கியம்! ஆனால் இவற்றைப் பாதுகாக்கிற பொறுப்புக் கூட இல்லாமல், இத்தனை அலட்சியமாக நாம் இருந்து வருவது எத்தனை மடமை!"

அனவரதர் மிகுந்த உருக்கத்தோடு இவ்வாறு சொன்னார். அப்போது தாமரைச் செல்வி கேட்டாள்:



"அப்பா! நாம் ஏன் இப்படி நிர்க்கதியாகப் பேச வேண்டும்? இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப்போய் விடவில்லையே! இந்தச் சித்திரங்களையெல்லாம் இனியாவது நாம் புதுப்பிக்கலாம் அல்லவா?"

மகள் இப்படிக் கேட்டதும் தந்தை சொல்லுவார்:

"செல்வி! நீ கேட்பது சரியான கேள்வி. இந்தச் சித்திரங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டோமானால், பிறகு இது ஒன்றும் பிரமாதமான காரியம் இல்லை. அதற்கு உரிய முறையில் அந்தப் பொறுப்பைத் தக்க மனிதர்களிடம் ஒப்படைத்துவிட்டால், 'மளமள' என்று வேலை நடக்கும். சந்தேகமில்லை!"

இப்படிச் சொன்னார் அனவரத புவனபதி. பாவம்! விபரீத நிகழ்ச்சிகள் எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை! அப்படி அவர் எதிர்பார்த்திருந்தால், அந்த வார்த்தைகளை அத்தனை நம்பிக்கையோடு அவர் சொல்லியிருப்பாரா?

ஜமீந்தார் மட்டும் என்ன? தாமரைச் செல்வியுமே எந்த விபரீதத்தையும் எதிர்பார்க்கவில்லை. உறுதியோடு சொன்னாள்:

"அப்பா! நமக்கு இருக்கிற வசதிகளுக்கும், ஆள் பலத்துக்கும் இது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. இந்த ஆண்டுத் திருவிழாவுக்குள்ளாகவே, இந்தச் சுவர் ஓவியங்களையும் குகைச் சித்திரங்களையும் சீர்படுத்தி விடலாம். எனக்கு அதில் சந்தேகமே இல்லை!"

இப்படி உறுதியோடு கூறினாள் அருமை மகள் தாமரைச் செல்வி. ஜமீந்தார் சொல்லுவார்:

"செல்வி! சென்னையிலே ஒரு பெரிய கலைப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளியில் பல மாணவர்களுக்கு ஓவியப் பயிற்சி வழங்கி வருகிறார்கள். சிவகாமிநாதன் என்று ஒரு சித்திரக்காரர் இருக்கிறார். அவர்தான் அந்தப் பள்ளியை நடத்தி வருகிறார். அற்புதமான திறமையோடு கூடிய அதிசய ஓவியர் அவர்! ஆனால் இப்பொழுது அவருக்கு வயதாகிவிட்டது! அறுபது அறுபத்தைந்து வயதிருக்கும். கண் பார்வை எப்படியிருக்கிறதோ தெரியவில்லை. அவர் மட்டும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டால் இந்தத் திருப்பணி நன்றாக நடைபெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இத்தனை வயதில் இப்படி ஒரு பொறுப்பை அவர் ஒப்புக்கொள்ள வேண்டுமே!"

மிகுந்த கவலையோடு இவ்வாறு சொன்னார் அனவரதர். அப்போது மகள் கேட்டாள்:

"அப்பா! சிவகாமிநாதனிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலர் இருப்பார்கள் அல்லவா? இந்தப் பொறுப்பை அவரிடம் விட்டு விட்டோமானால், அவராகவே நல்ல மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைப்பார் என்று நினைக்கிறேன்.

எதற்கும் அவரைச் சந்தித்துப் பேசிப் பாருங்களேன்!"

செல்வியின் முகத்திலும் பேச்சிலும் நம்பிக்கையும் ஆர்வமும் நிரம்பிநின்றன. "கண்ணே! உனக்கு இந்தச் சித்திரங்களிலும், இவற்றிலே தவழ்கிற அருங் கலையிலும், இத்தனை ஆர்வம் இருப்பது கண்டு, என்னுடைய மனம் களிப்பிலே துள்ளுகிறது அம்மா! உன்னுடைய விருப்பம் அப்படியிருக்குமானால், அதற்கு மேல் யோசிப்பதற்கு என்ன உண்டு? சிவகாமி நாதனைப் பார்த்து இது பற்றிப் பேசுகிறேன். அவருக்கும் தம்முடைய வாழ்வின் இறுதிக் காலத்தில், இப்படி ஒரு நிலையான கலைப் பணியை மேற்கொள்ளுவதில் மகிழ்ச்சியும் ஆர்வமும் இருக்கவே இருக்கும்! தாமும் தமது மாணவர்களும் நிரந்தரமான ஓர் ஆக்க வேலையில் ஈடுபட வேண்டும் என்று அவரும் விரும்பவே செய்வார். ஆகையால்—"

"அப்பா! இன்று நாம் புறப்பட்ட போது இப்படி ஒரு மகத்தான திட்டம் உருவாகும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களோ இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால் நான் நிச்சயம் இதை எதிர்பார்க்கவில்லை! உண்மையில் என்னை எங்கே அழைத்துப் போகிறீர்கள் என்றே தெரியாமல்தான் நான் இன்று காலை உங்களோடு புறப்பட்டேன்!"

செல்வியின் வார்த்தைகளில் ஒரு குழந்தையின் குதூகலம் பொங்கியது. தந்தை சொன்னார்:

"செல்வி! வழிபாடு முடித்த இந்த நல்லவேளையில், என்னுடைய சென்னைப் பிரயாணத்தையும் முடிவு செய்கிறேன். சென்னை சென்று, முதிய ஓவியரையும் அவருடைய இளஞ் சீடர்களையும் கண்டு பேசி, இந்தச் சித்திரங்களைப் புதுப்பிக்கும் ஏற்பாட்டில் ஒரு திட்டமான முடிவோடு திரும்புகிறேன். வருகிற திருவிழாவுக்குள் இந்தத் திருப்பணி முடிந்து விட்டால் சிறப்பாக இருக்கும். இத்தனை நாட்கள் இந்தக் கோவிலை அலட்சியம் பண்ணியதற்கு ஒரு பிராயச்சித்தமே செய்தவன் ஆவேன்!"

"அப்பா! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இந்தச் சித்திரங்களையெல்லாம் பார்த்த பிறகு எனக்கு ஒரு விசித்திரமான ஆசை உண்டாகிறது. நம்முடைய தமிழ் நாட்டில் இப்படி ஓர் அதிசயமான கலை எத்தனையோ பல நூறு ஆண்டுகளாக வழங்கி வருகிறதே; சுவரிலே பூசியுள்ள சுண்ணாம்பும், சாயங்களும் சேர்ந்து வார்த்தைகளிலே சொல்ல முடியாத எத்தனை கதைகளை எத்தனை அழகோடு வர்ணங்களிலே மொழிகின்றன! இப்படிப்பட்ட அரிய கலையை ஒருவர் கற்றுக்கொண்டு விட்டால், பிறகு வாழ்க்கையில் எதுதான் வேண்டியிருக்கும்! இறகும், வர்ணங்களும், எதிரே நிற்கும் சுவர்களுமாகக் காலமெல்லாம் இந்தக் காட்டிலேயே சித்திர வாழ்வு வாழ்ந்து விடலாமே! அப்பா, இந்தச் சித்திரங்களைப் பார்க்கப் பார்க்க, மனத்தில் ஏதேதோ கனவுகளும் கற்பனைகளும் தோன்றுகின்றன! அவற்றையெல்லாம் எப்படிச் சொல்லுவேன்!"

செல்வியின் வார்த்தைகள் உணர்ச்சியினால் பொங்கிப் பொங்கி வந்தன. அனவரதபுவனபதி பரிவும் பாசமும் மேலிட்டவராகப் பேசினார்:

"கண்ணே! அந்தக் காலத்தில் என் தகப்பனார் கண்ட கனவு வீணாகிவிடாது! இந்தச் சித்திரங்களிலே அவர் வைத்திருந்த உயிர்தான், இன்று உன் உடம்புக்குள் இருந்து இப்படிப் பேசுகிறது என்று நினைக்கிறேன்! உண்மையில் இந்த வினாடி முதல் என் கவலைகள் எல்லாம் ஒழிந்தன! உன்னையும் உன் விருப்பங்களையும் பற்றி உன் அம்மா சொன்ன வார்த்தைகள் இப்பொழுதுதான் என் இதயத்தில் இன்ப அமுதத்தைப் பொழிகின்றன! கண்ணே, உனக்கும் ஏலமலைக்கும் நெடுந்தூரம் என்பதை இப்பொழுதுதான் நன்றாக உணர்கிறேன். உன்னுடைய கையில் குதிரைச் சவுக்கைக் கொடுத்தது தவறு. உன் கை சாட்டை பிடிக்க வேண்டிய கை இல்லை. அதில் வர்ண இறகைக் கொடுக்க வேண்டும் நான்!"

உற்சாகம் மேலிட்டவராகப் பேசினார் ஜமீந்தார்! அப்போது அந்த மலைப் பாதையிலே வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான் சுப்பையா! வழக்கப்படி ஜமீந்தாருக்கு அருகில் வரும் போதே, தலைக்கு மேலே இரண்டு கைகளையும் கொண்டு போய்க் கூப்பி வணக்கம் செய்தான்.

"ஏண்டா, இப்படி ஓட்டமும் நடையுமாக வருகிறாய்?"

"ஏலமலை இளைய எசமான் குதிரையிலே வந்துக்கிட்டிருக்காக வேகமா!" என்று சொன்னான் சுப்பையா!

ஜமீந்தார் மலைப் பாதையிலிருந்து சற்று விலகி நடந்து சென்று, சரிவிலே பார்த்தார். அடிவாரத்துக்கு அப்பால் நெடுஞ் சாலையிலே புழுதிப் படலம் எழுந்து போர்த்தியது! ஏலமலைக் குதிரை 'ஜாம் ஜாம்' என்று தூள் பறக்க வந்து கொண்டிருந்தது! (தொடரும்)

எனக்கும் நீ!

ஆர். சூடாமணி

ரயில் நிலையத்திலிருந்து கிராமத்தை நோக்கி மாட்டு வண்டியில் சென்று கொண்டிருந்தான் கார்த்திகேயன். முன்பு அவர்களுடைய பண்ணையில் கூலியாளாயிருந்த சடையன் வண்டி ஓட்டி வரவில்லை. சடையன் ஏதோ தவறாக நடந்து கொண்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாய்ப் புது ஆள் அறிவித்தான். கார்த்திகேயனின் மனம் அந்தப் பழைய உழைப்பாளியை நினைத்துக் கொண்டிருக்கவில்லை. அவன் வேறு யோசனையில் மூழ்கியிருந்தான்.

அவன் பையில் ஒரு தந்தி.

''மணிக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது. உடனே வா.— அம்மா.''

மணிவண்ணன் அவனுடைய தம்பி. பல நாட்களாய்க் காய்ச்சலில் படுத்துக் கொண்டிருந்தான். இப்போது அதிகமாயிருக்கிறதாம். தந்தியைப் பார்த்து விட்டுத்தான் கார்த்திகேயன் லீவு எடுத்துக்கொண்டு மனைவி மக்களை விட்டு விட்டு ஊரிலிருந்து வருகிறான்.

ஆனால் இப்போது அவன் தம்பியைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருக்கவில்லை. அவன் மனக்கண் குளிர மென்மையுடன் பூத்த முகம் மணிவண்ணனுடையது அல்ல. மணிவண்ணனின் கூரிய கண்களும் நீர்க்கமான மூக்கும் வெற்றிப் புன்னகையும் ஏளனத் தன்மையும் இல்லை அந்த முகத்தில். துடிக்கும் உதடுகளும் சற்றே வளைந்த நாசியும் பாசத்தின் வேதனை அலைக்கும் விழிகளும் வெண்ணீறு கோடிட்ட சுருக்க நெற்றியும் மேலே முடிந்த கேசமும் கொண்ட முகம் அது. அவன் நெஞ்சின் அன்புத் தடாகத்தில் இடையறாது ஒளிரும் முகத் தாமரை.

கார்த்திகேயன் தன் அருகிலிருந்த தூக்குக் கூடையைப் பார்த்தான். அதில் அவன் ஆர்வம் மேலிட எடுத்து வந்திருந்த மாம்பழங்கள் பொன்னாய்ப் பளபளத்தன. அவன் உள்ளம் உவகை கொண்டது. தம்பி என்ற பாசம்தான் வளர முடியாமலே போய் விட்டதே! வேறு ஒன்றை எண்ணி அவன் நெஞ்சம் ஆவலில் படபடத்தது....

வீட்டுக்கு வந்து சேர்ந்தாயிற்று. விழிகளில் ஆர்வமுடன் கார்த்திகேயன் கையில் மாம்பழக் கூடையைப்பிடித்தவாறு உள்ளேவிரைந்தான்.

நோயாளியான தம்பி — யாருக்காக என வந்திருந்தானோ அவன் — அந்தத் தம்பி இருக்கும் இடத்தைத் தேடி ஓடவில்லையே கார்த்திகேயனின் கால்கள்! வேறொரு வடிவத்துக்கு... இதோ, இதோ வருகிறாள்! கிழ முகம், சற்றே வளைந்த நாசி, வெண்ணீறு தீட்டிய நெற்றி, கவலை நிறைந்த கண்கள் — இதோ!

''அம்மா!''

ஆவலாய்க் கூவி விட்டான் கார்த்திகேயன். நெஞ்சில் பொங்கிய அன்பு இன்பமாய் வெளிப்பட்டது. ஆபத்தான சந்தர்ப்பத்துக்காக வந்திருக்கிறோமென்பதை ஒரு கணம் மறந்தே போய் விட்டது.

''அம்மா, எப்படியம்மா இருக்கிறாய்?''

மூச்சு முட்டப் பெருகிய அன்பு வெள்ளத்தின் எதிரே ராஜம்மாள் அவனைத் தாண்டி, நிலைத்த கவலைப் பார்வையுடன் நின்றாள். ஆனால் அவள் கண்கள் அதைக் காணவில்லை. அவற்றில் அன்பும் மகிழ்வும் பரிவும் ஒன்றாய்த் ததும்பித் துடித்தன.

''அம்மா! ரொம்ப இளைத்து விட்டாயே அம்மா, உடம்பு சரியில்லையா உனக்கு? .... எவ்வளவு நாட்களாயிற்று பார்த்து! எப்படியம்மா இருக்கிறாய்? இதோ பார், உனக்காக என்ன கொண்டு வந்திருக்கிறேனென்று! மாம்பழம் அம்மா! 'அல்பான்ஸோ' ரகம். வெளியூரிலிருந்து வந்தது!'' படபடக்கும் கைகளால் கூடையிலிருந்து பழங்கள் சிதறப் பழங்களை எடுத்து அவள்முன் நீட்டினான் கார்த்திகேயன். ''பார்த்தாயா அம்மா? ...அம்மா.....''

''மணிக்கு ரொம்ப அதிகமாயிருக்குடா கார்த்திகேயா! நீ உடனே பெரிய டாக்டரை வரவழைக்கணும். அதற்குத்தான் உனக்குத் தந்தி கொடுத்தேன்.''

கார்த்திகேயனின் பேச்சும் செயலும் அப்படியே நின்று விட்டன. முகத்தில் தோன்றிய புன்னகை கூட இன்னும் மறைய நேரமில்லை.

''என்ன?.... சரியம்மா, டாக்டரை அழைத்து வருகிறேன். மணிக்குக் கட்டாயம் சரியாகிவிடும். இதோ, பழம்....பழம் பார்த்தாயா? உனக்காக வாங்கி வந்தேன்...... அப்புறமாய்ச் சாப்பிடு, ம்...?''

''சரிதாண்டா, பழம் வாங்கி வர நல்ல சமயம் பார்த்தாய். என் மணிக்கு ஒன்று நேர்ந்து விட்டால் நான் தாங்க மாட்டேன்.''

இப்போது புன்னகையும் மறைந்து தான் விட்டது. அதையும் அதை ஊக்கிய பாசத்தையும் வழக்கம் போல் ராஜம்மாள் ஒரு மந்திரவாதியைப் போல் மணி என்ற கூடைக்குள் அடக்கிச் சூனியமாக்கி விட்டாள்.

''வா வா, குழந்தையை வந்து பார்.''

அவள் முன்னே நடந்தாள். கைகளில் நீட்டிய பழங்களுடன் கார்த்திகேயன் ஸ்தம்பித்த நிலையில் ஒரு விநாடி தயங்கினான். அம்மா என்று இதயத்தில் ஒலித்த சொல்லின் ரீங்காரம் இன்னும் முடியவில்லை. அதற்குள் ஒலியே சிதைந்து விட்டது.

எதுவும் பேசாமல் கார்த்திகேயன் தன் அன்னையைப் பின்பற்றி மெள்ள நடந்தான். கிழக்குப் புறத்துப் பெரிய அறைக்குள் நுழைந்தான். அங்கே கட்டிலின் மீது கிடந்தவன் மணிவண்ணன்தான். உருமாறிய எலும்புக் கூடுதான். ஆனால் கார்த்திகேயனின் நெஞ்சம்

அதற்காக வெடிக்க வில்லை. கண்களைத் திருப்பித் தாயைப் பார்த்தான்.

முகத்தில் அன்பும் துயரமும் கொந்தளிக்க ராஜம்மாள் கட்டிலின் மீது உட்கார்ந்து மணியின் கையைப்பிடித்துக் கொண்டு அவன் முகத்துக்கெதிரே சாய்ந்து நோக்கினாள். அவள் நிழல் மணியின் மேல் படிந்தது. தன்னையறியாமல் கார்த்திகேயன் அந்த நிழலின் இதத்தைத்தானே நுகர்ந்தவனாய்த் தன் கரங்களைக் குறுக்கும் நெடுக்குமாய் ஒன்றன் மீது ஒன்றாய் மடக்கி உடலோடு பதியத் தடவிக் கொண்டான்.

''டே, மணி! என் கண்ணே! கார்த்திகேயன் வந்துட்டாண்டா, இனி மேல் பெரிய டாக்டரை அழைத்து வருவான். உனக்கு ஆபத்தில்லையடா, செல்வமே!.....''

மயக்கத்தில் ஆழ்ந்திருந்த மணிக்காகப் பெருகிய அந்த அன்பு மொழிகள் கார்த்திகேயனின் நெஞ்சில் பட்டுத் தெறித்தன.

''என் கண்ணே, துரை.....''

கண்களை மூடிக் கொண்டு கார்த்திகேயன் அச்சொற்கள் தனக்காக ஒலிப்பதாய்க் கற்பனையில் மூழ்கி இன்புற்றான் ஒரு நிமிஷம். ''துரையே..... கண்ணே.....'' அவன்தான் அவள் கண், அவளுடைய துரை.... மூத்த மகனல்லவா? தாய்மைக் கோயிலுள் அவனைக் காட்டி வரவேற்ற தேவதை.

''கண்ணா.... செல்வமே...என் கண்மணி! என் மணி!''

பிரமை கலைந்தது. பட்டென்று கார்த்திகேயனின் கண்கள் திறந்து கொண்டன.

''டே, கார்த்திகேயா! பெரிய டாக்டர் உடனேவரணும். நீ உடனே கிளம்பினாயானால் பன்னிரண்டு மணி பஸ்ஸைப் பிடிக்கலாம். பொழுது சாய்வதற்குள் டவுனுக்குப் போய் விட்டால் உடனே டாக்டரைப் பார்த்து...''

கார்த்திகேயன் ஆயாசத்துடன் பெருமூச்செறிந்தான். அன்னையின் முகத்துக் கறைகளில் அவன் எண்ணங்கள் சிதறி ஓய்ந்தன. ஏக்கம் கூட நுரையாய் ஓடிவிட்டது.

''அம்மா!''

''என் குழந்தை ஏற்கனவே அனுபவிப்பது போதாதா? காலை எடுத்துக் கொண்ட தெய்வம் இன்னும் ஏன் சோதனை செய்கிறது? அவனுக்கு இன்னும் என்ன இருக்கிறது?''

போர்வையின் அடியில் இருந்த தம்பியின் நொண்டிக் காலைப் பார்த்து விழித்தான் கார்த்திகேயன்.

''என் துரையைக் காப்பாற்ற வேண்டுமடா! சீக்கிரம் கிளம்புடா கார்த்திகேயா! ஏன் சும்மா நிற்கிறாய்? டாக்டரைக் கூட்டி வா, உம், கிளம்பேன்.''

''போகிறேனம்மா.... வந்து, ஊரிலிருந்து வந்து நான் இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லை......'' கார்த்திகேயன் ஆவலுடன் நிறுத்தினான். ராஜம்மாள் மணியிலே ஒன்றியிருந்தாள். ஏதும் பேசவில்லை.

கார்த்திகேயன் கடைசியில் தோல்வியை ஒப்புக்கொண்டான். ''ஏதாவது சாப்பிட்டு விட்டு உடனே கிளம்புகிறேன், அம்மா!'' என்று கூறி அங்கிருந்து அகன்றான்.

இவனுக்கா ஒன்றும் இல்லை? காலைக் கொடுத்து அம்மாவையே விலைக்கு வாங்கி விட்டானே!

நினைக்க நினைக்கக் கார்த்திகேயனின் நெஞ்சு சிதறியது. இதோ வாத்சல்ய வேதனையுடன் உட்கார்ந்திருக்கிறாளே, அம்மா, மணியின் கட்டிலருகில், அவன் கையைப் பிடித்துக் கொண்டு. அவள் முகத்தில் தான் என்ன வெளிச்சம்! மணிவண்ணனின் நலம் ஒன்றையே ஏற்றுக் கூடிய விளக்கா அது? மணி கண்களைத் திறந்தவாறு படுத்திருந்தான்.



நகரத்திலிருந்து பெரிய வைத்தியர் வந்து சிகிச்சை செய்ததில் உடல் நிலை சற்றுக் குணப்பட்டிருந்தது. இன்னும் கொஞ்சம் காலம் ஜுரம் திருப்பிக் கொள்ளலாம். அதிஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொண்டால் பிறகு கவலை இல்லையாம். கவனத்துக்கு என்ன குறைவு? அதோ, நிற்கிறாளே, அன்னை, தன் உயிரைக் கொடுத்தாவது அவன் உயிரை மீட்கக் காத்திருக்கிறாளே!

மகன் என்ற இயல்பான பாசம்தானா அது? அப்படியானால் பெரியவனும் வயிற்றில் பிறந்த மகன்தானே? மணியின்மேல் மீண்டும் மீண்டும் பரவி வருடும் அந்த அன்பு அலையின் ஒரு துளிர் கூடக் கார்த்திகேயனின் மேல் படிய வேண்டுமென்று அவளுக்குத் தோன்றாததன் காரணம் தான் என்ன?

கோபத்துடன் அவன் தம்பியின் ஊனக் காலை வெறித்துப் பார்த்தான்.

படுக்கையிலிருந்து மணியின் பார்வை அவன் மேல் விழுந்தது. ஏளனம் ததும்பும் வெற்றிப் பார்வை. தனக்காகப் பொழியும் அன்பு வெள்ளத்தின் விளிம்புக்கு வெளியே அந்த இன்னொரு செடி நீரின்றி வாடுவதை அறிந்ததனால் ஏற்பட்ட உவகை அது. அவனுக்குத் தெரியுமோ, தன் நொண்டிக் காலைத் தாண்டிக் கொண்டு அன்னையின் நெஞ்கள் அண்ணன் புக முடியாதென்று?

''என் செல்வமே, ராஜா மணிப் பயலே... நல்ல வேளை, அந்த மகானுபாவன் டாக்டர் உன்னைக் காப்பாற்றி விட்டான். நீ பிழைத்து விட்டாயடா, என் கண்ணே? என் செல்வத்துக்கு இருக்கிற கஷ்டம் போதாதா? இனி வேறு எதுவும் வரவேண்டாம்!''

தம்பியின் கேலிப் புன்னகைக்குப் பின்னே நினைவுகள் பதுங்கிக் கார்த்திகேயனை அலைக்கழித்தன. அதே புன்னகைதான் முன்பும் மணியின் முகத்தில். தகப்பனை இழந்துவிட்ட பிள்ளைகள் இருவரும். அப்போது மணி ஆறு வயதுப் பையன். கார்த்திகேயனுக்குப் பத்து வயது. பத்து வயது நிறைந்த சிறுவனை அம்மா எப்படி அடித்தாள்? ஏனென்றால் மணி புளுகி விட்டான் தன் செயற்கை மழலையில் ''அம்மா, கடிகாரத்தை உடைச்சது அண்ணன்தான்'' என்று. தான் குற்றம் செய்து விட்டு அவன் இன்னொருவர் மீது பழியைச் சுமத்தும் உண்மையை அம்மா அறிவாளா? அதைச் சொல்ல முடியாமல் கார்த்திகேயனை இரக்கம் ஏனோ தடுத்தது.

''பாவம், அந்தக் குழந்தை சமர்த்தாய் இல்லையா, இத்தனை துரதிர்ஷ்டத்திலும்? சனியனே!'' ஆத்திரத்தில் அடித்து நொறுக்கி விட்டாளே, பெரிய மகனை! அப்போதும் மணி இப்படியேதான் வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டிருந்தான். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். அந்தக் கால் வென்றது. கார்த்திகேயன் தோற்றான்.

அழகைப் போல, ஐசுவரியத்தைப் போல, வித்தையைப் போல, ஊனமும் யாவற்றையும் தனக்கு அடிமையாய்ச் செய்து கொள்ளும் அதிகார உரிமை பெற்ற அதிகார சக்திதான் போலும்! அந்த ஊனம் ராஜம்மாளின் அன்பு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. மணியின் நிலைக்குத் தான் அடிமை ஆகியதோடு உலகையும் தன் நெஞ்சில் அப்படி ஆக்கி வைத்தாள் அவள். அந்த முழுச் சமர்ப்பணத்தில் கார்த்திகேயனும் சேர்ந்து பலியானதைத் தன் தாய்மைக் கண்கள் காணாத தாயாகி விட்டாள். கார்த்திகேயனின் மனக்குறை வளர்ந்தது. மணியை நல்லவன் என்று கருதிய தாயிடமோ அவன் தம்பியைப் பற்றிப் புகார் சொல்லவில்லை. ஆனால் பெற்ற அன்னையைத் தனக்கு இல்லாதவளாகவே செய்து வந்த தம்பியிடம் பாசம் வளர முடியவில்லை.

''அம்மா!'' தன்னையும் மீறிய ஏக்க வேகத்துடன் அழைத்தவாறு அவள் அருகில் வந்தான் கார்த்திகேயன். ராஜம்மாள் தலை நிமிர வில்லை. மணிவண்ணனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா!''

''என்னடா?''

''என்பக்கம்தான் கொஞ்சம் திரும்பேன்.''

கேள்விக் குறியுடன் முகத்தைத் திருப்பினாள் ராஜம்மாள். ''என்னடா, சமாசாரம்?''

''சமாசாரம் ஒன்றுமில்லையம்மா. நான் ஊரிலிருந்து வந்து இத்தனை நாட்களாகிறது. என்னோடு நீ சரியாய்ப் பேசவே இல்லையே!''

''என்ன பேச வேண்டியிருக்கிறது?.... குழந்தைதான் பெரிசாய்ப் படுத்துக்கொண்டு விட்டானே!'' அம்மா மெதுவாய் மணியின் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். கார்த்திகேயனின் கன்னம் வெளுத்தது.

''என் செல்...ல அம்மா!'' கார்த்திகேயன் தன் தாயை நெருங்கி உட்கார்ந்து அவள் தோள்மேல் தன் தலையை மெல்லச் சாய்த்துக் கொண்டான்.

''கண்ணு....என் மணிப்பயல்!''

''அதுதான் பிழைத்து விட்டானே, அவன். இன்னும் என்ன? நான் ஒருவன் ஊரிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். என்னை..'' என்று தன்னை மீறிய உணர்ச்சி வேகத்தில் தெறித்து விழுந்தது கார்த்திகேயனின் பேச்சு. ராஜம்மாள் சீறிய நாகம் போல் திரும்பிக் கொத்தினாள்.

''நீ வந்தது என்னடா, பெரிய விஷயம்? இவனைச் சொல்லு. குழந்தை. ஆயுளெல்லாம் கஷ்டப்படுகிறான், மற்றவர்கள் போல் ஒரு நாளாவது சந்தோஷமாக இருந்திருக்கிறானா? அவன் பிழைத்து விட்டானென்று ஒரு பேச்சா? மனசு இருக்கிறதாடா உனக்கு? தம்பி என்ற ஆசை துளியாவது இருக்கிறதா?''

''அம்மா, அம்மா, கோபித்துக் கொள்ளாதே, அம்மா!''

''உனக்கு என்றுமே அவனைக்கண்டால் ஆகிறதில்லை. கரித்துக் கொட்டுகிறாய். அவனுக்கு உலகில் என்னதான் இருக்கிறது? பாவம்!''

''எப்போதும் அவன்தான் பாவமா?....''

''என்னடா, உளறல் இது? சீ, சீ, எழுந்து போடா! ஊனமுள்ள தம்பியைப் பார்த்து வயிறெரிகிற நீ என்ன மனுஷன்?...மணி, அப்போதிலிருந்து விழித்துக் கொண்டிருக்கிறாயே, கொஞ்சம் தூங்கப் பாரேன்டா, கண்ணே! ஏதாவது சாப்பிடுகிறாயா?''

விழித்துக் கொண்டு மட்டுமா இருந்தான் மணிவண்ணன்? அண்ணனை நோக்கிப் புன்னகையல்லவா புரிந்து கொண்டிருந்தான். அது எத்தகைய வெற்றிப் பார்வை! கார்த்திகேயன் மெள்ள எழுந்து வெளியே சென்றான்.

மறுபடியும் அவன் அறைக்குள் வந்தபோது அவன் கையில் ரோஜாப் பூக்கள் நிறைந்த குடலை இருந்தது. கண்களில் சமாதான முயற்சியின் தாபம் இருந்தது.

''அது போகட்டும், அம்மா, இதோ பார், ரோஜாப் பூ. எல்லாம் நானே தோட்டத்திலிருந்து பறித்து வந்தேன். சுவாமிக்கு மாலை கட்டுகிறாயா? நான் எடுத்துக் கொடுக்கிறேன். எப்படித் தொடுக்க வேண்டும் சொல்? பூவாகவா? இதழாகவா? நீ அழகாய்த் தொடுப்பாயே!'' ஆவல் பொங்கக் கார்த்திகேயன் தாயின் முகத்தை நோக்கினான்.

ராஜம்மாள் திண்ணைத்திலிருந்து பாலை மணியின் வாயில் புகட்டிக் கொண்டிருந்தாள். ''சுவாமிக்கு மாலை கட்ட நேரமேது? எல்லாம் அப்படியே பூவாய்ப் போட்டால் போதும்'' என்றாள் முகத்தைத் திருப்பாமல்.

கார்த்திகேயன் மௌனமாய் அவளைச் சற்று நேரம் பார்த்தான். பிறகு கட்டிலருகில் சென்று மணிவண்ணனின் ஊனக் காலின் மீது குடலையிலிருந்து மலர்களை கவிழ்த்தான்.

''என்னடா செய்கிறாய் இது?'' என்று வெகுண்டு திரும்பினாள் ராஜம்மாள்.

''இந்தக் குடும்பத்தில் இதுதானே தெய்வமாய் இருக்கிறது அம்மா? அதனால் பூவையெல்லாம் இதற்குப் போட்டேன். நீ—சொன்ன மாதிரி'' என்றவாறு கார்த்திகேயன் வெளியே சென்றான்.

வானில் கருமை படர்ந்தது. மனித நெஞ்சின் இருள் சூழ்ந்த மர்மக் குமுறல் அதிலே. கார்த்திகேயன் நடந்து கொண்டே இருந்தான். நீளமாய்ப் படர்ந்து கூடவே வந்த நிழலை ஆத்திரமாய் மிதித்தவாறு நடந்தான். பாதம்தான் கூசியது. நிழலை எதுவும் பாதிக்கவில்லை. வாழ்வில் பாயும் இருளினூடே இப்படி எத்தனை நிழல்கள்! உண்மைச் சத்து இல்லாத உருவற்ற அருவ எழுச்சிகளான அவற்றின் மூலைகளில் அடிபடும் சிலிர்ப்பில் நெஞ்சின் துடிப்புக்களெல்லாம் விறைத்து விட்டன.

அட, இது யார்? மதகடியருகில்? அதே சமயம் அவனும் திரும்பினான். சடையன்தான்—முன்பு அவர்களது பண்ணையில் இருந்துபின் விலகியவன்.

''ஐயா, நீங்களா?'' சடையன் எழுந்து அருகில் ஓடி வந்தான். ''எப்போது வந்தீக கிராமத்துக்கு? ஊரிலே அம்மா குழந்தைகளெல்லாம் சௌக்கியமா?''

''சுகந்தான். நீ எப்படி இருக்கிறாய், சடையா?'' என்று கேட்டான் கார்த்திகேயன்.

மனத்தை மறந்து சிறிது நேரம் சிரித்திருக்க வாய்ப்பு ஏற்பட்டது. பேசிக் கொண்டே இருவரும் நடந்தார்கள்.

''நீ இப்போது என்ன செய்கிறாய்?''

''ஊர்க் கோடி நிலங்களைக் குத்தகைக்குப் பயிர் செய்யறேனுங்க. ஏதோ மகராசன் சொந்தக்காரரு படியளக்கிறாரு.''

''பிள்ளை குட்டிகள்....''

''எல்லாரும் வயிறாரக் கஞ்சி குடிக்கிறோமுங்க. எல்லாம் நல்லவங்க பண்ணையிலே முதலிலே வேலை செய்த பலன்தான். ஐயா நல்லாயிருக்கணும்.''

''ஐயா யார்? மணிவண்ணனா?''

''இல்லீங்க. உங்களைத்தான் சொல்லேன்.''

கார்த்திகேயனின் புண்ணான இதயத்துக்கு இது சிறிது இதமாக இருந்தது. மனிதனைவிட அவனை உயர்வாய்க் கருதும் ஜீவன்கூட இந்த உலகில் இருக்கிறதல்லவா?

''நான் என்ன செய்துவிட்டேன், சடையா! எல்லாம் அம்மா ஆசீர்வாதம்தான்.''

''அது சரிங்க. அம்மா ரொம்ப நல்ல குணம்.'' சடையன் அதோடு மௌனமாகி விட்டான். எதையோ அவன் பட்டென்று இழுத்துப் பூட்டி விட்டதுபோல் கார்த்திகேயனுக்குத் தோன்றியது. அம்மாவிடம் உண்மையாகவே விசுவாசம் பூண்டவன்தான் சடையன். பின் ஏன் அவனது பண்ணையிலிருந்து விலகி விட்டான்?

''இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க. ரெண்டு எட்டிலே என் வீடு இருக்குது. ஐயா காலு வைக்கிற புண்ணியம் கிடைக்கணும்.'' நட்புக் குறியோடு தலையைச் சொறிந்தவாறு இளித்தான் சடையன்.

கார்த்திகேயனின் வறண்ட நெஞ்சம் துள்ளியது. ''கட்டாயம் வரேன், சடையா! நானும் கொடுத்துவைத்திருக்க வேண்டாமா?''

அந்த ஏழையின் குடிசையுள் அவன் நுழைந்தான். சடையன் பரபரப்புடன் ''இந்தா, முருகு. அந்தப் பலாப்பழம் இருக்குதே, அதை வெட்டிச் சுளை கொண்டு வா, ஐயாவுக்கு. ஏ, பழனி! உள்ளேயிருந்து....'' என்று தன் குடும்பத்தினருக்குக் கட்டளை பிறப்பிக்கலானான்.

சற்று நேரம் வரை தன்னை மறந்து சடையனின் உபசரிப்பில் இன்புற்று உட்கார்ந்திருந்தான் கார்த்திகேயன்.

''எல்லாம் நல்லாயிருந்துச்சுங்களா?''

''ஓ!''

''ஐயா சாப்பிட்டது எனக்கு ரொம்ப சந்தோஷங்க!''

'நான் இப்படியா இருக்கேன் ?'



கார்த்திகேயன் அவனை யோசனையோடு நிமிர்ந்து பார்த்தான். ''சடையா! எங்கவிடம் இத்தனை விசுவாசமா உனக்கு?''

''இல்லாமே?''

''பின்னே ஏன் எங்களை விட்டு வந்தாய்?''

சடையனின் தலை கவிழ்ந்தது. சிறிது நேரத்துக்குப் பின்தான் அவன் பதிலளித்தான். ''நானாக வரலீங்க.''

''என்ன!''

''ஆமாம். மணி ஐயாதான் அனுப்பிச்சுட்டாரு.''

''அப்படியா! ஏன்?''

சடையன் தயங்கினான்.

''பரவாயில்லே. தைரியமாய்ச் சொல்லு.''

''என் பையன் முருகன் இல்லே? ஒரு நாள் அவன் மணி ஐயாவோடே கிராமபோன் பிளேட் சிலதைத் தூக்கிட்டு வரப்போ பளு தாளாமே கீழே விட்டுட்டான். சின்னப் பையன்தானே? பிளேட்டெல்லாம் உடைஞ்சு போயிட்டுது.''

''அப்புறம்?''

'' மணி ஐயா கோவமா அப்படியே முருகனின் கன்னத்திலே ஒரு அறை விட்டாரு. பையன் சுருண்டு கீழே விழுந்தான்.''

கார்த்திகேயனின் முகம் கறுத்தது.

''நான் தோட்டத்திலேதான் இருந்தேன். பிளேட்டு உடைஞ்ச சத்தத்தைக் கேட்டு உள்ளே ஓடி வந்தவன், முருகன் அடி வாங்கி விழுந்ததைப் பார்த்துட்டு அவனை அணைச்சிக்கிட்டு 'ஏன் ஐயா பச்சைப் புள்ளையை அடிக்கிறீங்க' என்று கதறிட்டேன். அவரு என்னை வாயிலே வந்தபடி திட்டினாரு. நான் அப்பவும் குழந்தைக்குப் பரிஞ்சு பேசினேன். அவருக்கு ஓரேயடியாய்க் கோவம் வந்திருச்சு. கையைக் கூட அநேகமா ஓங்கிட்டாரு என் மேலே.....''

''அப்புறம்?''

''கடைசியில் என்னை வெளியே போகச் சொல்லிட்டாரு. எத்தனையோ கெஞ்சினேன், குழந்தை குட்டிங்களோட எங்கே ஐயா நான் போவேன்னு. அவரு காதிலே எதுவுமே ஏறலே, ஐயா!

''அம்மா நெலங்களைப் பார்வையிடப் போயிருந்தப்போதான் நடந்தது. கடைசியிலே அவங்ககிட்டே மணி ஐயா நான் ஏதோ தாறுமாறு நடந்துக்கிட்டு விலகறேன்னுட்டு சொன்னாரு. அவரைப் பத்திச் சொல்லி அம்மா மனசை வருத்தப்படுத்தக் கூடாதுன்னு நானும் அதை மறுக்காமலே வந்திட்டேன்.''

அப்போதும் மணிவண்ணனுக்குச் சதுரகை! புன்னகை செய்திருப்பான். ஆம், மணி அப்போதும் அதே வெற்றிப் புன்னகை செய்திருப்பான். அன்பையும் அனுபவத்தையும் தவிர வேறெதையும் தனக்குத் தர யாரும் துணியமாட்டார்களென்ற உறுதி! நொண்டிக் கொண்டே போய்ச் சிகரத்தில் ஏறிவிட்ட இறுமாப்பு! நெஞ்சின் கடுமையும் அறிவின் பேய்த்தனத்தையும் இரக்கப் போர்வையுள் மறைத்துக் கொள்ளும் வலிமையில் வந்த அதிகாரம்!

''அப்புறம் ஆறு மாசம் குடிக்கக் கஞ்சி இல்லாம என் குடும்பமும் ரொம்பக் கஷ்டப்பட்டது. பிற்பாடு ஏதோ தெய்வம் கண் திறந்து பார்த்தது.''

''உனக்கு ஒரு குறைவும் வராது, சடையா! நான் கடைசி வரை உன்னைக் காப்பாற்றுகிறேன், பயப்படாதே. வரட்டுமா?''

இருளில் தலை குனிந்தவாறு வீடு நோக்கி நடந்தான் கார்த்திகேயன். தாங்கவொண்ணாச் சோகச் சுமை நெஞ்சை அழுத்தியது. எத்தகைய அரக்கன் மணி! இதயமில்லாதவன்! ஆயினும் — வெற்றி எப்போதும் மணிக்குத்தான்! சடையன்கூட அதற்குச் சாட்சி! 'பாவ'மாம், பாவம்! மணிக்காகவா பரிதாபம்? அவனுக்கா குறை? இல்லை, இல்லை! 'என் கண்ணே! என் துரை! என் மணிப் பயலே!' இவ்வளவு ஆண்டுகளில் ஒரு தரமாவது சம நிலையில் அந்த அன்புக் குரல் 'என் அருமை கார்த்திகேயா!' என்று முணுமுணுத்திருக்குமா? அவனது வியர்க்கும் முகத்துக்கு ஒரு பரிவான தடவல் கிடைத்திருக்குமா? அவனது பசித்த விழிகளுக்கு ஒரு கனிந்த பார்வை பரிசளித்திருக்குமா? என்ன அன்பு அந்த முகத்தில்! தன் இதயத்தில் அவன் தைத்து வைத்து ஆராதிக்கும் அந்த முகத்தில்தான் எத்தகைய தெய்வீக அன்பு! நினைக்கும் போதே நெஞ்சு குளிர்கிறது. அந்த அன்பு முகத்தில் இரு அன்புக் கண்கள். அன்பு வாயில் அன்புமொழி ஆறா! ஆத்மாவே சிலிர்க்கிறதே! அந்த அன்பு மொழிகள் அசைகின்றன, கீதமாய் இசைக்கின்றன, அமுதமாய் உயிரூட்டுகின்றன... இதோ அந்த மொழிகள்... அவன் உள்ளம் ஏங்கி ஆவலுறுகிறது. காதுகள் கரம் நீட்டுகின்றன, உடல் புல்லரிக்கக் காத்திருக்கிறது....இதோ அந்த மொழிகள்...என்.... 'என் மணிப் பயலே!'

உணர்வில் பாய்ந்த வேலுடன் கார்த்திகேயன் அதிர்ந்து நின்று விட்டான். இன்னும் எவ்வளவு நாளைக்கு இது?

அந்த அன்பு முகம் கட்டிலின் பக்கம் திரும்பியது. என்ன பரிவு! பால் கிண்ணத்தை எடுத்து மணியின் வாயினிடையே வைக்கிறாள். 'என் குழந்தை' என்று கொஞ்சுகிறது அவள் வாய். பிறகு அதே வாயிலிருந்து வேறு மொழிகள்.

''சீ, சீ! எழுந்து போடா!''

''மாட்டேன்...!''

உலகின் ஒவ்வோர் அணுவும் அவன் நெஞ்சோடு குரலெழுப்பித் திடீரென்று முழங்கிக் கொண்டிருந்தது.

முடியாது. இந்தக் கொடுமையை இனி அவன் தாங்க மாட்டான். ஊனத்தால் தெய்வமாக மணியைப் போற்றுகிறாளே, அவன் அம்மா, அவளிடம் மணியின் உண்மை சொரூபத்தை அவன் இனியும் மறைக்க மாட்டான். உணர்வின் மூடுபட்ட ஏதேதோ அந்தரங்கக் குகைகளிலிருந்து முன்பு அவன் அடக்கிவைத்த ஒலியெல்லாம் பீறிட்டது. ''அம்மா, கடிகாரத்தை நான் உடைக்கலே, மணி உடைச்சது மட்டுமல்லாமல் பொய் சொல்லி என்மேல் பழியைப் போடுகிறான். மணி கெட்டவனம்மா!''

அவனுக்காகவா என்னை மறந்து விட்டாய்?

இனியும் தாங்க முடியாது. ஒரு குறையோடு இன்னொரு குறையை எதிர் வைத்துச்

சலுகையை அழித்து விடவேண்டும். உடல் ஊனம் உடையவன் மனிதத் தன்மையிலும் ஊனமுள்ளவன் தான் என்பதை அம்மாவுக்குக் காட்ட வேண்டும். சடையன் விஷயத்தில் மணி செய்த அநியாயத்தை வெளிப்படுத்த வேண்டும். அப்போது அந்த அன்பழுத்தம் அவள் கண்களிலிருந்து சரியும். அவள் அதிர்வாள், அந்த அதிர்ச்சியில் உண்மையைப் பார்ப்பாள், முதன் முதலாகப் பெரியவனை யும் பார்ப்பாள். ''கார்த்திகேயா! இவன் இப்படிப்பட்டவனா?'' என்று பெரியவனை அணைத்துக் கொண்டு கதறுவாள். அந்த அணைப்பின் கதகதப்பில் கார்த்திகேயனின் உடல் சிலிர்த்தது.

இனி வெற்றிப் புன்னகை ஏது மணியின் முகத்தில்!

வெறியோடு வீடு நோக்கி ஓடினான் கார்த்தி கேயன். நம்பிக்கை மேலே மேலே எழுந்தது.

ஆவல் உந்தியது. ஏக்கம் விலக இருந்தது. நிறைவு அருகில் நின்றது.....

இதோ வீடு.

இது என்ன கூட்டம் வாசலில்?

இது என்ன அழுகையொலி?

ஒருகணம் தடைப்பட்டு நின்றான் கார்த்தி கேயன். பிறகு கூட்டத்தினிடையே பாய்ந்து உள்ளே ஓடினான். உள்ளத்தில் பொங்கி வந்து கொண்டிருந்த உணர்ச்சிகளெல்லாம் கழலிட்டுத் திடீரென்று நின்றன.

மணிவண்ணன் தரையிலல்லவா படுத்திருந் தான்? தலையணை இல்லையே! சுற்றிலும் ஜனங் களின் பிரலாபம்.

அதோ...அவன் அம்மா! மணியின் மார்பு மேல் விழுந்து புழுவாய்ப் புரண்டு கொண் டிருந்தாள். அவள் கண்ணீர் அவன் சட்டையை யெல்லாம் அப்படி ஈரமாக்கியிருந் தது. உள்ளேயிருந்து ஆங்காங்கு உடலின் நிறம் தெரியும்படியாய்?

'அம்மா! என் அம்மா!' வெறித்துப் பார்த்த கார்த்திகேயனின் தேகம் ஒரு புது நடுக்கத்தில் துடிதுடிக்கத் தொடங்கியது. மேலெழுந்த நம்பிக்கையை யெல்லாம் மோதி உடையச் செய்த பாறையாக நின்ற உண்மை யைக் கண்டு சற்று நேரம் உணர்ச்சியையும் மீறிச் சிலையானான்.

பகலில் திடீரென்று மணியின் உடல் நிலை மறுபடியும் மோசமாகி இருக்கிறது. இரவுக் குள் அந்தநோய்த் திருப்பம் ஆபத்தாய் மாறி அவன் உயிரையே குடித்து விட்டது.

துடிக்கும் கல்லாய் நின்றான் கார்த்திகேயன். மணிவண்ணனின் முகத்தில் இன்னும் அதே வெற்றிப் புன்னகை. 'என்னை வெல்ல எண்ணி னாயே, முடிந்ததா? கடைசி வரை வெற்றி என்னுடையதுதான்!' என்று முழங்கி அண்ணனை ஏளனம் செய்தது அப்புன்னகை.

''என் கண்ணே! என் மணிப் பயலே!... என்னை விட்டுப் போய் விட்டாயே? எப்படி யடா, தாங்குவேன் இதை என்செல்வமே...''

ஆம், இனி மணியை வெல்வதெப்படி? அவன் குணத்தின் கொடுமையை வெளிப் படுத்தித் தாயின் நெஞ்சில் அவன் இடத்தைத் துளை செய்து அந்த அழுத்தம் நெகிழ்ந்த போது அதில் தான் சிறிது நுழைந்து அனுப விக்க விரும்பி ஓடி வந்திருந்தான் கார்த்தி கேயன். ஆனால் இனி அப்படித் துளை செய்ய முடியுமா? இறந்தவனைப் பற்றிக் கெடுதலாய்ச் சொன்னால் யாராவது, முக்கியமாய்ப் பெற்ற அன்னை நம்புவார்களா? இறந்தவர்கள் குற்ற மற்றவர்கள் அல்லவா ஆகி விடுகிறார்கள்? இறக்க என்ன துணிச்சல் இந்த மணிக்கு! தாயின் நெஞ்சோடு நெஞ்சாய் ஒன்றி உறைந்து நிலைத்து விட்டானே பாவி! அண்ண னது நம்பிக்கையின் வாய்ப்புக்களை யெல்லாம் நிரந்தரமாய் அழித்து விட்டானே! இனி கார்த்திகேயன் அம்மாவை அடைவது எப்படி? இன்ப மகனாய், அன்பு நிலைவாய், பாவம் தீண்டாத பவித்திரப் பொருளாய், தாயின் நெஞ்சில் என்றைக்கும் தெய்வமாய் இறங்கி அவள் அன்பில் கலந்து விட்டானே இளைய வன்! இனி அந்த லயிப்பின் இறுக்கத்தில் மூத்தவனுக்கு இடமேது?

'இது நியாயமில்லை. இது நியாயமே இல்லை' என்று அந்த வெற்றிப் புன்னகையைப் பார்த்து அவன் மனம் ஓலமிட்டது.

''கண்ணே! துரையே! செல்வமே!''

''அம்மா! என் அம்மா!''

கார்த்திகேயனின் உடல் விம்மல்களில் பதறத் தொடங்கியது. கண்ணீர் கட்டுப்பா டின்றிப் பெருக்கெடுத்தது. தம்பி இறந்ததற் காகத்தான் அவன் அழுதான். ஆனால் தம்பிக் காக அழவில்லை. தனக்காகத்தான், தன் நிலையின் அநியாயப் பரிதாபத்துக்காகத்தான், அப்படிக் கதறிக் கதறி அழுது கொண்டிருந் தான் கார்த்திகேயன்.

எங்களுடைய 'பணம் பிறகு செலுத்துங்கள்' திட்டம் இன்னும் வசதியாக்கப் பட்டுள்ளது



எங்களது, திருத்தியமைக்கப்பட்ட, 'பணம் பிறகு செலுத்துங்கள்' திட்டத்தால் பலன் பெறுங்கள். முதலில் செலுத்த வேண்டிய பணம் முன்னைவிட சொற்பமாக்கப் பட்டுள்ளதோடு பாக்கியை வசதியாகச் சிறு தொகைகளாகச் செலுத்தக் கூடியவாறு காலவரையறை இன்னும் நீடிக்கப்பட்டுள்ளது! இப்பொழுதைய ஏற்பாட்டின்படி பிரயாணக் கட்டணத்தின் தொகையில் 15% உடனடியாகச் செலுத்தினல் போதும்—மீதியை, 20 மாதங்களில் சுலபமான தவணைகளில் செலுத்தலாம்! 'பஸ்ட் கிளாஸ்' 'எகானமி' வகுப்புகளுக்கு, எல்லா சர்வீஸ்களிலும் இந்தச் சலுகை உண்டு!

எந்த டிராவல் ஏஜெண்டிடமிருந்தோ, பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்தோ அல்லது நேராக எங்களிடமிருந்தோ அதிக விபரம் பெறலாம்!

ஏயர்-இந்தியா

பி. ஓ. ஏ. ஸி. மற்றும் காண்டாஸின் ஒத்துழைப்புடன்

JWT/AII-2710


ஜுரத்தின் அறிகுறியா?
உடனே சிறிதளவு
அமிர்தாஞ்சனம்
தடவுங்கள்
அது விரைவில் குணமளிக்கும்
AMRUTANJAN
Pain Balm
ஜலதோஷம், ஜுரம், வாயுப் பிடிப்பு போன்ற உபாதைகளிலிருந்து உங்கள் குடும்பத்தை காப்பாற்றுங்கள். ஒவ்வொரு முறையும் சிறிது அளவே அமிர்தாஞ்சனம் உபயோகிக்கவேண்டி இருப்பதால் ஒரு பாட்டில் நெடுநாள் நீடிக்கிறது.
அமிர்தாஞ்சனம் லிமிடெட்
மதராஸ்-4
பம்பாய் 1. கல்கத்தா 1. புதுடெல்லி 1
IWT.AH 1427

அத்தியாயம் 44

அனந்தசாமிக்குக் கவலை. காசிலிங்கத்தின் குணம் என்னவென்று ஏறக்குறைய பூர்ணமாகவே அவருக்குத் தெரிந்திருந்ததுதான் அவ்வளவு கவலையைத் தந்தது. கோபம் வராது அவனுக்கு. அடக்கிக் கொள்ளும் உரப்பும் உள்ளவன். வந்தால் ஓர் அளவுக்கு. தீர்க்க யோசனைக்குப் பின்புதான் வரும். ஆனால் அந்தக் கோபம் அவன் படிப்புக்கும், வாசனைக்கும் ஏற்பத்தானே உருவெடுக்கும். ஆகவே மறுபடியும் "நல்லதனமாக அவருக்குப் புத்தி சொல்லுங்கள். அதற்கு மேல் ஒன்றுமே சொல்ல வேண்டாம்... புத்தி சொல்வது கூடத் தேவையில்லை என்று படுகிறது எனக்கு" என்றார் அவர்.

"முதலிலேயே, சாமி ஒண்ணும் சொல்லலியே. நான் தானே புத்தி சொல்றேன்னு சொன்னேன். அட்டாதுட்டியா ஒண்ணும் செய்யப்படாதுன்னு சாமி நினைக்கிறது புரியலியா எனக்கு? அதைக் காப்பாத்திப்பிடறேன். ஆனா ஒண்ணுமே சொல்ல வேண்டாம்னு எப்படி இருக்கிறது? அதுதான் என்ன நியாயம்? நானும் சேர்ந்து பணினதாலே ஒரு வார்த்தை சொல்றதுக்கு நான் கடமைப் பட்டவன். அதுனாலே சாமி அதைத் தடுக்கலாமா?" என்று கேள்வியில்லாத ஒரு கேள்வியுடன் மீண்டும் வற்புறுத்தினான் காசிலிங்கம்.

அவன் புறப்படும் பொழுது மணி ஒன்பதுக்கு மேல் ஆகி விட்டது. போகும்பொழுது



அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

சற்று நின்றான். "இவ்வளவு படிச்சவருக்கு இப்படி எல்லாம் நாக்கிலே பல்லுப் போட்டுப் பேசத் தோணிச்சு சாமி. நானும் போக்கிரிதான்: இருந்தாலும், கட்டி வச்சு அடிச்சாலும் இந்த மாதிரி கோணல் எல்லாம் எங்களுக்குத் தோணாது" என்று "ம்" என்று இழுக்காற் போல் உள்ளங்கையை மல்லாத்தி இரண்டு தடவைகள் மேல் நோக்கி அசைத்து விட்டுக் கீழே இறங்கினான். பேச்சுக் குரலைக் கேட்டு வாசலில் வந்து நின்ற ருக்மிணியைப் பார்த்துக் கும்பிட்டு விடை பெற்றுக்கொண்டான்.

கடைசியில் அவன் சற்று நின்று பெருமூச்சு விட்டு விட்டுப் போன அந்த நிலை அவர் கண் முன்னேயே நின்றது.

சாதம் பரிமாறி விட்டுக் கீழே போய்விடுகிற ருக்மிணி இன்று வழக்கத்துக்கு மாறாக மீண்டும் வந்து நின்றாள். சற்று நின்று விட்டு, சுவரில் சாய்ந்து காலை முன்னால் மடக்கியவாறு உட்கார்ந்தாள்.

பெரிது வியப்பாக இருந்தது அவருக்கு. ஆனால் ஒன்றும் கேட்கவில்லை. கிழக்கு ஜன்னலைப் பார்த்துக்கொண்டு நின்றார். வானத்தில் கேள்வியைப் போட்டது போல ஒரு நட்சத்திர வரிசை இடுப்பை முன்னால் வளைத்து, தலையைப் பின்தள்ளி யிருந்தது.

அவர் மனம் சூன்யமா யிருந்தது. ஓர் எண்ணமுமில்லாத சூன்யம். அப்படியே நின்று கொண்டிருந்தவர், தாமே அசைவற்று நிற்பதால் சற்று முன்னும் பின்னும் ஆடுவதை உணர்ந்தார். இரண்டு பெருக்க மீதும் குறுக்கே

கிடந்த தாமும் பாய்ச் சுருட்டை விரித்து விட்டுப் பணக்கட்டையை வைத்து ஜன்னலைப் பார்த்தவாறே படுத்தார். திரும்பி ஒரு தடவை ருக்மிணியைப் பார்த்தபொழுது அவள் பெஞ்சின் காலைப் பார்ப்பதுபோல் வெறித்துப் பார்த்தவாறு உட்கார்ந் திருந்தாள். பெஞ்சின் காலைப் பார்க்கவில்லை அவள். அவள் பார்வையும் சூன்யத்தில்தான் ஊடுருவி ஒடுங்கி யிருந்தது.

கால் மணி, அரை மணி, ஒரு மணி, இரண்டு மணி ஆகி விட்டது. தொலைவில் கேட்கும் பஸ் ஓடும் அரவம் கூட நின்று விட்டது. எப்பொழுதாவது ஒரு கார் ஹார்ன் கேட்கிறது. சில் வண்டு எங்கோ இரைகிறது, பின்பக்கத்து வீட்டு விளாமரத்திலோ என்னவோ.

மணி பன்னிரண்டு அடித்தது கேட்டது, பக்கத்துவீட்டுக் கடிகாரம். இரவின் மூச்சைப் பிடித்து உறங்கும் அமைதியில் மட்டும் கேட்கும் அதன் அளப்பு. இப்பொழுது கேட்டது.

மறுபடியும் ஒரு மணி. பன்னிரண்டரை. ருக்மிணி அப்படியேதான் உட்கார்ந்திருக்கிறாள்.

அடிக்கடி அவள் பக்கம் திரும்பினார் அவர். ஒரு தடவை அவள் கண் மூடியிருக்கும். ஒரு தடவை திறந்து எங்கும் பார்க்காமல் பார்த்துக் கொண்டிருக்கும். கதவுகள் திறந்து கிடந்தன. அவளுடைய சித்தி கூட விளக்கை அணைக்காமல், படுக்காமல் விழித்துக் கொண்டிருக்கிறாளோ என்னவோ?

அவருக்குச் சற்று வியப்பாக இருந்தது. எதிரே ஒருவரை வைத்துக் கொண்டு இவ்வளவு மௌனம் சாதிப்பது அவரால் முடிகிற காரியமே இல்லை. பொல பொலவென்று ஏதாவது பேசி, உதிர்த்துக்கொண்டே யிருக்க வேண்டும். ஆனால் இவள் எதிரில் வாய் கட்டி விடுகிறது. இந்த முதல் அனுபவம் கூட இங்கு வந்த பிறகு மெதுவாக மறைந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும். நாலைந்து நாட்கள் நிறையவே அவளோடு பேசினார் அவர். இப்பொழுது அதை யெல்லாம் ரத்து செய்வது போல் இருவருக்குமிடையே, இந்தத் தனிமையில், இரவில், நெருக்கத்தில், குறுகிய, ஆழ்ந்த பள்ளம் போல அமைதி நடுவில் கிடந்தது — தாண்டக் கூடிய, ஆனால் தாண்டக் கூசுகிற பள்ளம் போல.

எதற்காக இங்கே வந்து அமர்ந்திருக்கிறாள்!

மணி மீண்டும் ஒன்று அடித்தது. ஒன்றோ — ஒன்றரையோ!

''ரொம்ப நேரம் ஆகி விட்டதுபோல் இருக்கிறதே'' என்றார் அவர்.

அந்தச் சத்தத்தைக் கேட்டுச் சற்றுத் தூக்கிப் போட்டது ருக்மிணிக்கு.

''வெகு நேரமாக இப்படியே உட்கார்ந்திருக்கிறாற் போலிருக்கிறதே?'' என்றார் அவர் மறுபடியும் அவள் திரும்பியதைப் பார்த்து.

''என் மனம் சரியாக இல்லை. படபடவென்று பறந்து கொண்டேயிருந்தது. அதனால்தான் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

ஏறக்குறைய தாமும் அதே நிலையில் துன்புறுவதைஅனந்தசாமி உணர்ந்தார்.

''ரங்கனுக்கு ஏன் இப்படி யெல்லாம் பிதற்றவேண்டும் என்று தோன்றிற்று?'' என்றாள் ருக்மிணி.

''இதைப்பற்றித்தான் காலையில் பேசி விட்டோமே. யாராவது ஒருவர் ஆரம்பித்து வைக்க வேண்டாமா? இதைப் பற்றியா இவ்வளவு வேதனைப் பட வேண்டும்? அமிர்தத்துக்கு முன்னால் விஷம்தானே வந்தது?''

''அப்படியே மறுபடியும் நடக்குமோ...?''

''ஏன்?''

''விஷத்துக்குப் பிறகும் விஷமே வந்தால்?''

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?''

ருக்மிணி தூங்கி வழிகிறவள் தன்னையே மீட்டுக் கொள்வதைப்போல ஒரு தடவை தன் மயக்கத்தை உதறிக் கொண்டாள். ''என்னமோ வாயில் வருகிறது. சொல்லி விட்டேன்'' என்று சற்றுப் பேசாமலிருந்து விட்டு மீண்டும் தொடங்கினாள். ''சந்திரா கப்பலில் ஏறி எங்கோ போவது போலிருக்கிறது.—''

''கப்பலிலா — எங்கே?''

''எங்கோ.''

''ஸ்வப்னம் கண்டீர்களா?''

''ஸ்வப்னம் மாதிரிதான். ஆனால் விழித்துக் கொண்டேயிருக்கிறேனே... கப்பல் அவளைச் சுமக்கிறது. அவள் வேதனையையும் துன்பத்தையும் சுமந்து கொண்டிருக்கிறாள். எனக்கு ஏன் இப்படி யெல்லாம் தோன்றுகிறது? இந்த ரங்கன் வந்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பழையபடி இருக்க மாட்டானா?''

ஆசை மாதிரி இருந்ததே தவிர, அது விடையை எதிர்பார்க்கிற கேள்வியாக இல்லை.

''இவ்வளவு கோபதாபம் உள்ளவர்கள் மன்னிப்புக் கேட்பவர்களாகத்தான் இருப்பார்கள்.''

''அப்படியா? அவன் கேட்டுக் கொண்டு விடுவானோ?''

''அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது....''

''அவனைப் போய்ப் பார்த்து அதற்கு ஒரு வழி செய்தால் என்ன?''

''நிச்சயமாகச் செய்கிறேன்.''

''காலையில் போக முடியுமா?''


''போகிறேன்.''

சற்றுக் கழித்து மென்று மென்று சொன்னான் ருக்கு. ''அப்படிச் செய்தால் தான் எனக்கு நிம்மதி வரும் போலிருக்கிறது. மனத்தைத் திறந்து சொல்லிவிடுகிறேன். எனக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டம் வந்திருக்கும்பொழுது, இவ்வளவு சிறிய பெண் கலங்குவது என்னமோ ஒரு குறுகுறுப்பை உண்டுபண்ணுகிறது எனக்கு.''

அனந்தசாமி பரிவுடன் அவளைப் பார்த்தார். அவர் புன்சிரிப்பு லேசாக விரிந்தது.

''நீங்கள் மாடியில் இருக்கிறீர்கள். நான் கீழே தான் இருக்கிறேன். ஆனால் இதை எத்தனை பேர் புரிந்து கொள்ளப் போகிறார்கள்? ரங்கனே புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் இந்தக் குறுகுறுப்பு வந்து என்னைத் தொல்லைப் படுத்துகிறது என்று நினைக்கிறேன்.''

''நான் நிச்சயமாகப் போய் அவளைப் பார்க்கத்தான் போகிறேன். நீங்கள் சொன்னதற்காக மட்டும் இல்லை. எனக்காகவும் தான். இந்தச் சந்திரா எப்



படியோ என் மனத்தில் ஒட்டிக் கொண்டு விட்டாள். என் பெண்ணைப் போல் ஓர் ஏக்கத்தைத் தூண்டி விடுகிற அளவுக்கு அது ஒட்டிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது உங்கள் பெண்ணைப் போல, நம் பெண்ணைப் போல, எனக்குத் தோன்றுகிறது. 'நான் கட்டாயம் போகத்'தானே வேண்டும்.''

ருக்மிணி முதுகில் சிலிர்ப்பு ஓடிற்று. ''நம் பெண்ணைப் போல, நம் பெண்ணைப் போல.... நம்...நம்...நம்...''

மனம் அதைத் திரும்பத் திரும்ப முணகிற்று. எல்லாம் நிறைவேறிவிட்ட அதிர்ச்சி அப்படியே முடக்கி விட்டதே அவளை. வாயைத் திறந்தாள். இறுக்கி மூடிக் கொண்டாள். கண்களில் கரகர வென்று பெருகிற்று. நிறைவும் ஆனந்தமும் மூச்சை முட்டுவது போலிருந்தது.

உள்ளம் அந்த நெகிழ்விலிருந்து படிந்து அமரச் சிறிது நேரமாயிற்று.

''நான் வருகிறேன்'' என்று எழுந்து கீழே போனான். கதவு திறந்து கிடந்தது. சித்திக்கு நல்ல தூக்கம். எந்தக் கவலையுமில்லாத தூக்கமாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் அவயாம்பாள்.

ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்து விட்டு, விளக்கை அணைத்து விட்டுப் படுத்தாள் ருக்மிணி.

அனந்தசாமியும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்தார். கண்ணை மூடிய போது அந்த அறையிலேயே, ரிஷிகேசம், இமயமலையின் சிகரங்கள், கங்கையெல்லாம் நின்றும், சலசலத்தும் ஒளிர்ந்தும் சூழ்ந்து நின்றன.

விடியற்காலையில் விழிப்புக் கொடுத்ததும அனந்தசாமி வழக்கம் போல் கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்தார். ஆனால் மனத்தை அழிக்க வில்லை. நிலையைக் கொல்ல வில்லை. கொல்ல முடியவில்லை. தொழுது கொண்டிருந்தார் அவர். வேண்டிக் கொண்டிருந்தார். ''இந்த ரங்கன் மனம் மாற வேண்டும். மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டாம் அவன். அந்தச் சிறுமை — அல்லது பெருமை — இரண்டுக்கும் அவன் ஆளாக வேண்டாம். பழையவற்றை மறந்து விட்டு அவன் மீண்டும் சுப்புசாமியின் வீட்டுக்கு வர வேண்டும். முன் போல் பழக வேண்டும். சந்திராவை மீண்டும் பார்க்க வேண்டும். முதன் முதலில் பழகியது போலப் பழக வேண்டும்.'' ஒரு முறை இரண்டு முறை யில்லை: பல முறை. எட்டு மணி சுமாருக்கு பிளாஸ்கில் இருந்த காப்பியைச் சாப்பிட்டுவிட்டு வெளியே போகத் தயார் செய்து கொண்டார். புதிதாக இரண்டு மூன்று மருந்துகளை எடுத்துப் பொட்டணம் கட்டினார்.

''போஸ்ட்'' என்று குரல் கேட்டது.

''ம்.''

தபால்காரன் உள்ளே வந்து ஒரு கவரைக் கொடுத்து விட்டு நகர்ந்தான். கனமாக இருந்தது. பிரித்தார். கடிதம் வருவதே ஆச்சரியம். அதுவும் நாலைந்து பக்கம். மேலே கவரையோ தேதியையோ காணோம். கடைசிப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தார். ரங்கன் தான் எழுதியிருந்தான்.

ரங்கனா!

ஒன்றும்புரியாமல் வாசிக்கத் தொடங்கினார். ஆங்கிலத்தில் எழுதியிருந்தது.

''வணக்கத்துக்குரிய சுவாமி
அவர்களுக்கு,

உங்கள் நேரத்தைச் சிறிது நேரம் பறித்துக் கொள்கிறேன். உயிர்களிடம் கருணை கொண்டு நாளும் மண்ணிலும், கல்லிலும், கொடையிலும், மழையிலும் குளிரிலும் நடக்கும் உங்கள் 'ஜீவதயையை' என்னிடமும் சிறிது காண்பித்தால்; இந்தக் கடிதத்தை வாசிக்கும் நேரத்தை வீண் என்று நீங்கள் கருதமாட்டீர்கள்.

இந்தக் கடிதத்தைத் தாங்கள் பெரிய ரகசியமாகக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றுவீர்கள். அநாவசியமான சந்தேகங்கள், குழப்பங்கள் இவை யாவும் எழாமல் எல்லாரும் நிம்மதியாக இருப்பார்கள். பொழுது விடிந்ததும், தெருக் கூட்டுவது, மாடு கறப்பது, அடுப்பு மூட்டுவது, ரயில் ஓடுவது போன்ற நின்று கவனிக்கத் தேவையில்லாத எத்தனையோ அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்றாக இது கலந்துவிடும். அப்படிக் கலந்து விட வேண்டும் என்பதே என் ஆசை.

உங்களிடம் இன்று காலை நான் வந்த மனநிலை வேறு. கரை உடைத்து வருகிற கோபத்தோடு வந்தேன். கரையைத் தாண்டிக் கத்தினேன். அடுக்கடுக்காக நான் அடுக்கிக் கொண்டு வருகிற தவறுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் இந்தத் தவறையும் செய்து விட்டேன். இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை. செய்யவும் இனிமேல் என்றும் முடியாது. செய்ய முடியாமல் போனதற்கு நான் தங்கள் மன்னிப்பைப் பெற்றுவிட வேண்டும் என்று துடிக்கிறது. எத்தனையோ பேர்கள் உங்களிடம் வருத்தப்பட்டிருக்கலாம். கோபம் கொண்டிருக்கலாம் - ஏதோ நோய் குணமாகவில்லை என்று. ஆனால் நான் எந்தக் காரணமும் இல்லாமல் பிரமை பிடித்துச் சீறினேன். மரியாதையுள்ள மனிதர்கள் சொல்ல நினைக்காதவற்றைச் சொல்லியிருக்கிறேன். நிறைந்த மனிதக் கருணையுடன் அதை மன்னித்துவிட வேண்டும். இதை எழுதும்போது நீங்கள் புண்பட்டிருப்பீர்களா என்றுகூட எனக்குச் சந்

தேகமாயிருக்கிறது. அவ்வளவு அமாந்து போன இதயம் தங்களுடையது. ஆனால் நான் குற்றம் செய்தது செய்ததுதான். அதற்கு நான் கழிவு தேட வேண்டியது தான் நல்லது என்று தோன்றுகிறது.

நான் செய்திருக்கிற அகாரியங்கள் தற்கால நிலைப்படி குற்றமில்லை என்று யார் சொல்லலாம். பல பெண்களைத் தீண்டியிருக்கிறேன். பல மதுக்களை உண்டிருக்கிறேன். வியாபாரத்தில் நடு மனிதன் என்ற முறையில் நான் தினமும் செய்து வருவது குற்றம்தான். ஒரு சாமானை வாங்கிக் காப்பாற்றி வைத்து, பிறருக்கு விற்பது ஒரு சேவைதான். ஆனால் தேவைக்கு மேல் அதிலிருந்து நான் அடைய முயல்வது குற்றம். அதுதான் தொழில், வியாபாரம் என்றெல்லாம் நான் நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அந்தத் திடமே மனத்தைக் 'கல்லாங்காயாக' ஆக்கிப் பொய்கள் சொல்லி, பெரிய அளவிலும் 'லாபம்' சம்பாதிக்க வைத்திருக்கிறது. ஆனால் இதற்கெல்லாம் கழிவாக நான் இதைச் செய்யவில்லை.

இதையெல்லாம்விட வேறு ஒரு காரணம் தோன்றிதான். சந்திராவை நான் துணையாகக் கொள்ளும் ஆசையில்தான் பழகினேன். ஆனால் அவளுக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறது. அவளைப் பார்க்கும்போது எல்லாம் கோவிலின் உயர்ந்த கர்ப்பக் கிருகத்து கோபுரத்தில் மின்னும் கலசத்தைப் பார்ப்பது போல்தான் எனக்குப் பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. பீச்சில் அவள் கையைப் பற்றிக் கொண்டு பல நாட்கள் நான் உட்கார்ந்திருந்தது உண்டு. அப்பொழுதெல்லாம் எட்ட முடியாத, தீண்டக் கூடாத ஒரு பொருளை அணைத்துப் பார்த்துக் கொண்டிருப்பது போல் ஒரு பயமும் தொலைவும்தான் என்னை விலக்கி நிறுத்திக் கொண்டே யிருக்கும். இந்த உணர்ச்சி பொய்யென்று, வீண் பிரமை என்று ஸ்தாபித்துக் கொள்வதற்காக நான் மீண்டும் மீண்டும் அந்தக் கையைப் பற்றிப் பார்த்தேன். ஆனால் என் சிறுமையும் மண்ணில் உழலும் வேட்கையும் எனக்கு மேலும் மேலும் தெளிவாகப் புலப்பட்டனவே தவிர, என்னால் எழ முடியவில்லை. எளிய மனம் படைத்தவர்கள், கபடம் இல்லாமல் நெஞ்சைத் தருகிறவர்கள் மகான்கள். அவர்களைக் கண்டால் மனக அந்தராத்மா எல்லாம் நடுங்கி அழுகின்றன. மயக்கம் போட்டாற் போல் கீழே துவண்டு விழுகின்றன. அப்படித்தான் நான் விழுந்து விட்டேன். சுப்புசாமி கூட என்னிடம் வந்து குமுறினார். ஆனால் தன் வீட்டுக் குழந்தை என்று தான் இந்த உதறிவார்ன் நிலைப் பார்கள். இந்த நெருக்கம்தான் பல தெய்வத் தன்மைகளைப் பார்க்க முடியாமல் கண்களை மறைத்து விடுகிறது. அவருக்கு நான் இவ்வளவு சொல்லி, புரிந்து கொள்ள முடியாது.

சந்திராவைப் பற்றி அலைத்துக் கொண்டுகூட நான் இப்படித் தவிக்கும் பொழுது நல்ல வேளையாக டாக்டரைப் பார்க்க நேர்ந்தது. ஏதோ தெய்வாதீனமாக வந்தது போல் இருந்தது. பிடித்துக் கொண்டேன். கூப்பிட்ட இடத்துக்கு. இழுத்த இழுப்புக்கு வந்து கொண்டிருந்தான் அவன். நம் போக்குக்கு இவன் பொருத்தமானவன் என்று எண்ணினேன். அருண்குமாரோடு அவன் பட்ட துன்பம் தெரிந்ததும். வருத்தம்தான் மிஞ்சிப் பெருகிற்று. சந்திராவை இவ்வளவு நம்பிக்கைக்கு ஆளாக்கி ஏமாற்றியதற்கெல்லாம் ஈடு செய்து விடலாம் என்றுதான் டாக்டர் விழுந்ததைக் கூடப் பொருட்படுத்தாமல் இன்னும் அதிகமாக அவனிடம் ஒன்றினேன். விழுந்ததுதான் அந்த ஒன்றுக்குப் பெரிய காரணமாகக் கூட ஆகி விட்டது. அதனாலேயே சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொண்டேன். துணிச்சலாகப் பெண்களுடன் பழகும் வலி டாக்டரோடிருக்கையில் ஒதுங்கி, கண்ணியமாக நடந்து கொண்டேன். நான் நல்லவன், நம்பத் தகுந்தவன் என்று நடந்து கொள்ளப் படாத பாடு பட்டேன். நானாகவே, அவன் தெரிந்து கொள்ளு முன்பே, சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால்கூடப் பயன் இருந்திராது என்று இப்பொழுதுதான் தெரிந்தது. இன்று காலையில் அவன் பேசின பேச்சின் தெளிவு, உறுதி, முடிவு எல்லாம் என்னை, என் நம்பிக்கைகளைப் பொத்தென்று கீழே உருட்டி விட்டன. உயிரற்றவன் கையிலிருந்து விழுகிற பொருளைப் போல் நான் விழுந்து கிடக்கிறேன். இப்போது என் மனம் அப்படி உயிரற்றுக் கிடக்கிறது. ஆனால் அவன் என்னை உதறி எறிந்ததைக் கேட்டதும் எனக்கு வந்தது உடம்பு, மார்பு கொள்ளாத ஆத்திரம், புகைச்சல், அகம்பாவம். அதே வேகத்தில் ஓடி வந்துதான் உங்கள் மீதே புழுதியை வாரி அடித்தேன். ஆனால் அது உயிரோடு துடித்தல்ல. பல்லி உதறி எறிந்த வாலின் துடிப்பு. இடம் இடமாக தெறித்து ஓடி, கடைசியில் ஓய்ந்து அமர்ந்து விட்டேன். பகல், மாலை முழுவதும் ஸ்கூட்டரில் எங்கெங்கோ சுற்றினேன். சினிமாவில் போய் உட்கார்ந்து உடனே வெளியே வந்தேன். திருவொற்றியூர் கோவிலுக்குப் போனேன். நின்று நின்று பார்த்தேன். ஓய்வு

கிடைக்க வில்லை. எது வந்தால் என்ன என்று துறவியைப் போல் நின்று விடும் வைராக்கியமும் இல்லை. தோல்வி அடைந்த துயரம்தான் மிஞ்சியிருக்கிறது. எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் தூங்க வேண்டும் போலிருந்தது. தூக்க மருந்து வாங்கி வந்தேன். ஒன்றிரண்டு மாத்திரைகளைச் சாப்பிட்டால் சில மணி நேரம் தூங்கலாம். இருபது முப்பது சாப்பிட்டால் முடிவில்லாமல், எழவே எழாமல் தூங்கலாம். ஓய்வு நிறைய வேண்டும் போல் இருப்பதால் இரண்டாவது தூக்கமே நல்லது என்று தோன்றுகிறது.

மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடும் உரம் உங்களுக்கு இருக்கிறது. அதைச் செய்து விடுங்கள்.

ரங்கன்

வாசித்தவுடன் அனந்தசாமியை முதலில் தாக்கியது அதிர்ச்சிதான். ஏதோ இலேசான, விவரம் தெரியாத அதிர்ச்சி. கடைசிப் பகுதி தெளிவாகப் புரியவில்லை. அடியிலிருந்து மீண்டும் படித்தார்.

அவசரம் அவசரமாகக் கீழே இறங்கினார். குளித்து விட்டு, கையில் ஒரு கண்ணாடியை வைத்துப் பார்த்து நெற்றிக்கு இட்டுக் கொண்டிருந்த ருக்மிணியிடம் கடிதத்தை நீட்டினார்.

''என்னது?''

''இதை வாசித்துப் பாருங்கள்.''

''யார் எழுதியிருக்கிறார்கள்?''

''பாருங்கள்.''

ஒரு தடவை வாசித்து விட்டு நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் ருக்மிணி. மீண்டும் ஒரு முறை படித்தாள்.

''ரங்கனைப் பார்க்க வேண்டும் என்றுதான் புறப்பட்டேன். புறப்படுகிற சமயத்துக்கு இது வந்தது.''

''நேரே போய்ப் பார்த்தால்தான் தேவலை. இங்கு போன்கூட இல்லை. சுப்புசாமியைக் கார் அனுப்பச் சொல்லலாம் என்றால். இனிமேல் அங்கு நடந்து போவதைவிட பாண்டிபஜாருக்குப் போய் ஒரு காரை வைத்துக் கொண்டு போய் விடலாம்.''

''சரி, அப்படியே செய்கிறேன்....''

அவர் கேட்டை நோக்கி நடப்பதற்குள் வாசலில் கார் வந்து நின்றது. காசிலிங்கத்தின் வண்டியாயிருந்தது.

ஆமாம். காசிலிங்கம்தான் இறங்கினான். அவர் வெளியே கிளம்புவதைப் பார்த்தான்.

''சாமி வெளியே புறப்பட்டாச்சா?''

''ஆமாம்.''

''முக்கியமான காரியம் ஒண்ணு சொல்லணும்னு வந்தேன்.''

''அப்புறம் பேசிக் கொள்ளலாமே. நான் அவசரமாகப் போகிறேன்.''

''உங்களுக்கு ரொம்ப முக்கியமான சமாசாரம். நம்ம ரங்கன்.......''

''ரங்கனுக்கு என்ன? நான் அங்கேதான் போகிறேன்.''

''அங்கியா? உள்ளார வாங்க.''

''என்ன?''

''இனிமேல் போய்ப் பிரயோஜனமில்லே. நான் அங்கே போய்ட்டுத்தான் வர்றேன்.''

''அங்கேயா? என்ன ஆச்சு?''

காசிலிங்கம் உதட்டைப் பிதுக்கினான். கையை விரித்தான்.

''என்ன சொல்லுங்களேன்?''

''நேத்து ராத்திரி கோபமாகப் போனேன். உங்களைப் பார்த்தப்புறம். அவர் இல்லேன்னுட்டாங்க தாயாரு.... மறுபடியும் போனேன், வீட்டு முன்னாலே. யார் யாரோ நின்னுக்கிட்டிருந்தாங்க. ராத்திரி பத்து மணிக்கு வந்து படுத்தவரு எழுந்திருக்கலே இல்லையாம். காலமே எழுப்பறப்ப மூச்சு இல்லையாம். பக்கத்திலே ஒரு லெட்டர் இருந்திச்சாம். 'வாழ்க்கையிலே வெறுத்துப் போய்த்தான் இப்படிச் செய்திருக்கேன். இதுக்கு வேறு யாரும் காரணம் இல்லே'ன்னு ஒரு பாட்டிலுக்கு அடியிலே எழுதியிருந்ததாம். பாட்டில் முழுக்கத் தூக்க மாத்திரை. பாதி காலியாக இருந்ததாம்'' என்று காசிலிங்கம் சொல்லி விட்டு நின்றான். சொன்ன பிறகு அங்கே நிற்க முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளே வந்து தாழ்வாரத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். கண்ணைத் துடைத்துக் கொண்டான். அனந்தசாமி உள்ளே போனார்.

சற்றுக் கழித்து ருக்மிணியும் அலமாம்பாளும் அனந்தசாமியுடன் வந்தார்கள்.

''நீங்கள் போய் விட்டு வந்தீர்களா....?''

''ஆமாம். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் போகிறாங்களாம் உடம்பை'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் காசி.

மூன்று நான்கு நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன.

''இப்பொழுது போனால் பார்க்கலாம், இல்லையா?'' என்றாள் ருக்மிணி.

''பார்க்கலாம்.''

''நீங்கள் பார்த்து விட்டு வாருங்களேன்....''

''சரி'' என்றார் அனந்தசாமி.

காசி அவர் ஏறிய பிறகு முன்னால் ஏறிக் கொண்டான். வண்டி புறப்பட்டது. ருக்மிணி பிரமை பிடித்தாற் போல் பார்த்துக் கொண்டே நின்றாள். கால் நிற்க முடியாமல் நடுங்கவே, உள்ளே போய் உட்கார்ந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்)



பேசும் பொம்மைகள்

ஆழ்கடலின் அடியில் போய்ப் பார்த்திருக்கிறீர்களா? கடந்த வாரம் தான் போய் விட்டு வந்தேன். வண்ண வண்ண மீன்களெல்லாம் வரிசை வரிசையாகக் குறுக்கும் நெடுக்குமாகப் போகும் அந்த அழகு ரொம்ப அற்புதம். பசுமையும் நீலமுமாக அந்த இடம் எவ்வளவு இயற்கையாக மனோகரமாக இருந்தது தெரியுமா?

என்னுடன் நிக் என்ற ஒரு சின்னப் பையனும் வந்திருந்தான். மூச்சுமுட்டி முழுகாமல் இருக்க மிராண்டா என்ற கடல் கன்னி அவனைக் காப்பாற்றுகிறாள். ஆழ்கடலின் அடியில் மூழ்கிக் கிடக்கும் புதையல் நிறைந்த பெட்டியைக் கடலரசன் நிக்குக்கு அளித்தபோது நிக் அந்தப் பொருளைவிட மிராண்டாவைக் கடலின் அடியிலிருந்து விடுதலை செய்து அழைத்துப் போவதையே பெரிதாகக் கருதிப் பொற்குவியலைக் கொட்டிவிட்டு, அந்தப் பெட்டிக்குள் மிராண்டாவை ஏறிக் கொள்ளும்படி சொல்லுகிறான். இடுப்புக்குக் கீழே மீனுருவும், இடுப்புக்கு மேலே பெண்ணுருவுமுள்ள மிராண்டா, நிக்கின் இந்தத் தன்னலங் கருதாச் செயலால் சாப விமோசனம் அடைந்து முழுப் பெண்ணாகிறாள். மிராண்டாவோடு மேலே வந்த நிக்குக்கு கொள்ளைக் கப்பல் தலைவனால் ஆபத்து நேருகிறது.... இப்படிக் கதை சுவாரசியமாகப் போகிறது.

ஏதோ திரைப் படத்தைப் பற்றி விமரிசனம் செய்வதாக நினைத்து விடாதீர்கள். இத்தனையும் தத்ரூபமாக நேரிலேயே நடந்த காட்சிகள்தான். கடற்கரை, அதையடுத்த புல் மேடு, நிக் என்ற பையன், கொள்ளைக் கப்பல், அதில் வரும் குரூரமான மாலுமிகள், ஆழ் கடலின் அடியிலே ஜீவராசிகள் நெளிந்து நெளிந்து நீந்திச் செல்லும் அழகு, கொள்ளைக் கப்பலின் மாலுமிகளுக்கும் நிக் என்ற பையனுக்கும் நடக்கும் பயங்கரமான கத்திச் சண்டை— இத்தனையையும் இயற்கை வர்ணக் கார்ட்டூன் படத்தைப் போலச் சின்னஞ் சிறிய அரங்கிலே ஆட்டிக் காட்டினார்கள் அமெரிக்காவிலிருந்து கலாசார பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் வந்திருக்கும் பொம்மலாட்டக் கலைஞர்கள். சென்ற வாரத்தில் நான்கு நாட்கள் சென்னை மியூஸிக் அகாடமியின் அரங்கிலே பொதுமக்களைத் தங்களுடைய பொம்மலாட்டத்திறல் திகைப்பிலாழ்த்திய 'பில் அண் கோரா பயர்டி'னுடைய 'மெரியோனெட் தியேட்டரி'ன் அபாரமான திறமையைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

பொம்மலாட்டத்தைப் பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்துக்கு முற்றிலும் மாறுபட்ட, புரட்சிகரமான முறையில் இதை அமைத்திருக்கிறார்கள், அமெரிக்க நாட்டிலே பிரபலமான பில் பயர்டு அவர்கள். 'பொம்மலாட்டம் பாரதத்தின் புராதனக் கலை என்று பெருமைப்படுவதோடு நாம் திருப்தி அடைந்து விடுகிறோம். பொம்மலாட்டம் என்பது இந்தியாவிலிருந்துதான் உலகெங்கிலும் பரவியது என்ற முன்னுரையுடன் ஆரம்பித்து அதில் பல அற்புதங்களை இந்த அமெரிக்கக் கோஷ்டி நிகழ்த்திக் காட்டும் போது, இத்தகைய ஒரு கலை அது பிறந்த நாட்டில் போற்றுவாரின்றி நசித்து விட்டதே என்ற வேதனை நெஞ்சைக் கவ்வத்தான் செய்கிறது.

இருபது வருடங்களுக்கு முன்புகூட ஒரு காட்சி. தெருவில் ஒரு பிச்சைக்காரி மஞ்சள் பூசிய முகத்தோடு கூடிய ஒரு பொம்மையைக் கையிலேந்தி வீடு வீடாக நின்று 'பச்சைக் கிளியடி, சின்னி, நீ பாவங்கொள்ளாதேடி சின்னி' என்று மாமியாரிடம் அந்தப் பெண் படும் துன்பங்களையெல்லாம் பாடலாகப் பாடுவாள். அதற்கு ஏற்றபடி முகமும் இரண்டு கைகளுமே உடைய அந்தப்

பொம்மை தலையை ஆட்டியும் கைகளைக் கொட்டியும் விதம் விதமான பாவங்களை நடித்துக் காட்டிச் சூழ்ந்துள்ள குழந்தைகளைக் குதூகலத்தில் ஆழ்த்தியிருக்கிறது. துணிக்குள் விரல்களின் அசைவால் சின்னி(பொம்மை)யை ஆட்டி வைத்த அந்தப் பிச்சைக்காரிகளைக் காண்பது கூட இப்போது அரிதாகி விட்டது. உலகத்துக்கே ஓர் உன்னதக் கலையை உருவாக்கிக் கொடுத்த கலைஞர்களைப் பிச்சைக்காரர்களாக்கிய கொடுமையை நினைப்பதா, அல்லது நமக்கே உரித்தான ஒரு கலை நம் நாட்டை விட்டே மறைந்து வரும் துர்ப்பாக்கியத்தை நினைப்பதா?


இதையெல்லாம் நினைக்காமல் பில் அன் கோரா பயர்டின் பொம்மலாட்டத்தைப் போய்ப் பார்த்து விடலாம். பொம்மைகள் கயிற்றால் இயங்குகின்றன என்ற உணர்வே நமக்கு ஏற்படாதபடி அத்தனை அழகாக லாகவமாகச் செய்கிறார்கள். காட்சி ஜோடனைகளும், ஒளி, ஒலி அமைப்புக்களும் பிரமாதம், பிரமாதம்!

பல பாத்திரங்களை இயக்கிக் காட்டும் பொம்மலாட்டத்தோடு பொம்மலாட்டத்தின் தத்துவத்தை விளக்கும் வகையில் இரண்டு கை விரல்களையும் கொண்டேயும் கண் முன்னாலேயே ஒரு ஜோடிக் காதலர்களை உருவாக்கி, அவர்களுக்குக் குல்லாய் அணிவித்துக் கண்ணாடி காட்டிப் பார்க்கச் செய்து, போட்டோப் பிடித்து, மேஜை முன்னே உட்கார்ந்து உணவருந்தி உறவாட விட்டு, நிலவொளியிலே படகு செலுத்திக் கொண்டு செல்லும் வரை அழகாக அற்புதமாகக் கலையம்சம் கொஞ்சக் கொஞ்ச நான்கே நிமிடங்களில் நம்மைப் பிரமிப்பிலாழ்த்திவிட்ட திறமையை எத்தனை பாராட்டினாலும் தகும். இப்படியே இந்தப் பொம்மலாட்டக்காரர்களின் காட்சிகள் ஒவ்வொன்றும் ஒன்றை விட ஒன்று உயர்வாக இருக்கின்றன.

மிகப் பழைமையான கலையான பொம்மலாட்டத்தில் இன்றைய நவீன வசதிகளையெல்லாம் பயன்படுத்தி, 'இன்னும் கொஞ்ச நேரம் பார்க்க மாட்டோமா?' என்ற ஆர்வத்தை வளர்க்கும் வகையில் அதை உருவாக்கி அளிக்கும் அமெரிக்கப் பொம்மலாட்டக்காரர்களுக்கு இந்தியக் கலை வட்டாரம் தனது உள்ளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இத்தகையதொரு நல் வாய்ப்பைச் சென்னை வாசிகளுக்கு அளிக்க முன்வந்த அமெரிக்க மாதர் சங்கத்துக்கும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் பொம்மலாட்டத்தைப் பார்த்த பிறகாவது நம்மிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டு, நம் 'நாட்டில் நசித்துப் போன இந்தக் கலைக்குப் புத்துயிர் அளிக்கக் கலைஞர்களும் அரசாங்கமும் முன்வர வேண்டும் என்று விரும்புகிறோம்.

- கௌசிகன்



பேய்ச்சுரை

"தங்கம், பாலாவையும் அழைத்துக் கொண்டு போய்க் 'கால்வெண்டி'யிலேயே சேர்த்து விடு" என்றார் சுந்தரம்.

"ஏன் அப்பா?" என்று வியப்புடன் பார்த்தாள் தங்கம். பாலா அப்பாவுக்கு அருமைப் பேத்தி. அவளைப் பிரிந்து ஒரு நாள் இருப்பது கூடத் தமக்குக் கஷ்டமாக இருப்பதாகச் சொல்வார். பெண்ணையும் மாப்பிள்ளையையும் வற்புறுத்திப் பாலாவைத் தம்முடன் வைத்துக் கொண்டிருந்தார்.

"நாளுக்கு நாள் தள்ளாமைதானே உங்க அம்மாவுக்கும்? குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து, சாதம் போட்டு எல்லாம் ஒரு நாளைப் போலவே செய்ய அவளுக்கும் வயசாகலியா? எனக்கும்......"

"இப்ப எனக்கு என்ன வந்து விட்டது? இத்தனை நாட்களும் இல்லாமல் அதைக் குழந்தைக்குச் செய்வது என்ன சிரமம்? உங்கப்பா பேச்சைக் கேட்காதே, தங்கம். பாலா இங்கேயே இருக்கட்டும்" என்றாள் மீனு.

ஆனால் சுந்தரம் ஒப்பவில்லை. தந்தை இப்படிச் சொன்னாரே என்பதற்காகத் தங்கத்துக்குக் கோபம் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் அப்பா திடீரென்று மாறிப் போய் விட்டதாக அவளுக்கு ஒரு பிரமை. அவர் பாலாவை மட்டும் அவளுடன் அனுப்புவதில் குறியாக இருந்தார் என்பதில்லை. 'நாளைக்குப் புறப்பட்டு விடு. அப்புறம் பரணி கிருத்திகை, அஷ்டமி, நவமி, என்று நாளே நன்றாகஇல்லை. வெள்ளிக்கிழமையும் புறப்பட முடியாது' என்று அவளையும் ஊருக்கு அனுப்ப அவசரப்படுவது போல் தோன்றியது.

"ஊறுகாய் ஜாடியை எடுத்துக் கொண்டாயா, மறக்காமல்? வெள்ளி செவ்வாய் எண்ணெய் தேய்ச்சுக்காமல் இருக்காதே. தவறாமல் தினம் ஆதித்ய ஹிருதயம் சொல்லு" என்று ரயில் புறப்பட்ட பின்னும் கம்பியைப் பிடித்துக் கொண்டே ஓடி வருகிற அப்பா, அன்று ரயில் புறப்படுகிற வரையில்கூட இருக்கவில்லை.

"அப்ப....ஜாக்கிரதையாய்ப் போகிறாயா? போய்க் கடுதாசு போடு. நிற்க முடியவில்லை எனக்கு. வீட்டுக்குப் போகிறேன், உங்கம்மா தனியாக இருப்பாள்" என்று 'விடுவிடு' என்று திரும்பிப் பாராமலே நடந்துவிட்டார்.

தங்கத்துக்கு வருத்தம் ஒன்றுமில்லை. 'அம்மா தனியாக இருப்பாள்' என்று கவலைப்படக் கூட அப்பாவுக்குத் தெரிகிறதே என்றுதான் ஆச்சரியப்பட்டாள். போன மாதம் அப்பாவின் அறுபதாம் கல்யாணத்துக்கு வந்த பிள்ளைகள், மாட்டுப் பெண்கள், உறவினர்கள் எல்லோரும் ஒரு வாரம் இருக்க முடியாமல் திரும்பி விட்டனர். அம்மாதான் தங்கத்தை, "நீயாவது இருந்து விட்டுப் போடி" என்று ஒரு மாதம் தங்க வைத்துக் கொண்டாள். நாலு பிள்ளைகளுக்குப் பிறந்த தங்கம் மீனுவுக்கு மட்டும்தான் அருமைப் பெண் என்பதற்கில்லை; சுந்தரமும் மகள் மீது உயிரையேதான் வைத்திருந்தார். பெண் பத்து மாதங்கள் பிறந்தகத்தில் இருந்தாலும் சந்தோஷப்படக் கூடியவர்தான். இப்படித் திடீரென்று எப்படி மாறி விட்டார்? யோசிக்க யோசிக்கப் புரியாத புதிராக இருந்தது தங்கத்துக்கு.

ரயிலடியிலிருந்து வேகமாகப் புறப்பட்ட சுந்தரத்தின் நினைவே வேறு. இது போன்ற ஒரு சந்தர்ப்பத்துக்காக அவர் எத்தனை நாட்களாகத் தவம் இருந்தார்! பாவம், மீனு! அவளை நினைக்க நினைக்க அவருக்கு ஆற்றாமை பொங்கி வந்தது.

செயலுள்ள குடும்பத்தில் ஐந்தாறு சகோதரர்களிடையே ஒரே பெண்ணாகப் பிறந்து வளர்ந்த தோஷம், புக்ககத்திலும் வந்து செல்லம் கொஞ்சப் போகிறாளே என்று பயம் அவர் அம்மாவுக்கு. அந்தக் காலத்திலே, மீனு நிறையப் படித்தவள் என்று பேர்; மெட்ரிகுலேஷன் தேறியிருந்தாள். சாந்திக் கல்யாணத்தன்றே மாமியார் சொல்லிவிட்டாள்: 'அடியம்மா, நீ பாட்டும் புத்தகமும் கையுமாக நின்று விடாதே. இந்த வீட்டில் பம்பரமாகச் சுழலணும்' என்று கல்லுரலில் இரண்டு மரக்கால் அரிசியை அரித்துக் கொட்டி அரைக்கச் சொல்லி விட்டாள். சொன்ன நேரம், இன்றுவரை அந்தக் கல்லுரலுக்கும் ஒழிவில்லை; மீனுவுக்கும் ஓய்வில்லை.


கூடத்து விசுப்பலகையைவிட்டு எழுந்திருக்க மாட்டாள் அம்மா. கேட்காமல் எதையும் செய்துவிட மீனுவுக்கு அதிகாரம் வந்துவிடவில்லை. சமையலறைக்கும் கூடத்துக்குமாக மீனு தத்தளிப்பாள். அடுப்பில் கறி காந்தும். தம் தேவைகளைக் கவனிக்க வில்லை என்று சுந்தரம் குதிப்பார். ஆமாம், அந்தக் காலத்தில் அவரும் மீனுவுக்கு இதமாக இருந்துவிடவில்லை. அவளை எத்தனை ஆட்டம் காட்டியிருப்பார்! இப்பொழுது பச்சாத்தாபத்தால் உருகி வழிந்தார் சுந்தரம். அதைத் தொடர்ந்து பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது.

"சாமி, பூ நாட்டுங்களா? கதிர்ப் பச்சைக் கதம்பம். முழு ரோஜா வைத்துக் கட்டியது. முழம் இரண்டணாத்தான்." அவர் சம்மதத்தை எதிர்பாராமலே இரண்டு முழம் அளந்து கத்திரித்து விட்டான் பூக்காரன். சுந்தரம் மறுக்க வில்லை. காசைத் தந்து பூப்

ஆர். எஸ். ஞானம்பாள்

பொட்டலத்தை வாங்கிக் கொண்டார். கதிர்ப்பச்சையின் மணம் அவர் நினைவை எங்கோ இழுத்துச் சென்றது.

ஒரு சமயம் மீனுவை அழைத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். அதிகாரி வீட்டில் ஏதோ விசேஷம். போகும் வழியில் அவளுக்குக் கதம்பச் சரம் வாங்கிக் கொடுத்தார். வாய் நிறைய வெற்றிலையும், தலை நிறையப் பூவுமாகத் தங்கச் சிலை போல் நின்ற மீனுவின் தோற்றத்தை இன்று நினைத்தால்கூட மனம் நெகிழ்கிறது. பாவம் மீனு! 'இன்னும் நாலு முழம் வாங்குங்கள். வீட்டுக்கு எடுத்துப் போகலாம்' என்றாள். வீட்டுக்குத் திரும்பும்போது தான் மட்டில் தனக்குப் பூ வைத்துக் கொண்டு, நாலு நாத்தனார்களுக்கும் வாங்கிச் செல்லாமல் இருந்தால் நன்றாயிருக்குமா? 'உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ' என்று வெடுக்கென்று விழுந்தார் சுந்தரம். எப்பொழுதுமே அவர் சுபாவம் அப்படித்தான். அந்தக்கணமே அதை மறந்தும் விட்டார்.



மீனு வாசற்படி மிதித்தது தான் தாமதம். வீட்டில் பிறந்த பெண் குழந்தைகள் நாலு பேர்கள் இருக்கும்போது அவள் மட்டும் பூச்சூடி மினுக்கிக் கொண்டு வெறும் கையோடு வீட்டுக்கு வந்த அக்கிரமத்தை அலசி எடுத்து விட்டாள் மாமியார். அம்மாவுக் கெதிரே வாய் திறக்கவே தெரியாது சுந்தரத்துக்கு!

சுந்தரத்தின் தம்பிகள் புத்திசாலிகள். இருக்கும்வரை மதனியை அதிகாரம் செய்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தனர். கல்யாணம் ஆனதும் அவரவர் வெளியூர் வேலையாகப் பார்த்துத் தேடிக் கொண்டு, தங்கள் தங்கள் மனைவிமார்களையும் அழைத்துச் சென்று விட்டனர். வந்தால், போனால் பத்து நாட்கள் தங்குவார்கள். மதனிக்கு

மூச்சுவிடப் பொழுது இருக்காது. மாதத்தில் இருபத்தெட்டு நாட்கள் ஊர் சுற்றும் வேலை சுந்தரத்துக்கு. புருஷனில்லாப் பக்கத்தில், மூத்த மாட்டுப் பெண் மீனுவுக்குத்தான் முழுப் பொறுப்பும். பல நாட்கள் தலை பின்னிக் கொள்ளக் கூட நேரம் இருக்காது: நினைவிருக்காது அவளுக்கு.

பெண்கள் ஒவ்வொருவராய்ப் புக்ககம் சென்று, பெரியவர்கள் காலமாகி, சகோதரர்கள் பாகம் பிரித்துக் கொண்டு சென்று, பெட்டிச் சாவி மீனு கைக்கு வந்த போது, அவளே நாலு குழந்தைகளுக்குத் தாயார். உல்லாசத்துக்கெல்லாம் நினைவில்கூட இடமில்லாத சம்சாரி: பொருளாதார நிலைமையோ கேட்க வேண்டியதில்லை. தங்கைகளுக்கும், தம்பிகளுக்கும் செய்து செய்தே ஓட்டாண்டி ஆகிப் போன சுந்தரம் தம் பிள்ளைகளை ஆளாக்கி, பெண்ணை நல்ல இடத்தில் கொடுப்பதற்குள் திணறிப் போனார்.

ஏதோ மீனுவின் அதிர்ஷ்டம்தான். எப்பொழுது? அவர் கம்பெனியிலிருந்து ஓய்வு பெற்று வேலையின்றி உட்கார்ந்திருக்க மனமில்லாமல் ஒரு தொழிலை ஆரம்பித்தபொழுது! அந்தத் தொழில் சூடுபிடித்தது. காலமில்லாக் காலத்தில் என்று கதைதாக. அவர் கை வைத்த வேலை வியாபாரத்தில் பொன்னுகப் பொழிந்தது. வீடு கட்டினார். நிலம் வாங்கினார். மீனுவுக்குத் தங்கக் கவசம் அடித்துப் போடாதது தான் குறை. மூத்தவன் பி. ஏ. படித்தான். பம்பாயில் பெரிய தொழிற்சாலையில் நல்ல சம்பளத்தில் இருக்கிறான். இரண்டாவது பிள்ளை டில்லியில் அதிகாரி. மூன்றாமவன் சென்னையில் சொந்த வியாபாரம் செய்து கொழித்துக் கொண்டிருக்கிறான். தங்கத்தைக் கொடுத்த இடமும் சோடையில்லை. எல்லோருக்குமே நல்ல இடத்துச் சம்பந்தம். குழந்தை குட்டிகளுக்கும் குறைவில்லை. பிள்ளைகளும், மாட்டுப்பெண்களும், மாப்பிள்ளையும், சம்பந்தி என வருகிறவர்களும் போகிறவர்களுமாக வீடு 'ஜே, ஜே' என்று நித்ய கல்யாணமாக இருந்தது. 'எல்லாம் மீனுவின் பாக்கியம்' என்று ஊரில் கொண்டாடுவார்கள். 'இருந்தாலும் சுந்தரத்தைப் போல் இருக்கணும். ஒருவருக்கு ஒரு குறை வைக்கவில்லை அவர்' என்று புகழப்படும் பொழுது சுந்தரத்துக்கு நெஞ்சை உறுத்தும். மீனு வாய் திறந்து எதுவும் கேட்டதில்லைதான். ஆனாலும் அவள் ஆசையை அறியாதவரல்லவே அவர்! இளம் பருவத்தில் அவளது விருப்பத்தை என்றைக்காவது அவர் நிறைவேற்ற முயன்றிருக்கிறாரா? எல்லாம் தெரிந்தவர்போல அவளை அடக்கி ஆண்டு, அவள் ஆசைகளையெல்லாம் அடக்கி, போகக்கி[illegible] மட்டமாகத்தானே ஆக்கியிருக்கிறார்! அதையெல்லாம் நினைத்துப் பார்த்தவருக்குப் பச்சாத்தாபம் இப்பொழுது தோன்றியது. ஒரு தீர்மானத்துக்கு வந்தார். இப்பொழுதாவது அவளது அந்த ஆசையை நிறைவேற்றினால் என்ன?

அவர் தீர்மானம் தீவிரமாயிற்று. எப்பொழுது? அறுபதாம் கல்யாணம் முடிந்த பிறகு! தீர்மானத்தைச் செயலாக்க அவர் ரொம்பவும் அவசரப்பட்டார். கல்யாணக் களேபரம் தீர்ந்து, வந்தவர்கள் அனைவரும் ஊருக்குப் போன பின்னும் தங்கம் மட்டும் முகாமை நீடித்தது அவருக்கு எரிச்சலையே ஊட்டியது. அவர் தீர்மானத்தைக் கேட்டால் மீனு எத்தனை சந்தோஷப்படுவாள்!

''மீனா! மீனா! என்ன செய்யறே? எங்கே இருக்கே?'' அறை அறையாக நுழைந்து பார்த்தவர் கொல்லைப் பக்கம் வேப்ப மர நிழலில் ஏதோ படித்துக் கொண்டிருந்த மீனுவிடம் ஓடினார். ''மீனு! மீனு!'' மகிழ்ச்சி மிகுதியில் மூச்சு இரைத்தது அவருக்கு.

'பால்யம் திரும்புகிற நினைவா? யார் காதிலாவது விழுந்து வைக்கப் போகிறதே!' என்றுமில்லாத் திருநாளாகக் கணவர் தன்னைப் பெயர் சொல்லி அழைக்கும் அதிசயம் மீனுவுக்கு ரொம்பக் கூச்சமாகவே இருந்தது.

''மீனு, என்னை மன்னிக்க மாட்டாயா? அந்தக் காலத்தில் நாம் இருவரும் தனிக் குடித்தனம் பண்ண எத்தனை ஆசைப்பட்டாய்! நீ அழகாகத் திட்டமிட்டு வர்ணித்ததை முழுதும் கேட்கப் பொறுமை இருக்கவில்லை அன்று எனக்கு. இப்பொழுது தோன்றுகிறது. உன் அழகிய கற்பனையை, ஆசையைக் கேட்டு மகிழும் ரசனைகூடத்தான் இருக்கவில்லை. 'எங்கள் குடும்பத்தைப் பிரிக்க வந்தாயா, சுயநலக்காரி. சாகும் வரை ஒரே குடும்பமாகத்தான் இருக்க வேண்டும். உனக்கு இஷ்டமில்லையென்றால் ஓடு உன் பிறந்த வீட்டுக்கு' என்று முகத்தைத் தெறித்தாற்போல் பேசி உன் வாயை அடைத்தேன். மீனு, என் மேலே உனக்கு எத்தனை வருத்தமிருக்கும் என்று எனக்குத் தெரியும். உன் ஆசை நிறைவேற இப்பத்தான் வேளை வந்திருக்கு. அதுதான் பாலாவைக் கூட தங்கத்தோடு விரட்டி விட்டேன்.'' மீனுவின் கையைப் பற்றிப் பூப்போட்டதைத் திணித்தார் சுந்தரம்.

''தனிக் குடித்தனமா? போங்க.... காலம் போன காலத்தில் காய்க்குமாம் பேச்சு கனா என்று இந்த வயதில் உங்கள் ஆசை அழகாகத்தான் இருக்கு. இதோ, பாருங்கோ, உங்க பிள்ளை எழுதியிருக்கிறதை.....''

''அப்பாவுக்கு அநேக நமஸ்காரம்.

எங்கள் தொழிற்சாலையின் கிளையொன்றைத் தென்னாட்டில் நிறுவும் திட்டம் இருப்பதை முன்பே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். சந்தடி மிகுந்த நகரமாக இல்லாமல், சின்ன ஊராகப் பார்த்துத் தொழிற்சாலையை அமைக்க மேலிடத்தில் தீர்மானித்துள்ளார்கள். தொழிற்சாலைக்கு வேண்டிய தண்ணீர் வசதி எல்லாம் ஆற்றங் கரையில் அமைந்துள்ள நம் ஊரில் இருப்பதை எடுத்துக் கூறியதை ஏற்றுக் கொண்டு, பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பையும் என்னிடமே ஒப்படைத்துள்ளார்கள். அதன்படி, நான் குடும்பத்துடன், சாமான்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு நாளை பம்பாய் மெயிலில் புறப்படுகிறேன். வயதுக் காலத்தில் அம்மாவுக்கும், உங்களுக்கும் அருகில் இருக்கக் கிடைத்ததை நானும் உங்கள் மாட்டுப்பெண்ணும், பேரக் குழந்தைகளும் பெரிய அதிர்ஷ்டமாகவே நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். அம்மாவுக்கு எங்கள் நமஸ்காரத்தைச் சொல்லுங்கள்.


உங்கள் சந்துரு.

கோலினாஸ்

பற்சிதைவை ஒழித்து வாய் நாற்றத்தை அகற்றுகிறது.

நிச்சயமான ஆதாரம்!

பற்சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரணமான அநேகமான கிருமிகளைக் "கோலினாஸ்" பற்பசை அறவே அழித்து விடுகிறதென ஆராய்ச்சிக்கூடத்துச் சோதனைகள் நிரூபிக்கின்றன.




காலையிலும் இரவிலும் அரை அங்குல அளவு கோலினாஸ் கொண்டு உங்கள் பற்களை இரண்டு நிமிடங்களுக்குத் தேயுங்கள். அதன் விசேஷமான உட்புகும் நுரை உங்கள் பல்லிடுக்குகளிலிருந்துகொண்டு பற் சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரணமான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.

தவறாமல் வழக்கமாக **கோலினாஸ்** உபயோகிப்பதால்

- பற்சிதைவு ஒழிக்கப்படுகிறது.
- வாய்நாற்றம் அறவே அகற்றப்படுகிறது.
- பற்கள் பளபளப்பாக வெண்மையாகின்றன.
- ஈறுகள் வலுப்படுகின்றன.

வேறெந்தப் பற்பசை ரசிகர்களுக்கு இதை விட அதிக திருப்தியை அளிக்காதென உங்கள் பல்டாக்டர் கூறுவார்!



கோலினாஸ் ஸூபர்வொய்ட்டும் கிடைக்கிறது.

Registered User: GEOFFREY MANNERS & COMPANY LIMITED


புது வெள்ளம்

அகிலன்

அத்தியாயம் 15

மனிதனின் விலை மதிப்பு

சித்திராவையும், முருகையனையும் மெய்ம் மறந்த நிலையில் ஒன்றாகக் கண்ட குமரவேலுக்கு அவருடைய



கண்களில் தேன் கொட்டியது போல் இருந்தது.

'புதுப் பெண்ணும் மாப்பிள்ளையும் போலல்லவோ ஒன்ருக நெருங்கி நின்று கண்ணுடியில் அழகு பார்த்துக் கொள்கிறார்கள்!' என்று பெருமூச்சு விட்டார் குமரவேல்.

என்றாலும் அவருடைய நெஞ்சுத் துணிவும் அநுபவத் திறமையும் அவரைக் கைவிட்டு விடவில்லை. முகத்தைக் கலகலப்பாக வைத்துக் கொண்டு சந்தடி செய்யாமல் வெளிப் புறத்து அறைக்குச் சென்று உட்கார்ந்தார். அவருடைய எதிர்காலத் திட்டங்கள் அவ்வளவும் அந்த ஒரு கணத்துக் காட்சியால் சரிந்து விடுமோ என்ற பயப்பிரமை அவரைப் பற்றிக் கொண்டது.

முருகையனைத் தம்மிடம் வேலைக்கு வைத்துக் கொள்வதன் மூலம் இரண்டு காரியங்களை ஒன்ருகச் சாதிப்பதற்கு அவர் தயாராயிருந்தார். ஒன்று, அவனைத் தம்முடைய வியாபாரத் துறை வளர்ச்சிக்குக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்வது; மற்ருென்று, அவனைச் சித்திராவின் குடும்பத்தாருடன் நெருங்கிப் பழகாமல் பார்த்துக் கொள்வது. அவர்களுடைய அன்புக்கும் மதிப்புக்கும் முருகையன் பாத்திரமாகி விட்டால், பிறகு அவர் சம்பந்தம் வைத்துக் கொள்வது என்பது அவ்வளவு எளிதாக இருக்காதல்லவா?



மறுபடியும் முருகையனின் அறைக்கு வந்தார். அப்போது சிற்றுண்டியை ஏற்பாடு செய்வதற்காகச் சித்திரா உள்ளே சென்றிருந்ததால் முருகையன் மட்டிலும் அங்கு தனித்திருந்தான்.

''முருகையா!'' என்று 'அன்புக் குழைவோடு' அழைத்து வந்து அவனை ஆவலுடன் தழுவிக் கொண்டார் குமரவேல். முருகையனுக்கு அவரைக் கண்டவுடனேயே மனத்தில் முள் தைத்தது போல் இருந்தது. 'இத்தனை அன்பும் ஆவலும் இவருக்கு எப்போது ஏற்பட்டன?' என்றெண்ணித் திகைத்தான்.

''உன்னைப் பார்த்து என்கிட்டே வேலைக்கு அனுப்பச் சொல்லி, சிவப் பிரகாசத்துக் கிட்டே சொல்லி விட்டேனே, ஏன் நீ ஒரு கடுதாசிகூடப் போடலே?'' என்று கேட்டார் குமரவேல். ''நான்தான் ஸ்டேஷனுக்கு வந்து உன் தந்தையைப் பட்டணத்துக்கு அனுப்பி வைச்சேன். அது வந்து உன் கிட்டே விஷயத்தைச் சொல்லலியா?''

பதிலளிக்காமல் அவரை ஏற இறங்கப் பார்த்தான் முருகையன்.

''கடைசியில் நீங்கள்தான் அந்தக் காரியத்தையும் செய்தீர்களா? கிராமத்தில் இருந்தவரை நீங்கள்தான் வழி அனுப்பிவைத்தீர்களா?'' முருகையனின் தொண்டையை அடைத்தது. ''சித்தப்பா! அவர் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்துட்டார்!''

செய்தியைக் கேட்டறிந்து மிகப் பெரியதொரு சோக நாடகம் நடத்தி விட்டார் குமரவேல். சிவப்பிரகாசத்துக்குத்தாம் எத்தனையோ கெடுதல்களும் துரோகமும் செய்து விட்டதாக ஒப்புக் கொண்டார். பண்ணிய பாவங்களுக்கெல்லாம் கடவுள் தம்மை மன்னிக்க வேண்டுமென்று சொல்லிக் கண்ணீர் வடித்தார் குமரவேல்.

''கடைசி கடைசியாக நான் செய்த தப்புக்களுக்குப் பரிகாரமாக, உங்களுக்கு உதவி செய்கிற நோக்கத்தோடுதான் சிவப்பிரகாசத்தை அனுப்பி வைச்சேன். அதுகூட இப்படி மாறிப் போய், மேலேயே அந்தப் பழி திரும்பிடுச்சு, பார்த்தியா?''

குலுங்கிக் குலுங்கி அழுதார் குமரவேல். முருகையனே அவர் அடியோடு மாறிப் போய் விட்டதாகவே நம்பினான். மிகவும் சிரமப்பட்டு அவன் அவரைத் தேற்றி ஆறுதல் சொல்லும்படியான அவசியம் வந்து விட்டது.

''கவலைப்படாதீர்கள், சித்தப்பா! நானே நடந்ததையெல்லாம் மறந்து விட்டேன். நீங்கள் எதற்காக வருத்தப் படுகிறீர்கள்?''

''இதோ பார்!'' என்று ஆவேசம் வந்தவர் போல் அவன் தோள்களைப் பற்றிக் குலுக்கினார் குமரவேல். ''இது வரையிலே எனக்குச் செல்வரத்தினம் ஒருத்தன்தான் சொந்தப் பிள்ளைன்னு நினைச்சிருந்தேன். இன்னையிலேயிருந்து எனக்கு இரண்டு பிள்ளைகள்! இனிமேல்



எனக்கு அவன் வேறேயில்லே; நீ வேறேயில்லே; நான் உயிரோட இருக்கிற வரையிலே நீ வெப்பிரகாசம் உயிரோட இருக்கிறதாக நினைச்சிக்கணும். என்ன, தெரிஞ்சுதா?''

தம் கண்களைத் துடைத்துக் கொண்டார் குமரவேல். முருகையனையும் அவருடைய 'பாசக் குமுறல்' பற்றிக் கொண்டது. உற்றம் சுற்றம் என்று சொல்லிக் கொள்வதற்கு ஒருவரும் இல்லாமல் இண்டாடியவனுக்கு இப்போது நல்ல காலம் பிறந்து விட்டது என்ற ஆறுதல் ஏற்பட்டது.

எப்படித் துன்பம் என்பது தனியாக வராமல் துணை பிடித்துக் கொண்டு வருமோ அப்படித்தான் இன்பமும் துணையோடு வரும் போலும்! ஒரு வாரத்துக்கு முன்பு வரையில் அவன் இருந்த நிலைமை எண்ணிப் பார்த்தான் முருகையன். அதை யெல்லாம் விட்டு, சித்திராவின் அழைப்பின் பேரில் அவன் வீட்டுக்கு வந்தவுடன், அந்த வீட்டில் உள்ளவர்கள் அவனிடம் எவ்வளவு அன்பு செலுத்தினார்கள்? அந்த அன்பு போதாதென்று, நேற்று வரையில் அவன் யாரைப் பகைவர் என்று நினைத்தானோ, அவரே இன்று தாங்க முடியாத அன்பைப் பொழிகிறாரே!

பாவம்! இதே அன்பை முனியாண்டியின் குடிசையில் அவன் இருந்திருந்தால் அவர் பொழிந்திருப்பாரா என்று முருகையன் நினைத்துப் பார்க்கவில்லை. அவரது அன்பு, பாசம், பற்றுதல், அன்பு, மதிப்பு, உறவெல்லாம் பணத்துக்காகத்தான் என்பதை அவன் என்ன கண்டான்?

''முருகையா! நீ என்னோட மகன்றெது உறுதியாயிடுச்சு. இனிமே நீ நான் சொன்னபடி தான் கேட்கணும். பேசாமல் நீ நாளைக்கே புறப்பட்டு என்னோட பெரிய பாளையத்துக்கு வந்திடு!''

அவருடைய அன்புக் கட்டளை மட்டும் முருகையனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ''சித்தப்பா! வந்து...'' என்று தயங்கினான்.

''நான் எல்லாம் முடிவு பண்ணிட்டேன்! நீ அங்கே வந்து விட்டோட இருந்து என்னோட வேலைகளைக் கவனிக்க வேண்டியது. நாகம்மா இருக்காளே, அவ பெற்ற தாயினும் உற்ற தாயாக இருந்து உன்னைப் பார்த்துக்குவா. எனக்கும் வயசாயிடுச்சு; செல்வரத்தினமும் உத்தியோகம் பார்க்கிறான்; இவ்வளவு சொத்தையும் தொழிலையும் வைச்சுக் கிட்டு நான் தனியா என்ன செய்யப் போறேன்?''

தர்ம சங்கடமாகத் தோன்றியது முருகையனுக்கு. எல்லோரும் இருந்தாலும் அவனுக்குச் சித்திராவை விட்டுப் பிரிய மனமில்லை. பெரிய மனிதரிடப்

வாதாட வேண்டாமென்று மௌனமாக இருந்தான்.

''என்கிட்டே உனக்கு நம்பிக்கை இல்லையா முருகையா?'' என்று கேட்டார் குமரவேல். ''இதோ பார், நாளைக்கே வேணும்னு நான் உன்னோட அப்பாகிட்டே விருந்து வாங்கிக் கிட்ட அவ்வளவு நிலங்களையும் உன் பேரிலேயே எழுதி வச்சிடறேன். நீ இனிமே இருக்கப் போற வீடும் உன்னோட வீடுதான்.- இப்படியாவது உனக்கு என் கிட்டே நம்பிக்கை ஏற்பட்டால் போதும்!''

அவரிடம் நம்பிக்கை ஏற்படுவது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் முருகையனுக்குத் தன்னுடைய கண்களையும் காதுகளையுமே நம்ப முடியவில்லை. நம்பாமல் எப்படி இருப்பது? ஒரே ஒரு கணம் தடுமாறி விட்டு, பிறகு பாகாய் உருகிப் போனான் முருகையன்.

''வேண்டாம் சித்தப்பா! நீங்கள் இவ்வளவு தூரம் வாயால் சொன்னதே போதும். நீங்கள் எனக்கு ஒன்றுமே செய்ய வேண்டாம்.''

''நீ வேண்டாம்னு சொன்னால், அதுக்காக நான் என் கடமையை மறக்கலாமா? எப்ப நான் உன்னை என் பிள்ளைன்னு வாயாலே சொல்லிட்டேனோ, அதன்படி செய்கையிலே நடந்து காட்ட வேண்டாம்?''

முருகையனுடைய உள்ளத்தில் நன்றிப் பெருக்கு ஊற்றெடுத்துப் பொங்கியது. இவ்வளவையும் காதால் கேட்பதற்குத் தன்னுடைய தகப்பனார் உயிருடன் இல்லையே என்ற ஒரு குறைதான் அவனுக்கு. 'எடுத்துக் கொண்டதையெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன் என்கிறாரே! என்ன பெருந்தன்மை இவருக்கு!....

முருகையன் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கா விட்டாலும் கூட, அவருடைய மனமாற்றம் என்றே அதை நம்பினான். சாட்சி சம்பந்தம் வைத்து, முத்திரைப் பத்திரங்களில் எழுதிய எழுத்துக்களையே காற்றில் பறக்க விடும் குமரவேல், வாய்ச் சொல்லுக்கு எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார் என்பதை அவன் அறியாதவன். – ஆசை வார்த்தைகள் கூறி மோசம் செய்வதையே அவர் முதலில்லாத ஒரு பெருந் தொழிலாகச் செய்து வந்ததை அவன் கண்டானா என்ன?

ஆனால் இவ்வளவையும் மற்றொருவர் மறைவில் நின்று கேட்டுக் கொண்டு தான் இருந்தார். சித்திராவின் அண்ணன் மாணிக்கம் அறைக்கு வெளியில் நின்றபடியே குமரவேலின் பேச்சுக்களை ஒன்று விடாமல் ரசித்துக் கொண்டார். 'பையனுக்கு வலை போட்டுத் தம்மிடம் இழுக்க விரும்புகிறாரே! முருகையனை விடக் கூடாது: விட்டு விடக் கூடாது! இவன் நம்மிடந்தான் இருக்கவேண்டும்!'

பொருள்களின் மதிப்பும் சரி, மனிதர்களின் மதிப்பும் சரி, அவற்றின் மீது மற்றவர்கள் மதிப்புக் காட்டும் போது தான் அதிகமாகிறது. வியாபார ஏலம் என்ற மாணிக்கத்தின் விலை மதிப்புத் தராசில் முருகையனுடைய கனம் இப்போது பெருகிக் கொண்டே வந்தது.

'மேலும் என்ன பேச்சு நடக்கிறது?' என்று உற்றுக் கேட்டார்.

''சித்தப்பா! உங்களுடைய அன்பு எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இருந்தாலும் நான் இப்போதைக்கு இந்த இடத்திலேயே இருக்கிறேன். சித்திராவும் அத்தானும் என்னை அப்படியே வற்புறுத்துகிறார்கள்'' என்றான் முருகையன்.

குமரவேல் இதனால் மனம் தளர்ந்து விடவில்லை. சுற்று முற்றும் பார்த்து விட்டு, ''நான் உனக்கு நல்லதுக்குத் தான் சொல்றேன்: நீ இங்கே இருக்கிறது நல்லாயில்லை!'' என்றார். ''நம்முடைய மதிப்பென்ன? மரியாதை என்ன? பெரியபாளையத்துக் குடும்பத்துப் பிள்ளையான நீ இங்கே வந்து மாமன் மைத்துனன் வீட்டில் சம்பளத்துக்கு வேலை பார்க்கலாமா? மரியாதை குறைஞ்சு போயிடும் முருகையா! இவங்க உன்னை மதிக்க மாட்டாங்க.''

ஒருவகையில் அவர் பேச்சு நியாயம் என்றே தோன்றியது முருகையனுக்கு. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என் பார்களே, அது போல் இங்கேயும் நடந்து விட்டால்?

அவன் பதிலளிக்காமல் யோசனை செய்வதைக் கண்டவுடன், மறைந்து நின்ற மாணிக்கத்துக்கு வேர்த்துக் கொட்டியது. மனிதன் எங்கே மாறி விடுவானோ என்ற பதற்றத்துடன் பரபரப்போடு அறைக்குள் நுழைந்தார். எதுவுமே தெரியாதவர் போல் குமரவேலை வரவேற்றார். முருகையனைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினார்.

''மாப்பிள்ளையை எங்க வீட்டிலேயே வச்சுக்கறதுன்னு தீர்மானம் பண்ணிட்டோம்! பழைய காலத்துச் சம்பிரதாயத்திலே எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இது அவரோட சொந்த வீடு; நம்ப நடத்தப் போறது அவரது சொந்தத் தொழில்; என்ன மாப்பிள்ளே?''

''ஆமாம், சித்தப்பா! நான் இங்கேயே இருந்து விடுகிறேன்'' என்று குமரவேலிடம் கூறினான் முருகையன்.

குமரவேலின் முகத்தில் ஈ ஆடவில்லை. அதைக் கவனிக்காதவர் போல் கவனித்துக் கொண்டார் மாணிக்கம். விஷயம் தமக்குச் சாதகமாக முடியவில்லை யென்பதைக் கண்டவுடன் அதைச் சிறிதும் பொருட்படுத்தாதவர்


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122, கன்ஸராசால், பம்பாய்-2.

போல், மறுகணமே மாணிக்கத்துடன் குமரவேல் கலகலப்பாகப் பழகத் தொடங்கினார். தாம் நிறைவேற்றியுள்ள வேலைகளை அவரிடம் விவரித்தார்.

அன்றைக்கு மாலையில் மாணிக்கம் தன் தாயார், மனைவி, தாத்தா முதலியவர்களிடம் பேசும்போது, ''முருகையனை நம்ப நல்லா வைச்சுக்கிறது நமக்குத்தான் நல்லது; இல்லேன்னு அவனைக் குமரவேல் மெதுவாக இழுத்துக்கிட்டுப் போயிடுவார்'' என்று எச்சரிக்கை செய்து வைத்தார்.

''உங்க தங்கச்சி சித்திரா இங்கே இருக்கிறப்போ அவர் எங்கேயும் போயிட மாட்டார்; பயப்படாதீங்க!'' என்றாள் அவர் மனைவி. எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள்.

ஆனால் குமரவேல் அந்த விஷயத்தை அவ்வளவோடு விட்டுவிட விரும்பவில்லை. பிற்பகலுக்குள் தம்முடைய அலுவல்களை எல்லாம் முடித்துக் கொண்டு, மகன் செல்வரத்தினத்தைப் பார்ப்பதற்காக அவசரமாய்க் கிளம்பி விட்டார்.

அத்தியாயம் பதினாறு

புதிய தலைமுறை

தமிழ் நாட்டுக் கிராமம் ஒன்றில் புதிதாகக் கட்டடம் ஒன்று எழும்பிக் கொண்டிருந்தது. ஊருக்குப் பொதுவாகப் பள்ளிக்கூடம் கட்டத் தொடங்கியிருந்தார்கள். அந்தப் பள்ளிக்கூடம் எழும்பிய விதமே ஒரு தனிக் கதை.

அந்தக் கிராமத்தில் குடியிருந்தவர்களில் பலர் வெளிநாடுகளில் வாணிபம் செய்து பொருள் திரட்டியவர்கள். எத்தனையோ ஏழைக் கிராமங்களைப் போலல்லாது அது ஒரு பணக்காரக் கிராமமாக விளங்கியது. ஒவ்வொருவரும் பெரிய பெரிய வீடுகளைக் கட்டிப் போட்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்குப் பல்லாயிரக் கணக்கில் செலவு செய்து கூட்டம் சேர்த்தார்கள். சம்பாதிப்பதில் எப்படி அவர்களுக்குள் போட்டா போட்டி உண்டோ அப்படியே செலவு செய்வதிலும் போட்டாபோட்டி உண்டு.

இத்தகைய பெரிய மனிதர்கள் குடியிருந்த அந்த ஊரில், ஊருக்குப் பொதுவான பள்ளிக்கூடம் மட்டிலும் வெகு காலமாகக் கூரைக் குடிசையாகவே இருந்தது. கூரையை அடிக்கடி பிரித்து வேய்வதற்கும் வழியில்லாமல், சமயங்களில் மழைக் காலத்தில் அது தெப்பமாகவும் மாறும். வெயில் காலத்தில் சூரியன் அங்கே பாடம் படிப்பதற்குத் தப்பாமல் வந்து செல்லும். ஆடி மாதக் காற்றிலோ ஆசிரியர்கள் தலைகளிலும் மாணவ மாணவிகள் தலைகளிலும் கூரைத் துகள் நீக்கமற நிறைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வளவுக்கும் அந்த ஊருக்குள் எத்தனை எத்தனையோ செலவுகள் நடந்து கொண்டுதானிருந்தன. புதிய புதிய கட்டடங்கள் எழும்பிக் கொண்டுதானிருந்தன. ஆனால் யாருக்குமே பள்ளிக்கூடத்தின் மீது மட்டும் இரக்கம் பிறக்கவில்லை.

பள்ளி ஆசிரியர்கள் ஒன்றுகூடி, 'பெற்றோர் தினம்' என்று ஒரு நாளில் தங்களுடைய ஓலக் குரலை எழுப்பிப் பார்த்தார்கள். வசதி படைத்த ஒவ்வொருவரும் ஓரளவு உதவி செய்தால் நல்ல இடத்தில் பள்ளிக்கூடத்தை நடத்த முடியும் என்றார்கள். ஆனால் தகப்பன்மார்கள் ஒவ்வொருவரும், ''என் பிள்ளைகள் மாத்திரந்தானா படிக்கிறார்கள்?'' என்ற கேள்வியைக் கேட்டுவிட்டுப் பேசாமல் எழுந்து சென்றார்கள்.

வள்ளுவர் பிறந்த தமிழ் நாட்டுப் பண்டைப் பள்ளியில் ஏடுகளில் படித்தார்கள் குழந்தைகள். 'அவர் ஏன் இந்த நாட்டில் வந்து பிறக்க வேண்டும்?' என்ற காரணத்தை ஊருக்குள் நடந்த நிகழ்ச்சிகள் அவர்களுக்கு அறிவுறுத்தின. மாளிகையில் உலவும் குழந்தைகள் கூரைக் குடிசையில் படிக்கச் சென்றபோது, 'படிப்பு என்பது ஏழைகள் மட்டிலும் செய்யக்கூடிய இழிவான காரியம் போலிருக்கிறது' என்று நினைத்தார்கள்.

இந்த நிலையில்தான் ஒரு சமயம் பெரிய புயலும் மழையும் ஒன்றாக வந்து, பள்ளிக் கூடத்தையே இருந்த இடம் தெரியாமல் அடித்துக் கொண்டு போய் விட்டது. அதனால் தொடர்ந்து பள்ளிக் கூடத்தையே நடத்த முடியவில்லை. சத்திரம் போலிருந்த வீடுகளில் இடம் கேட்டுப் பார்த்தார்கள் ஆசிரியர்கள். 'இவர் வீட்டைக் கேட்கலாமே?' என்று அவர் யோசனை கூறினார். 'அவர் வீட்டைக் கேட்கலாமே?' என்று இவர் யோசனை கூறினார். கடைசியில் இவரோ அவரோ, எவரோ இடம் கொடுக்கவில்லை. குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்!

'காருண்யம் மிகுந்த கவர்ன்மெண்டாருக்கு' மனுக்களை எழுதிப் போட்டார்கள் சிலர். மனுக்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நாட்களுக்கு,

உறங்கி விட்டுப் பிறகு விழித்துக் கொள்ளத் தொடங்கின. அதிகாரிகள் வந்து பார்த்தார்கள்; விசாரித்தார்கள்; திரும்பிப் போனார்கள். எப்படியோ ஒரு வழியாக நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டார்கள்.

அந்த ஊர்ப் பிரமுகர் ஒருவர் வெள்ளைக்கார ஆட்சிக்கு மிகவும் வேண்டியவர். கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும் காண்ட்ராக்டர் அவர். அரசாங்கம் பொதுச் செலவில் அந்தப் பள்ளியைக் கட்ட முடிவு செய்து விட்டது என்று தெரிந்தவுடன், அவரே முன்னோடியாக நின்று அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அதுவரை அலட்சியமாக இருந்த அவருக்குத் திடீரென்று ஊர்ப் பொது நன்மையில் பாசம் பிறந்து விட்டது!

குமரவேலின் குமாரன் செல்வரத்தினத்தின் மேற்பார்வையிலிருந்த பல கட்டடங்களில் அந்தப் பள்ளிக்கூடமும் ஒன்று. அவனுக்கு முன்னால் வேலை பார்த்தவர் வயதாகி உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டதால், அவனுக்கு அங்கே வேலை கிடைத்தது. தன் வேலையைத் தன் சொந்த நலனை விடப் பெரிதாக நினைத்து உழைத்துவந்தான் அவன்.

அலுவலகத்தின் நிர்வாகத்தில் எழுத்து வேலைகளைக் கவனிப்பதும், அதோடு கட்டட வேலைகள் நடக்கும் இடங்களுக்கு நேரில் சென்று மேற்பார்வை யிடுவதும் அவனுடைய கடமைகள். அந்தக் கடமைகள் ஓரளவுக்கு அவன் உடல்நலனைக் கூடப் பாதித்து விட்டன. என்றாலும் அவனுக்குத் தன் வேலையில் உற்சாகம் இருந்தது. 'ஆக்கத் துறையில் நாட்டு மக்களுக்குப் பணி செய்கிறோம்' என்ற பெருமை அவனிடம் உண்மையாகவே குடி கொண்டிருந்தது. அந்தப் பெருமை நாட்டுக்கு விடுதலை கிடைத்தவுடன் இரு மடங்காகப் பெருகியது செல்வரத்தினத்துக்கு.

'இனி என் போன்றவர்களுக்குத் தான் அதிகமான பொறுப்புக்களும் கடமைகளும் பெருகும். புதிய புதிய சாலைகளையும் சோலைகளையும் பாலங்களையும் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். புதியபுதிய கட்டடங்களை எழுப்பி மக்களுக்குப் புதுவாழ்வு தரவேண்டியவன் நான். எனக்குக் கடமைகளும் அதிகமாகும்; உத்தியோகமும் உயரும்' என்று எண்ணி மனம் பூரித்தான் அவன்.

செல்வரத்தினம் காரில் வந்து இறங்கி, பள்ளிக்கூடக் கட்டட வேலைகளைச் சுற்றிப் பார்வையிட்டுக்கொண்டு வந்தான். அவனைக் கண்ட பிறகு திடீரென்று அங்கு நடந்த வேலைகளில் சுறுசுறுப்புத் தென்பட்டது. அது வரையில், கொத்து வேலை பார்ப்பவர்கள், சித்து வேலை பார்ப்பவர்கள் கூட ஏதோ கடனுக்கு வேலை செய்தவர்கள் போலத்தான் செய்து கொண்டிருந்தார்கள். தூரத்தில் நின்று அவன் பார்த்த காட்சிக்கும், அருகில் வந்து கண்ட காட்சிக்கும் வித்தியாசம் தெரிந்தது.

உழைப்பில் ஏதோ சோர்வு மனப்பான்மை, உற்சாகமின்மை, அலட்சிய மனோபாவம் இவ்வளவையும் கண்டான் செல்வரத்தினம். கோவிலுக்கு ஒப்பான தோர் அறிவுக் கோயிலை எழுப்பும் பணியிலா இவ்வளவு சோர்வு மனப்பான்மை?

அருகில் சென்று ஒவ்வோர் இடமாகக் கவனித்தான். மேற்பார்வையிடுபவர்களைக் கேள்விகள் கேட்டான். வேலை செய்பவர்களிடம் விவரம் விசாரித்தான். கணத்துக்குக் கணம் அவன் முகம் கோபத்தால் சிவந்து கொண்டே வந்தது. இதற்குள் மிகவும் பரபரப்போடு அங்கு வந்து சேர்ந்தார் காண்ட்ராக்டர் மன்னார்சாமி.

"சொல்லாமல் திடீர்னு வந்திருக்கிறீங்களே? வாங்க, வெயில்லே நிற்காமல் நம்ப வீட்டுக்குப் போகலாம்!" என்று வரவேற்றார் அவர்.

செல்வரத்தினம் பதில் அளிக்கவில்லை. அவன் கோபம் அதிகமாகியது.

"ஐயா! இத்தனை பேர் பெரிய மனிதர்கள் இங்கே இருந்தும் ஒரு பள்ளிக்கூடம் கட்ட முடியவில்லை உங்களால். பொதுப் பணத்தில் கட்டும் கட்டடத்தையாவது ஒழுங்காய்க் கட்ட வேண்டாமா?" என்று இரைந்தான்.

"என்னங்க இது?" என்று பதறினார் மன்னார்சாமி.

"உங்களுக்குச் சொந்த வீடு கட்டினால் இப்படித்தான் கட்டிக் கொள்வீர்களா? இல்லை, நீங்கள் வேறு யாருக்கும் தனிப்பட்ட மனிதருக்கு இப்படிக் கட்டிக்

கொடுத்தால், அவர்தான் இதை ஒத்துக் கொள்வாரா?''

அங்கே வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஒருவரை யொருவர் பார்த்து மெல்லச் சிரித்துக் கொண்டார்கள்... இந்தக் கேள்விகள் அவர்களுக்குப் புத்துயிர் கொடுத்தன. அவர்கள் உற்சாகத்துடன் வேலைகளைக் கவனித்தார்கள்.

மன்னார்சாமியோ எதிர்பாராத தாக்குதலுக்குள்ளானவர் போல் தலை குனிந்தார். பிறகு தொண்டையைச் சரி செய்து கொண்டு, ''எல்லாம் சரியாய்த்தானே நடக்குது? ஒன்றும் குறைவாய்ச் செய்யவில்லையே!'' என்றார்.

''நிறுத்துங்கள்! வேலையை நிறுத்துங்கள்!'' என்று கத்தினான் செல்வரத்தினம். பிறகு பாதி எழும்பிக் கொண்டிருந்த சுவர் ஒன்றைப் பிடித்துக் கையால் அசைத்தான். ''இது எவ்வளவு நாளைக்குத் தாங்கும்? குழந்தைகளோட தலையில் கட்டடம் இடிந்து விழ வேண்டும் என்று எண்ணமா? இல்லை, இப்படிக் கட்டினால்தான் சீக்கிரம் மறுபடியும் உங்களுக்கே பழுது பார்க்கும் வேலை கிடைக்குமென்று நினைக்கிறீர்களா?''

''இருபது வருஷங்களாய் நான் இந்தத்தொழில் செய்துகிட்டு வர்றேன். இது வரை யாருமே என் கிட்ட தப்புக்கண்டு பிடிச்சது கிடையாது. இதுக்கு முந்தி இருந்த ஐயா என்னோட வேலை நடக்கிற இடத்தையே திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்.—நீங்க வந்து....''

''உங்களோட வேலையை நேரில் பார்ப்பதற்குத்தான் எங்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. முன்னால் இருந்தவர் பார்க்காமல் இருந்தால், நானும் பார்க்கக் கூடாதா?''

''அதொன்றும் இல்லை. நீங்கள் இந்த உத்தியோகத்துக்குப் புதிசு. வயசும் இளம் வயசு. அதனாலே கோபமாய்ப் பேசுறீங்க!''

செல்வரத்தினம் மன்னார்சாமியை உற்றுப் பார்த்து விட்டு, ''இந்தச் சுவரை இடிக்கச் சொல்லுங்கள்!'' என்று கத்தினான்.

மன்னார்சாமி முதல் அங்கிருந்த அனைவரும் அவன் குரல் கேட்டுக் கிடுகிடுத்துப் போனார்கள். ''இடித்துத் தள்ளுங்கள்!'' என்று மீண்டும் செல்வரத்தினம் கத்தினான்.

அப்போதுதான் அவனை அவன் ஆபீசில் தேடி விட்டு, அவன் சென்ற இடம் தெரிந்து கொண்டு, அங்கு வந்து சேர்ந்தார் குமரவேல். ''செல்வரத்தினம்!'' என்று அதட்டினார் அவர்.

''அப்பா! இது நான் வேலை பார்க்கும் இடம். பேச வேண்டியதை மெதுவாய் வீட்டுக்குப் போய்ப் பேசுவோம்'' என்றான் செல்வரத்தினம். (தொடரும்)



மலை ஏறுவதற்கு முன்னால் ஐந்து ரூபாய் நோட்டைச் சில்லறையாக மாற்றிக் கைக் குட்டையில் கட்டிக் கொண்டேன். ஒரு ரூபாய் நாணயம், அரை ரூபாய் நாணயம் ஒன்று, இரண்டு கால்ரூபாய்கள், மீதி மூன்று ரூபாய்க்கும் பத்து, ஐந்து, இரண்டு, ஒரு காசுச் சில்லறைகள். கைகொள்ளாமல் வழிந்த சில்லறையை உள்ளங் கையை அகற்றி நடுவில் குவித்துக் கொண்டு திரும்பிய போது என் நோக்கத்துக்கு முதற் பயன் கிட்டிவிட்டது. நாலைந்து பேர்கள் நான் சில்லறை மாற்றுவதைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும். "ஐயா, ஐயா, சாமி... சாமி..." என்று லைவை அழைப்புக்களோடு என்னைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். எல்லாரையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தேன். கண்கள் குழியில் ஒடுங்கக் கழுத்துப் பட்டை எலும்புகள் கூடாரம் போட்டது போல் உயர்ந்து நிற்க இரண்டு பேர். ஐந்து காசு நாணயங்கள் இரண்டைப் பொறுக்கி ஆளுக்கு ஒன்றாகப் போட்டேன்.

"சாமி...சாமி.... எனக்குச் சாமி. சாப்பிட்டு இரண்டு நாளாவுது சாமி. புண்ணியமுண்டு சாமி. மீதி இரண்டு பேரும் மேலே இடித்து விடுவது போலக் கையை நீட்டினார்கள். அவர்களைப் பார்த்தால் இரண்டு நாட்கள் சாப்பிடாதவர்களாகவே தோன்றவில்லை எனக்கு. ஒருவன் மட்டும் கொஞ்சம் பரிதாபத்துக்குரியவனாகத் தோற்றமளித்தான். அவனுக்கு இரண்டு காசுகள் போட்டேன். இன்னொருவன் சவுக்காரம் போட்டுத் துவைத்த வேஷ்டி கட்டிக் கொண்டிருந்தான். ஆளும் திடமாகத்தான் இருந்தான். முதலில்லாத வியாபாரம்தானே என்று வந்து விட்டான் போலிருக்கிறது! நான் கொடுக்க விரும்பப் படாவிட்டால், 'ஆளு நல்லாத் தானே இருக்கே. எங்கேயாவது வேலை செய்ய பொழையேன்' என்றெல்லாம் யோசனை தர்மம் செய்வதே இல்லை. "போப்பா, உனக்குக் கொடுக்க முடியாது" என்று ஒரே வார்த்தையில் சொல்லி விட்டு மலையடிவாரத்தை நோக்கி நடந்தேன். அவன் கொஞ்சதூரம் பின்னாலேயே கத்திக் கொண்டு வந்து விட்டு என் உறுதியைக் கண்டு முணுமுணுத்துக் கொண்டே திரும்பிப் போய் விட்டான்.

சாப்பிட்டவன், பட்டினிக்காரன், நோயாளி, வியாதி இல்லாதவன் எல்லாருக்குமே கையில் காசு இருக்கிறது என்று போட்டு விட்டால் தர்மத்துக்கு என்ன பயன்? தர்மம் பலன் கருதிச் செய்யக் கூடாது என்றாலும் பாத்திரமறிந்து செய்யாத தர்மத்துக்குப் பயன் இல்லை என்று அபிப்பிராயப்படுகிறவன் நான்.

மலையடிவாரத்துக்கு வந்து முதற்படியில் காலை வைத்து விட்டேன். கோயிலை அடையக் கிட்டத்தட்ட எழுநூறு படிகள் ஏறியாக வேண்டும். பங்களாப் படிகளில் இரண்டு பக்கங்களிலும் குரோட்டன்ஸ் செடிகள் வைத்திருப்பது போல் இந்த எழுநூறு படிகளிலும் இரண்டு பக்கங்களிலும் பிச்சைக்காரர்கள்-கார்த்திகை மாதத்துக் கடைசி ஞாயிற்றுக் கிழமைத் திருவிழாவுக்கு வந்திருப்பவர்களின் தர்ம சிந்தனையில் நம்பிக்கை வைத்து வந்திருப்பவர்கள்-உட்கார்ந்திருந்தனர். வறுமை நோய் முதலிய பல காரணங்கள் இரப்பு என்ற ஒரே செயலுக்கு அனைவரையும் உட்படுத்தி விருக்கும் நீல படிகளுக்கு எல்லை கட்டியிருப்பது போல் இரு பக்கங்களிலும் விதம் வித



சில்லறை தர்மம்

என். மகாலிங்கம்

மான உருவங்களில் எழுதப்பட்டிருப்பதைப் பார்வையால் மிதித்துக் கொண்டுதான் விழாக் கூட்டம் மலை மீது ஏறியாக வேண்டும். கடல் நீரை இறைப்பது போல் அந்த வறுமைக்கும் நோய்க்கும் காசுகளைத் தானம் செய்து கொண்டு போகிறவர்கள் அந்தக் கூட்டத்தில் என்னைப் போல் எத்தனையோ பேர். நான் வருஷா வருஷம் வருகிறவன். குடும்பச் செலவுகள் எத்தனை இருந்தாலும் இன்றைக்கென்று எப்படியாவது மிச்சப்படுத்தி ஐந்து ரூபாயைத் தனியாக எடுத்து வைத்து விடுவேன். நான் செலவழிக்கும் தொகையைவிட அதிக மதிப்புள்ள மனச் சந்துஷ்டியை விட்டு விட நான் என்ன பைத்தியமா? மலை ஏறி முடித்ததும் காலியாகிவிட்ட கையைப் பார்த்து நான் விடும் பெருமூச்சு மனத்தை நிறைத்து விட்ட நிம்மதி என்ற உணர்வால் இடம் பெயர்க்கப்பட்டதாகத்தான் இருக்கும். இது எனக்குப் பத்து வருஷங்களுக்கு, பத்துக் தடவைகளுக்கு மேற்பட்ட அனுபவம்.

''தள்ளாத வயசு சாமி. தர்மம் செய்யுங்க சாமி!'' பத்துப் படிகளுக்கு மேல் ஏறி வந்திருப்பேன். குரல் ஈர்த்தது. உரியவன் உண்மையிலேயே கிழவன்தான். காலத்தோடு போய் விட்ட இளமைக்குப் பதிலாக ஊன்றுகோல் ஒன்று அவனைக் கைகொடுத்துத் தாங்கிக் கொண்டு நின்றது. வலது கையில் ஒரு கப்பரை. கடற்கரை மணலில் ஈரத் துணியை உலர்த்தியதைப் போல் உடலெல்லாம் எலும்பைத் தோல் போர்த்திய மேடு பள்ளங்கள். கிழவனைப் பார்த்துக் கொண்டே சில்லறைக் குவியலிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்தேன். கையில் வந்தது இரண்டு கால் ரூபாய் நாணயங்களுள் ஒன்று. கிழவனுக்கு இந்த வயதிலும் கூடக் கண் நன்றாகத் தெரியும் போல் இருக்கிறது! ஆவலோடு கையை நீட்டினான். நான் போட்டு விடவில்லை. கால் ரூபாயைப் பெறுவதற்குப் பெரிதாக இவனுக்கு என்ன தகுதி இருக்கிறது? மலையடிவாரத்தில் என்னிடமிருந்து ஐந்து காசு பெற்றவர்களைப் போலத்தான் இவனும் இருந்தான். புற நோய் எதுவும் கிடையாது. பட்டினி கிடந்தவனாகவும் தெரியவில்லை. காலத்தோடு இயற்கையாக வரும் முதுமை என்ற நோயும் இளமை இல்லாத வறுமையும் என் கணக்குப்படி கால் ரூபாய் பெறத் தகுதியுடையதாகாது. வயதானவன் என்பதற்காக ஓர் ஐந்து காசு வேண்டுமானாலும் கூடப் போடலாம். இந்தக் கால் ரூபாயை வேறு எவனாவது ஒருவனைப் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

கால் ரூபாயைக் குவியலோடு சேர்த்துக் கொண்டு பத்துக் காசு நாணயம் ஒன்றை எடுத்துக் கிழவனின் கப்பரையில் போட்டு விட்டு மேலே நடந்தேன். அடுத்து இருநூறு படிகள் ஏறும் வரை பத்துக் காசுக்கு மேல் மதிப்புள்ள நாணயம் எதையும் தர்மம் செய்யச் சந்தர்ப்பம் வரவில்லை. எனக்கு என்னவோ போல் இருந்தது. எந்தக் காரணத்தைக் கொண்டும் கைக் காசு மிகுந்துவிடக் கூடாது. கோபுர வாயிலை மிதிப்பதற்கு முன்னால் எல்லாவற்றையும் செலவழித்துவிட வேண்டும்!

மேலும் இருபது படிகள் ஏறியபிறகு ஒரு மண்டபம். அது வரை மூச்சைப் பிடித்துக் கொண்டு ஏறி வருபவர்கள் தங்கிக் களைப்பாறுவதற்காக யாரோ பணம் படைத்த தர்மவான் கட்டியிருந்தார். உபயதாரரின் பெயர் பொறிக்கப்பட்ட கறுப்புச் சலவைக் கல் கூட மண்டபத்தின் ஒரு பக்கத்தில் பதிக்கப்பட்டிருந்தது. அதை ஒட்டினாற் போல் ஒருவன் எதிரே பழுப்பேறிய துணியை விரித்து விட்டு உட்கார்ந்திருந்தான். நெருங்கியபிறகுதான் அவன் குருடன் என்பது தெரிந்தது. கண்ணிருப்பவர்கள்கூட என் மனத்தைத் தொடுவது போல் அப்படிப் பார்த்தது கிடையாது. அவன் எங்கே பார்த்தாலும் - அவனால் எங்கேயும் பார்க்க முடியாதுதான்.-என்னையே என் மனத்தையே ஊடுருவிப் பார்ப்பது போல் இருந்தது எனக்கு. இளவயது தான். இந்த வயதுக்கு எவ்வளவு மிடுக்கு, துடிப்பு, பலம் இருக்க



வேண்டும்? எல்லாவற்றையும் பறி கொண்டு விட்ட குறையின் பெருமையை எனக்குத் தெரிக செய்வது போல் எதிரே கிடந்த துணியில் பலவித மதிப்புள்ள நாணயங்கள் நிறையக் கிடந்தன. இவன் கால் ரூபாய் பெறத் தகுதி உள்ளவன்தான். நாணயத்தைப் பொறுக்கி எடுத்துப் போட்டு விட்டேன்.

நானூறு படிகளுக்கு மேல் கழிந்து விட்டன. வருவதும் போவதுமாக அடிவாரத்திலிருந்து உச்சி வரை கூட்டம். ஒரு சிலர் முன்னே செல்லுபவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு அவசரம் அவசரமாக ஏறிக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஓர் அவசரமும் இல்லை. கையிலிருக்கும் சில்லறைக் காசுகளைத் தகுதியறிந்து கொடுக்க வேண்டிய பொறுப்பைக் கழிப்பதுதான் எனக்கு முக்கியம். சுவாமி தரிசனம் இரண்டாவது பக்ஷம்தான். மூன்று ரூபாய் சில்லறையில் இரண்டு ரூபாய்களுக்கு மேல் போட்டாகி விட்டது. மீதியைச் செலவழிப்பதிலும் சிரமம் ஒன்றுமில்லை. பெரிய நாணயங்கள் மூன்றையும்தான் ஆள் பார்த்துப் போட வேண்டும்.

இன்னொரு மண்டபம் குறுக்கிட்டது. சுவரை ஒட்டினாற் போல் பத்துப் பன்னிரண்டு பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எல்லாருமே ஒரே வகைப்பட்ட பிச்சைக்காரர்கள். கையில் இருந்த நசுங்கிய அலுமினியக் கிண்ணங்களையும் தகரக் குவளைகளையும் அவைகளில் கிடக்கும் பைசாக் காசுகளோடு எதிரே நடமாடுபவர்களை நோக்கி நீட்டிக் குலுக்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் மட்டும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தர்மம் செய்பவர்களை வாழ்த்துவதும் கொடுக்காதவர்களைச் சபிப்பதுமாக இருந்தான். இடை இடையே தன் நிலை பற்றிய விமரிசனம் வேறு. வாழவேண்டும் என்ற ஆசையும் குறைபாட்டைத் தவிர்க்க முடியாத நிலையும் சேர்ந்து தன் குறையையே தர்மம் பெறும் விளம்பரத்துக்காக அவனை உபயோகிக்கச் செய்திருந்தன. சில கணங்களுக்கு மேல் அவனை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. மனத்தில் இரக்க உணர்வு இருந்தாலும் அவனையே முகத்தைச் சுளிக்காமல் பார்த்துக் கொண்டிருக்குமளவுக்கு மனம் இன்னும் பக்குவப்படவில்லை. இதைவிடப் பெரிய நோய் இருக்க முடியாது. இதைவிட நோயின் முற்றிய நிலை இருக்க முடியாது. அரை ரூபாய் பெற இதைவிடத் தகுதியுள்ள இடம் வேறு எப்படி இருக்க முடியும்? நாணயத்தை எடுத்து அவனுக்குப் போட்டுவிட்டு மீதிப் பேர்களுக்குச் சில்லறைக் காசுகளைப் போட்டு விட்டு நடந்தேன்.

கூடவே இன்னொரு கால் ரூபாய்ச் சுமையைக் குறைத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. முப்பது வயதுக்கு மேல் இருக்கும். ஒரு பெண்மணி குஞ்சும் குளுவானுமாக ஆறு குழந்தைகள் புடைசூழ்ந்து பாதி வழியை அடைத்துக் கொண்டிருக்க, அலுமினியப் பாத்திரம் ஒன்றை ஏந்திப் பிடித்தவாறு அமர்ந்திருந்தாள். கைக்குழந்தை மட்டும் கழுத்துவரை போர்த்தப்பட்டு எதிரே கிடந்தது.

"பச்சைப் புள்ளை வெய்யிலே கிடந்து வாடறதைப் பார்க்காத மாதிரி போறீங்களே.... பாவோடை தர்மம் போடுங்க. அடுத்த வருஷம் ஆம்படையாப் புள்ளையாக பிறக்கும்...." தாயார்க்காரியின் குரலைக் கேட்டுப் பார்த்த போதுதான் தட்டில் இருந்த அலுமினியப் பாவோடை என் பிரத்தியேகக் கவனத்துக்கு உள்ளாகியது. உடுத்தியிருக்கும் புடவை ரவிக்கையோடு அடிவாரத்தில் இருக்கும் குளத்துப் பாசி நீரில் முழுகி விட்டு ஈரம் சொட்டச் சொட்ட. பின்னே வரம் வேண்டி மலை ஏறும் பெண்களுக்குக் கிடைக்காத பேறு இந்தப் பிச்சைக்காரிக்குக் கிட்டியிருக்கிறது என்பதுதான் இவளுடைய பெருமை. பெருமை கூடச் சுமையாகுமா?

பல வித நாணயங்களுக்கிடையே தன் வருகையை அறிவிக்க, 'டொக்' என்று ஒலியெழுப்பி விழுந்து சேர்ந்துகொண்டது என்னுடைய கால் ரூபாய் நாணயம்.

பாக்கியுள்ள சில்லறைக் காசுகளுக்குச் செலவுங்கூட வந்து விட்டது. இருபது இருபத்தைந்து பேர் அடங்கிய ஒரே கும்பலாக நின்று கொண்டிருந்த பிச்சைக்காரர்களிடம் அவற்றைப் பகிர்ந்து போட்டேன். தர்மம் செய்ய இஷ்டமிருந்தால் இடத்துக்கா பஞ்சம்? அக்ஷய பாத்திரம் அலுத்துச் சலிக்கக் கூடப் போடலாம். கேட்பவர்களுக்கெல்லாம்போட முடியாத என் முடியாமையை மறைப்பதற்காக இதை நான் சொல்லவில்லை. வாஸ்தவமாகவே அந்தக் குறை எத்தனை பெரிதாக என்னை அழுத்தி நிற்கிறது தெரியுமா?

கையைப் பார்த்தேன். மிகுந்து நின்றது ஒரு ரூபாய்! ஒற்றை நாணயம்! 'கர்ச்சீப்'பை மடித்துப் பையில் வைத்துக் கொள்ளுவதற்கு முன்னால் நாணயத்தைத் தனியாகக் கையில் எடுத்துக் கொண்டேன். இதை ஒரே ஒருவனுக்குப் போட வேண்டும் என்ற எண்ணமே என்னைச் சற்றுக் கலங்க வைத்தது. முடியுமா? முடியத்தான் வேண்டும்! நினைத்தால் இதைப் பத்துப் பேருக்காகப் பிரித்துப் போட்டுவிட்டுக் கையை உதறிக் கொண்டு போய் விடலாம். அப்படிச் செய்தால் ஒரு ரூபாய் முழுசாகப் பெறத் தகுதியுள்ள நோயும் வறுமையும் நிறைந்த ஒருவன் புறக்கணிக்கப்பட்டு விடுவானே! அப்படிப்பட்ட ஒருவன் இருப்பானா? நிச்சயமாக இருப்பான். நிச்சயமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பியதைத்தான் மனம் அப்படிச் சொல்லிக் கொண்டதோ? திருவிழாவுக்கு வந்திருப்பவர்கள் கண்களில் படக் கூடாது என்று சுகாதார அதிகாரிகளால் ஒதுக்கப்பட்டு ஒதுப்புறமாக எங்காவது ஒரு மரத்தடியிலோ, பாறை இடுக்கிலோ இருக்கும் அவனைத் தேடிக் கண்டுபிடித்து இந்த நாணயத்தைப் போடுவதில்தான் என் திறமை இருக்கிறது! அதிலேதான் என் மனச் சந்துஷ்டியின் முழுமையும் இருக்கிறது. இது வரை செய்ததெல்லாம் சில்லறை தர்மம். இனிச் செய்ய விரும்புவதுதான் முழுமையான தர்மம். பெரிய தர்மம்.

எனக்குச் சற்றுப் பிரமிப்பாக இருந்தது. 'பத்துத் தடவைகள் போட்டிருக்கிறேனே!' என்ற நினைப்பு சற்று ஆறுதலாகவும் இருந்தது. இன்னும் மீதம் இருக்கும் இருபது படிகளைக் கடப்பதற்குள் பணத்தைச் செலவழித்தாக வேண்டும். நடையை நிறுத்தினேன். கண்கள் அலைந்து அலைந்து ஒரே ஓர் உருவத்தைத் தேடினேன். தண்ணீருக்குள் விழுந்து விட்ட எதையோ தேட முற்பட்டு வெறும்

மிகச்சிறந்தது!



வீட்டிற்கும் — ஹோட்டலுக்கும்

ப்ரூக் பாண்ட்

ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்

கையை வெளியே எடுப்பது போல் பார்வை வெறுமையாக மீண்டது. மனம் வேறு பார்வை தேடும் உருவத்தின் தகுதியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தது. இது வரை என்னுல் பல்வேறு மதிப்புள்ள காசுகள் தர்மம் பெற்றவர்கள் எல்லாம் முன்னுலே வந்து நின்றார்கள். இரண்டு காசும் கால் ரூபாயும் அரை ரூபாயும் பெற்றவர்கள் இப்படி இப்படி இருந்தால் ஒரு ரூபாய் பெறப் போகிறவன் எப்படி இருக்க வேண்டும்? திடீரென ஓர் உருவம் விடையாக எதிரே நின்றது.

என் முயற்சியில் எனக்கு ஏற்பட்ட தோல்வி என் நெஞ்சை மிதிப்பது போல் இருபது படிகளையும் மிதித்துக் கொண்டு கோபுர வாயிலுக்கு வந்து விட்டேன். மூடிக் கொண்டிருந்த வலது கையைப் பார்த்தபோது வியர்வையில் கசகசத்துக் கொண்டு ரூபாய் நாணயம் உள்ளே அப்படியே இருந்தது. இந்த நாணயம் தங்கி நின்று விட்டதால் ரூபாய் நோட்டு கூடையில் கிடந்ததைப் போல் நான்கு ரூபாய் போட்டதின் பலனும் என்னைச் சமாதானப் படுத்தச் சக்தியற்றதாகி விட்டது. பூரணத் துவத்துக்குத்தான் உயிர் உண்டோ?

மறுபடியும் மலைப்படிவாரம் வரை போய் விட்டு வந்தால் என்ன? சுவாமியைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். கேள்வி எழுந்த கணமே கால் முதல் படி இறங்கி விட்டது.

"ஸார்...!" என் தோளை யாரோ தொட்டார்கள். மேல்படி ஏறி நின்று திரும்பினேன். கௌரவமான எளிமையான உடையில் எனக்கு முன்பின் தெரியாத ஒருவர் நின்றார்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டேன்.

"நீங்கள் யாரையோ ஆவலோடு தேடுவது போல் படுகிறது. யாரை என்று தெரிந்து கொள்ளலாமா?" என்றார் அவர்.

தர்மம் செய்வதற்கு இடமில்லாமல் என் கட்டப்படும் என் நிலையை அவரிடம் விளக்க விருப்பமில்லை. அதனோடே நான் விரும்பாத என் தர்ம மனோபாவத்தின் விளம்பர நோக்கமும் கலந்து விடுமோ என்ற பயம் எனக்கு.

"ஒன்றுமில்லை; சும்மாத்தான்..."

"பரவாயில்லை. உங்கள் நடவடிக்கைகளை யெல்லாம் நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். இந்தக் காலத்தில் உங்களைப் போல் இவ்வளவு பெருநோக்குடையவர்களைக் காண்பது ரொம்ப அபூர்வம். அதிலும் அந்த நோக்கத்தை இடது கைக்கு மட்டுமல்ல தன் சொந்த மனத்துக்குக் கூடத் தெரியாமல் செயல்படுத்துகிறவர்கள் அதைவிட அபூர்வம்." என் மனத்தைப் பார்த்து விட்டவரைப் போல் சொன்னார் அவர். என் செயல் பெருமை என்ற பயன் கருதிச் செய்யப்படவில்லை என்றாலும் அவர் புகழ்ந்த போது என்னுல் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை.

"நீங்கள் என்னை ரொம்பப் புகழுகிறீர்கள்!" என்று நான் கூச்சத்தோடு சிரித்தேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. மனப் பூர்வமாக நான் உணர்ந்ததைத்தான் சொல்லுகிறேன். இன்னென்று. இது வரை நீங்கள் எத்தனை ரூபாய் தர்மம் செய்திருக்கிறீர்கள்?"

"நாலு ரூபாய்."

"அதில் உங்களுக்குச் சந்தோஷம்தானே?"

"ஆமாம்."

"உங்கள் நாலு ரூபாய் தர்மத்தை ஏற்ற இத்தனை பேர் நோயாளிகளாக, பிச்சைக் காரர்களாக இருக்கறதில் உங்களுக்குச் சந்தோஷம்தானே?"

நான் பதில் சொல்லவில்லை.

"இன்னும் எத்தனை ரூபாய் பாக்கியிருக்கிறது.....?" மீண்டும் கேட்டார் அவர்.

"ஒரு ரூபாய்...."

"அதை ஏன் இன்னும் போட வில்லை?"

"ஆள் கிடைக்க வில்லை."

"அதில் உங்களுக்கு வருத்தம்தானே?"

"ஆமாம்....."

"உங்கள் ஒரு ரூபாயை ஏற்பதற்காக, முதிர்ந்த நோயும் முற்றிய வறுமையும் உடையவனை ஒருவன் இல்லாததில் உங்களுக்கு வருத்தம்தானே?"

நான் பதில் சொல்லத் தயங்கினேன்.

அவர் என்னைப் பார்த்துச் சிரித்து விட்டுக் கூட்டத்துக்குள் புகுந்து மறைந்து விட்டார்.

நான் விக்கித்துப் போய் நின்றேன்.

அவர் கூறியது உண்மைதானா? என் தர்ம சிந்தனை பயன்பட வேண்டுமென்பதற்காக வறுமை, நோய் முதலிய கொடுமைகள் நிரம்பியவர்கள் இருக்க வேண்டும் என்று நான் விரும்பியது உண்மைதானா?

ஆமாம். மனம் தயவுதாட்சிண்யம் இல்லாமல் திரும்பக் கூறி விட்டது. இரக்கம் நல்லது தான். ஆனால் கனிந்த பழம் அழுகுவது போல் என் இரக்க சுபாவம் பிச்சைக்காரர்களுக்காகத் தர்மம் என்ற நிலை மாறித் தர்மத்துக்காகப் பிச்சைக்காரர்களை எதிர்பார்க்குமளவுக்கு வெறியாக எப்போது எப்படி முதிர்ந்தது? இந்த முதிர்ச்சியும் வளர்ச்சியும் நிச்சயமாக விஷந்தான். என் சொந்த மனத்துக்குக் கூடத் தெரியாமல் என்னுள் அழுகியிருந்த இயல்பின் மறு பக்கத்தைப் புரட்டிப் போட்டு விட்டு அவர் போய் விட்டார்.

பித்தனைப் போல் எத்தனை ஆவலோடு நோயாளிகளையும் பிச்சைக்காரர்களையும் தேடினேன், எதிர்பார்த்தேன். உணவு கிடைத்தால் பசி ஆறுவது போல் நான்கு ரூபாய் அளவுக்கு எனக்கு ஏதோ ஒரு நிறைவு கிட்டியது உண்மை என்றால், என் தர்மத்துக்கு இலக்கான அத்தனை பேர்களுடைய நோய்களையும் வறுமையையும் மனம் விரும்பிப் புசித்தது என்றுதானே அர்த்தம்? ஜீரணமாகாமல் எனக்குள்ளே இருக்கும் இது எத்தனை பெரிய நோய்? 'கேள் கொடுக்கப்படுவாய்' என்பது போல் நான் மனப்பூர்வமாக விரும்பி எதிர் பார்த்ததனுல்தான் அத்தனை பிணிகளும் ஏழைமையும் இருந்ததாக எனக்கு இப்போது தோன்றியது. இவையெல்லாம் இருக்கக் கூடாது என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்காதது என் மனத்தின் எத்தனை பெரிய வறுமை நிலை? இந்த நோயையும் வறுமையையும் அகற்றிக் கொண்ட என்னைவிட வேறு யாருக்கு இந்த ஒரு ரூபாய் தர்மத்தை ஏற்கத் தகுதி இருக்க முடியும்?

கையிலிருந்த ரூபாய் நாணயத்தைச் சட்டைப் பையில் போட்டுக் கொள்வதன் மூலம் எனக்கே கொடுத்துக் கொண்டு தெய்வ சன்னிதானத்தை நோக்கி நடந்தேன். என் இந் நிலையை வெளியிடும் செய்து கொள்ளும் விதத்தில் 'இரப்பவர்களே இல்லாதிருக்க வேண்டும்' என்ற வரத்தைத் தெய்வத்திடம் பிச்சை கேட்பதற்காகத்தான்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

மக்ளீன்ஸ் பற்களை

வெண்மையாக்குகிறது என்பதற்கான ஆதாரம்

1 அதை உணருங்கள

பற்களில் கறை படிந்திருக்கிறதா? அது இயற்கையான வெண்மையை மறைக்கிறது. இப்போது மக்ளீன்ஸ்கொண்டு பல் துலக்கி அது கறையை எவ்வாறு அகற்றுகிறதென்று உணருங்கள்.

2 அதை ருசியுங்கள்

நீங்கள் அனுபவிக்கும் அந்த குளுமையான ருசிக்குக் காரணம் மக்ளீன்ஸில் இருக்கும் 3 கலவைப் பொருள்களும் திறம்பட வேலை செய்வதால்தான். அவை பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கி பாதுகாக்கின்றன.

3 அதைப் பாருங்கள்

உங்கள் புன்முறுவலில் காணும் வெண்மையைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். உங்கள் பற்களை முன்பிருந்ததைவிட மக்ளீன்ஸ் பற்பசை இன்னமும் வெண்மையாக்குகிறது. நீங்களே இதைப் பரீட்சித்துப் பாருங்கள்.





வெள்ளை அல்லது குளோரோபில் சேர்ந்தது.

இன்றே மக்ளீன்ஸ் உபயோகிக்கத் தொடங்குங்கள். இப்பொழுது எளிதில் கிடைக்கிறது.

MTP/I/P/4/61-TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon